AUGUST 1943 6 Annas

353

காவேரி

REGISTRAR OF BOOKS
DEC 1943

READ The Cauveri -
IDEAL MAGAZINE FOR THE HOME

நறுமணம் வீசும்

கிட்டப்பா மார்க்

ரிஜிஸ்டர் நெ. 61

புகையிலை & சீவல்

உயர்ந்த சிவபுரிப் புகையிலையின் தயாரிப்பு. செயற்கை வஸ்துக்கள் இல்லாத இயற்கைச் சுவை, மணம், குணம் இவைகளடங்கியது.

ஒரு தரம் உபயோகித்தால் அதையே விரும்பி உபயோகிப்பீர்கள். 'கிட்டப்பா' சீவலும் அப்படியே. அப்புகையிலைக்கு இணைபிரியாத நண்பன்.

எப்பொழுதும் இவைகளையே உபயோகியுங்கள்.

சென்னை ஸிட்டிக்கும் பிரதிநிதிகளில்லாத மற்ற நகரங்களுக்கும் ஏஜண்டுகள் தேவை.

சென்னை பிராஞ்சு:—
16, ஹைரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

A.D. சுல்தான் & Co.,
கும்பகோணம்.

இந்தியக் கைத்தொழிலை நீங்கள் ஆதரியுங்கள்

குழந்தைகள் இருக்கும் வீட்டிற்கு நீங்கள் வெறுங்கையுடன் போக மாட்டீர்கள். கைக்கு எளிதாய் உங்கள் பணப்பைக்கும் எளிதாய் **வி. எஸ். & ஸன்ஸ்** பெப்பர் மெண்ட் ஒரு டின் வாங்கிக் கொண்டு போங்கள். **வி. எஸ். & ஸன்ஸ்** பெப்பர்மெண்டையே குழந்தைகள் விரும்பித் தின்னும். அக்குழந்தைகளின் மென்மொழிகளில் இப்பெப்பர்மெண்டின் இனிமையை நீங்களே கண்டு ஆனந்தப்படுவீர்கள். உயர்ந்த முறையில் கை தேர்ந்த வேலைக்காரர்களால் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

ஒரு தடவை வாங்கிப்பாருங்கள்.

தென் இந்தியா கன்பெக்ஷனரி தொழிற்சாலை

புரோப்ரைடர்கள்:— **வி. எஸ். & ஸன்ஸ்**

கும்பகோணம்.

The Southern India Confectionery Factory

Proprietors:- V. S. & Sons,

KUMBAKONAM.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 2 DEC 1943 MADRAS

218542

தி காமன் வெல்த் பாங்கு லிமிடெட்,

(ஸ்தாபிதம் 1933)

தலைமை ஆபீஸ்: பெரியதெரு, கும்பகோணம்

பிராஞ்சுகள்:—கோடவாசல், ஆடுதுரை, ஜயங்கொண்டசோழபுரம், வலங்கைமான், திருவிடமருதூர்.

கரண்டு அக்கவுண்டுகள், ஸேவிங்ஸ் பாங்கு டிபாஸிட்டுகள், பிக்ஸட் டிபாஸிட்டுகள், கால் டிபாஸிட்டுகள் முதலியவை ஏற்றுக்கொள்ளப்படும்.

அங்கீகரிக்கப்படும் ஸெக்யூரிட்டிகளின்மேல் கடனும் காஷ் கிரெடிட்டும் கொடுக்கப்படும்.

நெல், அரிசி, தானியங்கள், நூல், பீஸ்-கூட்ஸ், தங்க நகைகள், வெள்ளிக்கட்டிகள் இவைகளின்மேல் பணம் தரக்கூடும்.

மற்றும் எல்லாவிதமான பாங்கு அலுவல்களும் ஏற்றுக்கொண்டு நடத்தப்படும்,

V. K. ராஜகோபாலன்,
செக்ரடரி,

ஜவுளி தினுசுகள்

:: தேவைக்கு!

நம்பிக்கைக்கு உகந்ததாய்த் தற்கால மோஸ்தரில்
உடைக்குத் தக்க போட்டி விலையில்

புதுச் சரக்குக்கள் கிடைக்குமிடம்

M. N. நாகேந்திரம் ஸன்ஸ்

ஜரிகை பட்டு ஜவுளி வியாபாரம்.

(மலைவாசல் உள்மண்டபம்)

தெப்பக்குளம் போஸ்ட், திருச்சினுப்பள்ளி.

N.B.-உயர்ந்த பனாரிஸ் தினுசுகள் 6, 8 கெஜம் சேலைகளும் ஏராளமாய் இருக்கின்றன.

★ பொருளடக்கம் ★

சுபானு } மலர் 3 } { ஆவணி { இதழ் 1

விசித்திர வாதம்	... ...	4
ஆண்டு நிறைவு	... ...	6
கதம்பம்	... ...	8
பொழுதுபோக்கு	... தி. சே. சௌ. ராஜன்	11
கிரகப் பிரவேசம்	... ரா. ஸ்ரீ. தேசிகன்	17
அறத்திற்கும் வரம்புண்டு	... க. சந்தானம்	19
அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்	... "ராமையா"	22
காட்டுயானைகளின் தர்மயுத்தம்	... "பேய்"	25
ஷஷ்டாஷ்டகம்	... கே. சுந்தரம்மாள்	27
விடிவு	... 'கௌரி'	33
தெய்வப் பெண்	... 'ஹரிணி'	41
ஞாபகச்சின்னம்	... "ஸ்ரீரா"	46
ஆவணி அவிட்டம்	... எம். எஸ். கமலா	49
பைத்தியக்காரன்	... பாசரசு	57
அனுபமையின் காதல்	... குகப்ரியை	59

குறிப்பு:—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.

காவேரி

தென் இந்தியாவின் உயர்ந்த
மாதப் பத்திரிகை.

சந்தா விகிதம்.

	உள்நாடு	சிலோன்
வருடச் சந்தா ...	ரூ. 4 8 0	4 12 0
6 மாதம் ...	ரூ. 2 4 0	2 8 0
தனிப்பிரதி ...	ரூ. 0 6 0	40 சதம்

தபால்மூலம் தனிப்பிரதிவேண்டுவோர் தபால் செலவும் சேர்த்து அனுப்பவேண்டும்.

பிரதிநிதி இல்லாத இடங்களில் ஏஜண்டுகள் தேவை,

ஏஜன்ஸி நிபந்தனை, விளம்பரவிகிதம் முதலிய விஷயங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

S. Rangaswami,
Managing Proprietor.

காவேரி ஆபீஸ்,
பெஸண்ட் ரோடு கும்பகோணம்,

காவேரி

சுபானு மலர் 3	"சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"—பாரதியார்	ஆவணி இதழ் 1

விசித்திர வாதம்

பிரிட்டன் இந்த யுத்தத்தைச் சரிவரச் சமாளிப்பதற்காக இந்தியாவிடமிருந்து ஏராளமான கடன் வாங்கியிருக்கிறது. யுத்த ஆரம்பத்திற்கு முன்பு இந்தியா பிரிட்டனிடம் கடன்பட்டிருந்தது. அதை அநேகமாகத் திருப்பிக்கொடுத்துவிட்டதுமல்லாமல் இன்று மேலும் சுமார் 50 கோடி பவுன் கொடுத்திருக்கிறது. சாதாரண காலத்தில் இந்தியா பிரிட்டனுக்கு ஏற்றுமதி செய்யும் மூலப்பொருள்களைக்காட்டிலும் பன்மடங்கு சாமான்களைப் பிரிட்டனிடமிருந்து வாங்கிக்கொள்ளும். எனவே எப்பொழுதும் இந்நாட்டிலிருந்து பணம் பிரிட்டனுக்குப் போகவேண்டியிருந்தது. பிரிட்டன் இன்று யுத்தத்தில் ஈடுபட்டிருப்பதால் பிற நாடுகளுக்கு எதையும் ஏற்றுமதி செய்ய இயலவில்லை. ஆனால் அது இந்தியாபோன்ற நாடுகளிலிருந்து ஏராளமான சாமான்களை யுத்த நிமித்தம் வாங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் அதற்கு மிதமிஞ்சிய கடன் ஏற்பட்டுவிட்டது. யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் தேசங்களுள் பிரிட்டன்தான் பெரிய கடனாளி. அக்கடன் விபரம் பின்வருமாறு:—

இந்தியாவிடமிருந்து	பவுன்	50	கோடி
அயர் (அயர்லாந்து)	,,	12·1	,,
கானடா	,,	15·7	,,
எகிப்து	,,	7·1	,,
மலேயா	,,	5·8	,,
ஆஸ்திரேலியா	,,	6·4	,,
நியூஸீலாந்து	,,	3·4	,,
ஆர்ஜண்டினா	,,	1·7	,,

இக்கடன் வளர்ந்துகொண்டே வருகிறது. இந்தியாதான் பெருந்தொகையைக் கொடுத்திருக்கிறது. இன்னும் யுத்தம் நீடிக்குமானால் வருஷம் ஒன்றுக்குச் சுமார் 30 கோடி பவுன் இந்தியா கடனாக அளித்துதவுமாம்.

இவ்வளவு பணம் இந்தியாவிற்கு ஏது? இந்தியாவில் அமுலிலிருக்கும் நாணய நோட்டுகளுக்கு மூலாதாரமாக ஒரு குறிப்பிட்ட அளவு தங்கம், வெள்ளி, நொடியில் மாற்றக்கூடிய ஸ்டர்லிங் பத்திரங்கள் வைத்துக்கொள்ளப்படவேண்டும். நாட்டில் வழங்கும் நாணயம், நோட்டு இவைகளின் மதிப்பு இவற்றைப் பொறுத்தது. சமாதான காலங்களில் ஸ்டர்லிங்(பிரிட்டிஷ் நாணயம்) பத்திரங்களை வாங்கி மூலாதார நிதி வைத்துக்கொள்ளுவது வழக்கம். இது பிரிட்டனின் ஆதிக்யத்தில் நாம் வாழ்வதனால் ஏற்பட்ட நிர்ப்பந்தம். இப்பொழுது அனேகமாக எல்லா மூல நிதியையும் நாம் ஸ்டர்லிங் (பிரிட்டிஷ் கடன்) பத்திரங்களில் முடக்க நேரிட்டுவிட்டது. காரணம் நாம் பிரிட்டனுக்கு இந்த யுத்த ஸமயத்தில் உதவவேண்டிய நிர்ப்பந்தம்தான்.

மேலும் இங்கே திரட்டப்படும் யுத்த நிதிப் பணம், இங்கிருந்து துருப்புக்களுக்காக நாம் ஏற்றுமதிசெய்யும் விளை பொருள்கள் சாமான்கள் ஆகிய இவைகளின் விலை, இதெல்லாம் சேருவதினால்தான் இக்கடன் நாம் கொடுக்க முடிகிறது.

நாட்டில் வறுமை தலைவிரித்தாடும் சமயத்தில் நாம் இப்படிக்கடன்கொடுக்க இயலுமா? செய்வது சரியா? என்பதெல்லாம் விவாதிக்க முடியாத விஷயம். பிரிட்டனுக்கு நாம் உதவ வேண்டியது நமது கடமை! நமது மக்கள் வாடினாலும் கேட்பாரில்லை.

இவ்வளவு கஷ்டப்பட்டு நமது மூல நிதிகளையும். மக்களுக்கு அத்யாவசியமான பொருள்களையும் திரட்டிப் பிரிட்டனுக்கு அனுப்பிவைக்கிறோமல்லவா? இதற்குப் பிரிட்டிஷ்காரர்கள் என்ன நன்றிகாட்டுகிறார்கள் தெரியுமா? அதைத்தான் எடுத்துக் கூறவந்தோம்.

பிரபல பிரிட்டிஷ் பொருளாதாரப் பத்திரிகைகைகள் இக்கடன் பளுவை எப்படித்திருப்பிக் கொடுக்க யோசித்து வருகின்றன என்பதுதான் வினோதமாக இருக்கிறது.

அவைகளின் வாதம் சரிவரப்புரியவேண்டுமென்றால் இன்னுமொரு விஷயம் விளக்கப்படவேண்டும். சாதாரணமாக இந்தியா பிரிட்டிஷ் ஸ்டர்லிங் ஸெக்யூரிடிகளில் (கடன் பத்திரங்கள்) பணத்தை முடக்கினால் அப்பத்திரங்களை நாம் பகிரங்க மார்க்கட்டில் விற்று அமெரிக்கன் டாலராகவோ அல்லது வேறெந்த நாட்டின் நாணயமாகவோ மாற்றலாம். பிரிட்

டனிடமிருந்து நமக்குத் தேவையான சாமான்களைப்பெறலாம். அல்லது டாலராகமாற்றி அமெரிக்காவிடம் சாமான்களை வாங்கிக்கொள்ளலாம். ஆனால் இன்று யுத்த நிமித்தம் இப்பத்திரங்களைக் கவர்மெண்டு அனுமதியில்லாமல் டாலராக மாற்றமுடியாதபடி தடை யுத்தரவு இருந்து வருகிறது. (Exchange Control) யுத்தகாலங்களில் இதற்கு அர்த்தமுண்டு. ஆனால் இத்தடை சாதாரண காலங்களிலும் இருக்குமானால் நம் பணத்தைப் பணம் என்று கருதமுடியாது. அது முடக்கப்பட்டுவிடும். நமக்குத் தேவையான சாமானையோ பணத்தையோ இஷ்டப்பட்டபொழுது பெறமுடியாது.

பிரிட்டனுக்கு இன்று கடன் பளு தாங்கமுடியாமற்போகவே, அவைகள் ஒரு விசித்திர வாதத்தை ஆரம்பித்திருக்கின்றன. "இந்தியாவைக் காப்பாற்றவே அனேகமாக இக்கடன் ஏற்பட்டுள்ளது; ஆகையால் இக்கடனைந் நம் சௌகர்யப்படிதான் அது திரும்பிப்பெறவேண்டும். நமக்குச் சுமார் 100கோடி பவுனுக்கு மேல் கடன் இருக்கிறது. யுத்தம் முடியுமுன் இது மிகவும் அதிகரித்துவிடும். மற்ற நாடுகளிடமிருந்து பெற்ற கடன் ஒரு வகை; ஆனால் இந்தியாவிடமிருந்து பெற்ற கடன் மற்றொருவகை. இந்தியா கடனைப்பற்றித்தான் நாம் அதிகமான கவலைகொள்ள வேண்டும். அக்கடனை நாம் இருபது வருடங்களில்தான் அடைக்க முடியும். அதுவும் நாம் தயாரிக்கும் சாமான்களைக் கொடுத்துத்தான் இக்கடனை உளவடைக்க முடியும். அப்படிச் செய்ய நம் சாமான்கள் இந்தியாவில் இறக்குமதியாவதற்கு நமக்கு முதன்மைச்சலுகை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். மேலும், யுத்தம் முடிந்தபிறகு இந்தியா, தான் பெற்றிருக்கும் ஸ்டர்லிங் செக்யூரிடிகளை (British debt to India) அமெரிக்கன் டாலராக மாற்றினால் குடிகெட்டுவிடும். நமது பொருளாதார நிலையில் பெருத்த நெருக்கடி ஏற்பட்டுவிடும். ஆகையால் இன்று அமுலிலிருக்கும் எக்ஸ்சேஞ்ச் கட்டுப்பாடு இக்கடன் தொகையைப் பொறுத்தமட்டில் நீடிக்கப்படவேண்டும்." இவ்வாறு பிரபல ஆங்கிலப் பத்திரிகைகள் ஓலமிட ஆரம்பித்துவிட்டன.

இந்தியாவைப் பொறுத்தவரையில் இது மிகவும் கவலைக்கிடமான விஷயம். இவ்வாதத்தின் அர்த்தமென்ன?

நாம் பிரிட்டனுக்கு இன்று அளித்துவரும் கடன் பிரிட்டிஷார் தயாரிக்கும் சாமான்களாகத்தான் திருப்பிக்கொடுக்கப்படும். அச்சாமான்களும் அவர்கள் சௌகரியப்படிதான் இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்படும். சுமார் இருபது அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்களில்தான் இதுவும் சாத்தியமாம். அதாவது, இந்தியாவுக்கு இக்கடனைக் திருப்பக் கேட்கவும் அதிகாரமில்லை. அச்சாமான்கள் நமக்கு வேண்டியனவோ, வேண்டாதனவோ அவற்றைப்பற்றி எடுத்துரைக்கவும் நமக்குப் பாத்தியம்கிடையாது.

இவ்வளவோடு நில்லாது, அப்பத்திரிகைகள் இப்படிச்செய்வதற்கு ஒருநியாயமும் கூறுகின்றன. இந்தியாவின் நிமித்தம்தான் இக்கடன் ஏற்பட்டதாம். தாராள மனப்பான்மையுடன் பிரிட்டன் யுத்த ஆரம்பத்தில் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டதன் பயனாகவே இன்று இந்தியா இவ்வளவு திரவியம் பிரிட்டனுக்கு அளிக்க முடிந்ததாம். ஆகையினால் அவர்கள் இஷ்டப்பட்டபொழுது, அவர்கள் சௌகரியப்படிதான் நாம் அக்கடனைத் திரும்பப்பெற வேண்டுமாம்.

இம்மனப்பான்மை எதைக் குறிக்கிறது? கடன் வாங்குகிறவன் முதலில் எத்தகைய நிபந்தனைக்கும் உட்பட்டுவாங்கிக்கொள்வான். பிறகு கடன்பளு அதிகரித்துவிட்டால்—தலைக்கு மேல் போய்விட்டால் — சாக்குப்போக்குச் சொல்லிக் கடன்காரனை ஏமாற்ற முயலுவான். அதுபோலத்தானிருக்கிறது பிரிட்டிஷ் பத்திரிகைகளின் வாதம். இன்னும் பிரிட்டன் இந்தியாவிடமிருந்து கடன் பெற்றுக்கொண்டே வருகிறது. அதற்குள்ளாகவே அப்பளுவை எவ்விதச் சூழ்ச்சியினால் குறைத்துக்கொள்ளலாமென்று ஆலோசிக்கிறார்கள். இது இந்தியாவுக்குப் பெருத்த அநீதி செய்வதாகும்; இந்தியாவினுடைய பொருளாதார நிலைமையைத் தலைகுப்புற விழச்செய்துவிடும்.

இக்கடன் தொகை எவ்வகையில் திரட்டப்பட்டது என்பதை நினைத்துப்பார்த்தால் அது யுத்தமுடிவில்திருப்பிக்கொடாவிடில் நாட்டிற்கு எத்தகைய பாதகத்தை விளைவிக்கும் என்பது விளங்கும். நாட்டில் இருக்கும் தங்கத்தில் பெரும் பகுதி பிரிட்டனுக்கு ஏற்றுமதியாய்விட்டது. செலாவணியிலுள்ள நாணயம் நோட்டு இவைகளுக்கு ஆதாரமாகவுள்ள தங்கம் வெள்ளிகளைப் பிரிட்டன் தன் அதிகாரத்தினால் கடன்என்றுகூறிப்பிடுங்கிக்கொண்டு விட்டது. நாட்டிலுள்ள மக்களுக்குத் தேவையான உணவுப்பொருள்கள், இதர சாமான்கள், பெரும்பாலான பாகம் பிரிட்டிஷ் கவர்மெண்டின்இஷ்டத்திற்கு ஏற்றுமதிசெய்யப்படுகின்றன. நாட்டில் மக்கள் குடிக்கக் கஞ்சியின்றி மடிகிறார்கள். இவ்வளவு கஷ்டங்களுக்கு மக்களையுள்ளாக்கிச் சேகரித்த தொகை இக்கடன். யுத்தத்திற்காகப் பிரிட்டிஷார் இந்நாட்டில் சாமான்கள் வாங்குவதினால் இந்திய நாட்டு மக்கள் லாபமடைந்து சேமித்த பணமல்ல இது. ஆகையால் இப்பணத்திற்குக் குந்தகம் ஏற்பட்டால் பிரிட்டிஷாரிடம் நம்பிக்கைகுறைந்துவிடும். இவர்கள் வாதம் நேர்மையற்றது. எளிய இந்திய ஏழைகளின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொள்ளாமல் நேர்மையாக நடந்து இக்கடனைச் சீக்கிரம் திருப்பிக் கொடுக்கவேண்டியது கண்ணியமான முறை. இதில் சூழ்ச்சி செய்வது பெருத்த அநீதியாகும்.

இந்திய மக்கள் கண்விழித்து ஏமாறாமல் இருக்கவேண்டுகிறோம்.

ஆண்டு நிறைவு

இன்று காவேரியின் இரண்டாவது ஆண்டு நிறைவு, மூன்ருவது வருஷப் பிறப்பு. காகிதப் பஞ்சம், உணவுப் பஞ்சம் என்ற அரிஷ்ட நோய்கள் தலைதூக்கி நிற்கும் இந்த யுத்த காலத்தில் ஒரு புதிய பத்திரிகை வேரூன்றிச் செழித்து ஓங்கிவருகிறதென்ருல், அது தமிழ் மக்களின் பூரண ஆதரவினுலன்றி எப்படிச் சாத்தியமாகும்?

இதற்கு என்ன கைம்மாறு நாங்கள் செய்யக் கூடும்? காவேரியை உயர்ந்த முறையில்—வாசகர்களின் அபிமானம் என்றும் தளராமல்—நடத்திவருவதே நாம் செய்யக்கூடியது. எங்களால் இயன்றமட்டும் இதனைச் செய்ய முயன்று வருகிருேம்.

காவேரியில் ஒரு முக்கியமான மாறுதல் செய்யவேண்டுமென வாசகர்கள் வற்புறுத்தி வருகிருர்கள். வர்ணப் படங்கள், சித்திரங்கள் இடையிடையே காணப்படவேண்டுமென்கிருர்கள். நமக்கும் அவ்விருப்பம் நிரம்ப உண்டு. ஆரம்பத்தில் மூவர்ணப் படங்களும், சித்திரங்களும் நமது இதழ்களில் மலிந்து கிடந்தன. ஆனல் காகித விலை விஷம்போல ஏறவே நாம் சித்திரங்களில் சிக்கனம் பிடிக்க வேண்டியதாயிற்று. பிறகு பிளாக் செய்யும் விலையும் உயரவே, சித்திரங்களுக்கு இடமளிப்பது கடினமாகிவிட்டது. இன்று காகித விலையைச் சமாளிப்பதே பெரும் பாடாகிவிடுகிறது. அட்டைக்கு ஆர்ட் பேப்பர் கிடைப்பது குதிரைக் கொம்பாகிவிட்டது. இக்காரணங்களினுல் இந்தச் சித்திர ஆடம்பரங்களைக் கொஞ்ச காலத்திற்கு ஒதுக்கிவைத்து அரிய கட்டுரைகளாகப் பிரசுரிப்பதிலேயே கவனம் செலுத்திவருகிருேம். சிறந்த ரஸமான கதைகளைப் பிரசுரிப்பதோடு பிரபல தலைவர்களைக் கொண்டு சுவையுள்ள கட்டுரைகள் எழுதச் செய்யலாமென்றும் தீர்மானித்திருக்கிருேம்.

வாசகர்கள் நம்மைத் தொடர்ந்து ஆதரித்துதவிவருமாறு கேட்டுக்கொள்ளுகிருேம்.

உணவுப் பஞ்சம்

வங்காளத்தில் உணவுப் பஞ்சம். ஆயிரக் கணக்கில் சாலையோரங்களில் பசியினுல் மக்கள் வீழ்ந்து மடிகிருர்கள். அப்பிணங்களை அப்புறப்படுத்த அரசாங்கத்தார் முன்வருகிருர்களே ஒழிய அவர்கள் பசிப்பிணிக்குக் கொஞ்சம் கஞ்சிவார்த்து அவர்களைக் காப்பாற்றவகை செய்யவில்லை என்று நாம் பத்திரிகைகளில் படிக்கிருேம். இப் பரிதாபகரமான நிலை எதனுல் ஏற்பட்டது என்று சரிவர விளங்கவில்லை. மத்திய சட்டசபை விவாதத்தினின்றும் இது தெளிவாகவில்லை. இந்தியா கவர்மெண்டார் வங்க மாஜிபிரதம மந்திரியைப் பொறுப்பாளியாக்க முயன்ருர்கள். அனல் அவர் அதை மறுத்து ஓர் அறிக்கை விடுத்துள்ளர். இனியாவது நிலைமையைச் சமாளிக்க கவர்மெண்டார் திட்டம் எதுவும் தயாரித்ததாகத் தெரியவில்லை.

சென்னை கவர்னரின் அட்வைஸர், ஸர் ஹியூ ஹூட் என்பவர் நேற்று பத்திரிகைக்காரர்களுக்குப் பேட்டி அளித்தபொழுது கடப்பை, கர்னூல், பெல்லாரி, அனந்தபூர் இந்த ஜில்லாக்களில் உணவுப் பொருள் நிலைமை மிகப் பரிதாபகரமாக இருப்பதாயும், சுமார் 4,00,000 மக்கள் கவர்மெண்டால் ஏற்படுத்தப்பட்ட பஞ்ச காம்புகளில் அடைக்கலம் புகுந்திருப்பதாயும் அறிவித்தார். சேலம், மலபார், கோயமுத்தூர் ஜில்லாக்களில் அரிசிப் பஞ்சம் மிக்க கவலைக்கிடமாக இருப்பதாகவும் கூறினர்.

இவை எல்லாம் கவர்மெண்டாரின் அசட்டையைத்தான் தெளிவாக்குகின்றன. தீர்க்காலோசனை செய்து திட்டம் வகுத்துச் சமாளிக்கவேண்டிய விஷயம் இது. ஆனல் நமது கவர்ன்மெண்டார். பணம் வசூலித்து யுத்த

தேவதைக்குப் பலியிடுவதிலேயே கவனமாக இருந்துவிட்டார்கள். இன்று உணவுப்பிரச்னைக்கென்றே ஓர் புதியமெம்பர், ஸ்ரீ ஜ்வாலப் பிரஸாத் ஸ்ரீ வத்ஸா ஏற்பட்டுள்ளார். நேற்று ராஜாங்க சபையில் பேசுகையில் அவர் உயரிய நோக்கத்தைத் தெரிவித்தார். அவருக்கு வெற்றி கிட்டுமாறு நாம் இறைவனை வேண்டுகின்றோம். நமக்குமட்டும் கொஞ்சம் சந்தேகம்தான். இவ்விஷயங்களில் தேசிய உணர்ச்சியைக் கிளப்பினாலொழிய மக்கள் ஒத்துழைப்புக் கிடைக்காது.

ஓர் உதாரணம் எடுத்துக்கொள்ளுங்கள். உணவுப் பஞ்சம் இவ்வளவு கடுமையாக இருக்குங்காலத்திலும் விவசாயிகளை உற்சாகமூட்டி அதிக ஸாகுபடி செய்யும்படியான உபாயம் எங்கும் செய்ததாகக் காணோம். ஐரோப்பாவில் உணவுப் பஞ்சம் எற்பட்டது; ஜர்மானியர்கள் விவசாயிகளுக்கு முன் பணம் கொடுத்துத் தானியங்களை வாங்கிக்கொண்டுவிட்டார்கள் என்று ஓர் அமெரிக்கப் பத்திரிகை கூறுகிறது. இந்நாட்டில் தஞ்சை ஜில்லாவை எடுத்துக்கொள்ளுங்கள். விவசாயிகள் ஊக்கமின்றி வேலைசெய்கிறார்கள். கவர்மெண்டார் அவர்களுக்குக் கொஞ்சம் அதிக விலை கிடைக்கும்படி பொருளுதவி செய்தால் அளவுக்கு மிஞ்சிய தான்யங்களை உற்பத்தி செய்வார்கள். ஆனால் இதைச்செய்யாமல் தும்பை விட்டு விட்டு வாலைப்பிடிக்கிறார்கள் நமது அரசாங்கத்தார். தரகர்கள் இன்று அடிக்கும் லாபத்தில் ஒரு சிறிய பங்கு விவசாயிகளுக்குக் கிடைக்குமானால், எவ்வளவு உற்சாகத்துடன் மிராசுதார்கள் சாகுபடி செய்வார்கள்? ஸர் ஹாட் அவர்கள் இதைத்தான் உணரவில்லை. இந்நாட்டில் பஞ்சம் ஏற்படும் விவசாயிகளுக்கு ஊக்கம் உண்டாகாத காரணம் நமது மாகாண கவர்மெண்டார் கையாளும் முறைகள்தாம். மிராசுதார்களுக்குக் கொஞ்சம் சலுகை காட்டவேண்டிய தருணமிது. அதில்லாமல், வெறும் விரட்டலினால் எல்லாம் சாதித்துவிடலாமென்று நினைத்தால் காரியம் கெட்டுவிடுகிறது, மனக்கசப்புத்தான் மிச்சம்.

உணவுப்பஞ்சத்திற்கு முதல் மருந்து அதிக உற்பத்தி, பிறகு அதைச்சரிவர விநியோகித்தல். இவற்றைக் கவனியாது எந்தத் திட்டம் போட்டாலும் பலனளிக்காது.

இப்பிரச்னைகளைப் பொதுஜன ஆதரவின்றி வெற்றிகரமாகத் தீர்க்கமுடியாது. இவற்றைத் தீர்ப்பதில் எல்லாக் கட்சியினரும் ஒன்றுகூடி ஒத்துழைப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. கவர்மெண்டார் ஆங்காங்கு ஜனப்பிரதிநிதிகளுடன் கலந்து ஓர் தீர்க்க திட்டம் வகுத்து நடத்தவேண்டும். இன்று சில்லறை உபாயங்களினால் நிலைமையைச் சமாளித்தாலும் நாளைக்கு அது கைக்கடங்காமற் போய்விடலாம். புது உணவு மெம்பர் இதைச்செய்ய முன் வருவாரென்று எதிர்பார்க்கிறோம்.



ஸமாதான காலங்களில் சுருக்கெழுத்துக்காரர்களா யிருந்த இவ்விரு ஆங்கில இளமங்கையர் பர்லின் நகர்மீது குண்டுமாரி பொழிய, காட்ரிஜ் பெல்டுகள் தயார் செய்கின்றனர்.

கதம்பம்

நமது அனுதாபம்!

மனிதனுக்கும் எந்திரத்திற்கும் வித்யாசமுண்டு. மனிதனுக்குள்ள பகுத்தறிவு எந்திரத்துக்கிடையாது! ஆனால் மனிதர்களும் கால வித்யாசத்தால் பகுத்தறிவைப் பறிகொடுத்து எந்திரம்போல் ஆகிவிடுகின்றனர்.

ஆபீஸ் வேலையாட்கள் கூப்பிடும் சமயங்களில் இல்லாமலிருந்துவந்ததால், முதலாளி, மானேஜரிடம், வேலையாட்கள் வெளியில் சென்றுவிடாமல் கவனித்துக்கொள்ளச்சொன்னார். ஆபீஸ் தபால்களைப்பெட்டியில் போட்டு வரவும் அந்தப்புத்திசாலி மானேஜர் உத்தரவு கொடுக்க மறுத்துவிட்டார்!

மேலேசொன்ன கதையாகத்தானிருக்கிறது சர்தார்மங்கல்சிங் இந்தியா சட்டசபையில் அழுத கதை; "சென்ற நவம்பர்மாதக் கடைசியில் நான் பாதுகாப்புக் கைதியாக இருந்து விடுதலையடைந்தேன். ஜில்லா மாஜிஸ்ட்ரேட் ஐந்து பேர்களுக்குமேல் சேர்ந்துள்ள கூட்டங்களில் நான் கலக்கலாகாதென எனக்கு உத்தரவிட்டார். சட்டசபைக்குச் செல்லலாமாவெனக்கேட்டேன். பதில் என்னை திடுக்கிடச்செய்தது. 'போகக்கூடாது. சட்டசபையில் ஐந்துபேர்களுக்குமேலிருப்பார்கள், தவிர, சட்டசபைக் கூட்டம் மத சம்பந்தமான கூட்டமல்ல, தாங்கள் சென்றால் அது உத்தரவை மீறியதாகும்'. நான் உத்தரவை அசட்டைசெய்து வந்துவிட்டேன்."

சட்டசபை மெம்பர்கள், தலைவர் எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தார்களெனச் செய்தி கூறுகிறது.

நமக்குமட்டும் என்ன செய்வதென்று தோன்றவில்லை. பிரிட்டிஷ் அரசாங்கத்தின்கீழ் இவ்வளவு புத்திசாலித்தனம் படைத்த அதிகாரிகள் அமுல் நடத்துகின்றார்களே என்பதை நினைத்து அழுவதா, அல்லது சிரிப்பதா என்று ஆழ்ந்து யோசித்தோம். மூளையை உடைத்துக்கொண்டோம். நமக்குப் புரிபடவில்லை!

ஆனால் அந்த அசட்டு உத்தரவையிட்ட அதிகாரியிடம் நமது அனுதாபத்தைமட்டும் காட்ட வேண்டியது அவசியம். ஏன்? அந்த இரக்கமற்ற சட்டசபை மெம்பர் அசட்டு உத்தரவையிட்ட அதிகாரியின் மானத்தை உலகமறியச் சந்தியிலிழுத்து அவமானப்படுத்தியதற்கு!

முஷ்டியுத்தப் பயிற்சி

சீமையில் விளையாட்டு மைதானங்களெல்லாம் சாகுபடி நிலங்களாக மாறிவிடவே, விளையாடுவதற்கும், பொழுதுபோக்குவதற்கும், தேகப் பயிற்சி செய்வதற்கும் வசதியான இடம் அகப்படுவது அரிதாகிவிட்டது.

தேகப்பயிற்சியின் அவசியத்தை நன்கு உணர்ந்த இரு பார்லிமெண்ட் மெம்பர்கள் ஊரெல்லாம் சுற்றி வசதியானயிடம் கிடைக்காமல் கடைசியில் தேகப்பயிற்சி செய்யப் பார்லிமெண்ட் சபைக் கட்டிடத்தையே தேர்ந்தெடுத்தார்கள்!

எந்த விதமான தேகப்பயிற்சி முறையைக் கையாளுவது என்பதை இருவரும் ஆழ்ந்து யோசித்துக் கடைசியில் முஷ்டியுத்தம் (Boxing) செய்ய முடிவுகட்டினார்கள்.

சபையில் முஷ்டியுத்தம் செய்ய அதிகாரிகள் இடமும் அனுமதியும் கொடுக்கமாட்டார்களே என்ன செய்வது என்று இருமெம்பர்களும் மூளையைக் கலக்கிக்கொண்டு கடைசியில் சபையில் விவாதம் நடக்கும்போது எப்படியாவது இருவரும்காரசாரமாகப்பேச்சு யுத்தம் நடத்தி அதைமுஷ்டியுத்தத்தில்முடித்துவிடுகிறதெனத் தீர்மானித்தார்கள்! அந்தத் தீர்மானத்தின்படி லாக்கர் லாம்ஸன் என்ற மெம்பர் காப்டன் ஆலக் கன்னிங்ஹாம்ரீட் என்ற மற்றொரு மெம்பரை "ஜர்மனி குண்டு மழை பொழிந்த போது இந்தக் காப்டன் துரை ஊரைவிட்டு ஓடிவிட்டாரே, அப்படி ஓடினது பயத்தாலா அல்லது வியாதியின் காரணத்தாலா?" என்று கேட்டார். இன்னும் இதுபோன்ற கேள்விகளால் லாம்ஸன், காப்டன் ரீட் துரைக்கு ஆவேசத்தையும், உற்சாகத்தையும் ஊட்டி முஷ்டியுத்தத்துக்குக் குஷிப்படுத்தினார்.

காப்டன் துரைக்கு அந்த முறை பலனளித்து, குஷிகிளம்பி "இந்தா எடுத்துக்கொள்" என்று லாம்ஸனுக்குப் பல குத்துக்கள் கொடுத்தார். லாம்ஸன் துரையும் வீராவேசத்தோடு குத்துக்களைத்திருப்பிவிட்டார். அப்பொழுது லாம்ஸன் முஷ்டியுத்த விதிகளுக்கு மாறாக நடந்துகொண்டார். "லாம்ஸன் பாய்ச்சலாகக்காப்டன் மீதுமோதி, கைகளைத்தலைக்குமேல் தூக்கி இருகைகளையும் சேர்த்தாற்போல் கொண்டு வந்து காப்டனது மார்பில் தாக்கினார் என்று

ராய்ட்டர் செய்தி கூறுகின்றது. விதிகளுக்கு மாறாக லாம்ஸன் நடக்கவே சபையோர்கள் முஷ்டியுத்தத்தைப்பின்னும் நடக்காமல் தடை செய்துவிட்டார்களாம்.

பார்லிமெண்டு சபையில் இப்படியாகத் தேகப்பயிற்சியின் அவசியத்தைமற்றத் தூங்குமூஞ்சி மெம்பர்களுக்கு நிதர்சனமாக விளக்கிக்காட்டிய இரு பார்லிமெண்டு மெம்பர்களுக்கும் நமது நன்றியறிவு உரியதாகும்!

புதிய பாஷ்யகாரர்!

ஸ்ரீமத் பகவத்கீதைக்குப் பல மகான்கள் வியாக்யானம் எழுதியுள்ளார்கள். இன்னும் பல சிறந்த அறிவாளிகள் அந்த ஒப்பற்ற கிரந்தத்தை ஆராய்ச்சி செய்துவருகிறார்கள். ஆனால் இதுவரை யாரும் மக்களுக்கு எளிதில் புரியும் படியாக அந்த உயர்ந்த நூலை மொழிபெயர்க்கவில்லையே என்று நினைத்துத்துக்கித்திருந்தோம். நல்ல வேளையாகச்சமீபத்தில் ஒரு அவதார புருஷன் தோன்றி ஸ்ரீமத் கீதையை வெகு அற்புதமானதும், ஹல்வா துண்டை விழுங்குவதுபோல் சுலபமானதும், வெகு தெளிவானதுமான முறையில் விளக்கியுள்ளார். அம்மகான் இந்த யுத்த காலத்தில் தோன்றி, கீதையை விளக்குவது இன்னும் விசேஷமல்லவா?

யுத்தக் குழப்பத்தினால் நாம் பீதியும் மனக்கலக்கமும் கொண்டுள்ளோம். செய்ய வேண்டிய கர்மாக்களை மறந்தோம். சந்தேகங்களில் மனதைச்செலுத்தி வீணாகக்கலக்கமடைகிறோம். இவைகளெல்லாவற்றையும் நன்கு உணர்ந்த அந்த மகான் ஸகலஜீவாத்மாக்களும் கீதாஸாரத்தை உணர்ந்து உஜ்ஜீவிக்கும் பொருட்டு விளக்கியுள்ளதைக்கவனிப்போம்.

"இவ்வுலகில் நமக்குக்கஷ்டங்களும் சங்கடங்களும்ஏதனால்ஏற்படுகின்றன? சந்தேகத்தினால், தன்னிடமே நம்பிக்கை இல்லாமலிருப்பதினால் தான். வருநாளைப்பற்றி நாம் வீணாகக் கவலை கொள்ளுவதினால்தான். யுத்தமென்பது சிப்பாய்களால் மட்டும் ஆவது அல்ல. எவன் ஒருவன் முழு முயற்சியோடு யுத்த வேலைகளுக்கு உதவிபுரியவில்லையோ அவன் யுத்தவேலைகளைத் தடைசெய்பவன். நம்மவர்களில் பலர் அர்ஜுனன் எப்படிச் சந்தேகங்களினாலும், மனக்குழப்பத்தினாலும் அல்லல் பட்டானோ, அந்த நிலைமையில்தானிருக்கிறார்கள். ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு யுத்த களத்தில் சொன்ன வார்த்தைகளை நாம் கவனித்தால் நமக்கு இவ்வித மனப்பான்மை ஏற்படாது."

இவ்விதமாக ஸ்ரீமத் பகவத்கீதையை 'குட்டிச்சுவராய்' பாழ்படுத்த அவதரித்த மகான் யாரென்று நினைக்கிறீர்கள்? வங்காள கவர்னர் "தர்க்காலங்கார அதிபயங்கர விநோதகேஸரி" ஸர் ஜான் ஹர்பர்ட் ஸ்வாமிகள் அவர்களே.

இப்பொழுது ஒரு புதிய மோகம் காட்டுத்தீ போல் பரவிவருகிறது. அன்று ஒரு முகம்மதிய மாஜிஸ்ட்ரேட் கீதையைக்கரைத்துக் குடித்தவர்போல் கச்சேரியில் இரண்டு சுலோகங்களை ஒப்பித்தார். இன்னொரு கிறிஸ்தவப் பாதிரி கீதையைத் தம் மனம்போல் மொழிபெயர்த்து உளறிக்கொட்டினார். இப்பொழுது வங்காள கவர்னர் தோன்றியுள்ளார்!

புனிதமான கிரந்தங்களை விஷயம் தெரியாதவர்கள்—அறியமுடியாதவர்கள்—இவர்கள் எந்தவிதமாகவும் உபயோகப்படுத்தக்கூடாதென ஒரு அவசரச்சட்டம் இயற்ற மேன்மைதங்கிய வைசிராய் பிரபு அவர்களை வேண்டுகிறோம்!

அண்ணாமலைக்கு அரோஹரா!

புதிதாக வைக்கப்பட்ட 'காப்பிகிளப்' அதி விமரிசையாக நடக்கும். உபசாரம் பலமாக இருக்கும். காபி 'ஏஒன்'ஆக இருக்கும். சுத்தமான நெய்ப் பக்ஷணங்கள் கிடைக்கும்.

பெயரும், வாடிக்கையும் கொஞ்சம் கிடைத்தவுடன் எல்லாம் தலைகீழாக மாறிவிடும். வருபவர்களை யாரும் கவனிக்கமாட்டார்கள். காப்பி கழுநீராக மாறிவிடும். நெய் என்ற உணவுப்பொருளின் ஞாபகத்தையே மறந்து நாளடைவில் வியாபாரம் படுத்துவிடும். அந்த கிளப் பாழடையும்.

அண்ணாமலை ஸர்வகலாசாலை நல்ல நோக்கத்துடன் தான் ஆரம்பிக்கப்பட்டது. ஸ்தாபகர் பொதுஜன ஆதரவை அடையப் படாதபாடு பட்டார். அறுபதுலக்ஷரூபாய் பொதுஜனங்கள் பணத்திலிருந்து நன்கொடை பெற்றார். ஸர்வகலாசாலை புகழைப்பெற்றது. ஸ்தாபகரும் மதிப்பைப்பெற்றார்.

அண்ணாமலை ஸர்வகலாசாலையின் ஜாதகக் கோளாறோ அல்லது வேறுயாருடைய ஜாதகக் கோளாறோ நாம் அறியோம், சர்வகலாசாலை இப்பொழுது ஸர்வாதிகார கலாசாலையாகமாறிவருகிறது. பழைய சட்ட திட்டங்களை மாற்றிப் புதிய சட்டங்களும் திட்டங்களும் ஸர்வகலாசாலை நடைமுறையில் புகுத்தப்படுமாம், அதன் நிமித்தம் கவர்னர் துரை அவர்கள் ஒரு மசோதா தயாரித்துள்ளார். அந்த மசோதாவின் முக்கியஅம்சங்களைக் கவனிப்போம்.

(1) பழைய ஆலோசனைச் சபை (Academic Council) எடுபட்டுப்போய்விடுகிறது.

(2) உப அத்யக்ஷகர் (Vice-Chancellor) தேர்ந்தெடுப்பதில் ஸ்தாபகருக்கு அதிகச் சலுகை.

(3) உப அத்யக்ஷகருக்கு ஸர்வாதிகாரம்.

(4) "ஜாதி மதவித்யாசமின்றி யாரும் ஸர்வகலாசாலையில் சேரலாம்" என்றிருந்த பழைய விதி அழிக்கப்பட்டு, "ஸர்வாதிகாரியான உப அத்யக்ஷகர் காரணம் சொல்லாமல் சேருவதற்கு அனுமதி மறுக்கலாம்" என்றபுதிய விதி.

ஆலோசனைச் சபையில் முக்யமாக உபாத்யாயர்களே இடம் பெற்று ஸர்வகலாசாலையின் அபிவிருத்தியில் பல விதத்திலும் கவனம் செலுத்தினார்கள். அப்படிப்பட்ட கவனம் அவசியமில்லையெனக் கருதப்பட்டதுபோலும்!

முன்னெல்லாம் பொதுஜனங்களின் மதிப்பைப் பெற்றவர்களும் கல்வி சம்பந்தப்பட்ட விஷயங்கள் தெரிந்தவர்களுமாக மூன்று அறிவாளிகள் நிதானிக்கப்பட்டு அவர்களுள் தலைசிறந்தவரைக் கவர்னர் உப அத்யக்ஷகராக நியமிப்பது வழக்கம். இப்பொழுது யாரேனும் தமக்கு இஷ்டப்பட்ட, அடங்கிய நபரை ஸ்தாபகர் குறிப்பிட்டால் போதும்.

உப அத்யக்ஷகருக்கு அளவுக்குமிஞ்சிய ஸர்வாதிகாரத்தை அளித்தல் அழகல்ல. ஸர்வகலாசாலையில் யுத்த சம்பந்தமான விஷயங்களைப் பற்றித் திட்டங்கள் வகுக்கப்படபோவதில்லையாகையால் ஸர்வாதிகாரம் எதற்கு? தவிர, பொதுஜனங்களின் பணத்தை விழுங்கும் ஒரு ஸர்வ கலாசாலை அதிகாரி காரணம் சொல்லாமல் யாரையும் உள்ளேவிட மறுக்கலாமென்ற விதி பெருத்த அநீதியாக உள்ளது.

இத்தகைய—விநோத—திடீர் மாறுதல்கள் செய்யவேண்டிய அவசியமென்ன? சட்டசபையைப் புறக்கணித்து ஸர்வாதிகாரத்தைக் கவர்னர் உபயோகிக்கவேண்டிய பேராபத்து என்ன ஸர்வகலாசாலைக்கு நேர்ந்து விட்டது?

ஸ்தாபகருக்கும் கவர்னர் துரை தம் ஸர்வாதிகாரத்தில் கடுகளவு தானம் செய்யவேண்டிய அவசியமென்ன? அட்வைஸர் ராஜாங்கத்தின் பதில் "ஸர்வகலாசாலை இன்னும் திறம்பட வேலைசெய்ய!" என்கிறார்கள்.

முன்பின் யோசிக்கப்படாமல், பொது ஜனப் பிரதிநிதிகளைக் கலக்காமல், செய்ய எத்தனிக்கும் மாறுதல்கள் மேலே சொன்ன காபிகிளப் கதையாகிவிடுமோவெனக் கவலைகொள்ளுகிறோம். பள்ளிக்கூடங்களில் ராஜீய விஷயங்கள் கலக்கலாகாது என்று ஓலமிடும் ஸர்க்காரும் ஸ்தாபகரும் அதே காரியத்தை இப்பொழுது செய்ய முயல்வது நகைப்புக்கிடமாகும். ஜாதி மதக் கொள்கைகளைத் தெரிந்தோ, தெரியாமலோ ஸர்வகலாசாலை விஷயத்தில் புகுத்த முற்படுவது விபரீதமாகும்.

அண்ணாமலை ஸர்வகலாசாலைக்கும் தமிழ் நாட்டுக்கும் இது ஒரு பெரிய சோதனைக்காலம்.

ஸர்வ கலாசாலைக்கும் ஸ்தாபகருக்கும் பழைய புகழும் கீர்த்தியும் மறையாமலிருக்க அந்த அண்ணாமலைக் கடவுளைப் பிரார்த்தனை செய்து அரோஹரா போடுங்கள்!

தி ஏஷ்யாடிக் கவர்மெண்ட் ஸெகியூரிடி லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

(மைஸூரில் இணைக்கப்பட்டது,)

தலைமை ஆபீஸ்: **ஏஷ்யாடிக் பில்டிங்ஸ்,**
பெங்களூர் ஸிடி.

சேர்மன்: டாக்டர் **எப். ஹெச். நோரோனா,** M. B., Ch. B. (Edin) D. P. H. (Camb),
சீப் மெடிகல் ஆபீஸர், ஸெயிண்ட் மார்த்தா வைத்தியசாலை, பெங்களூர்.

பிரதானமான ஒரு இந்திய சமஸ்த்தானத்திலுள்ள வழிகாட்டியாயுள்ள லைப் ஆபீஸ் இது. இன்ஷ்யூரன்ஸிலுள்ள எல்லா விசேஷ அம்சங்களையும் பெற்றுள்ளது.

இதன் நூதன விரிவு திட்டத்தில் வேலைசெய்ய ஜில்லா சீப் ஏஜண்டுகள், ஆர்கனைஸர்கள், ஏஜண்டுகள் தேவை. வாகினியாயுள்ள படித்த இளைஞர்களுக்கு கவர்ச்சியான ஊதியமளிக்கப்படும்.

விபரங்களுக்கு அடியிற்கண்டவர்களுக்கு எழுதவும்.

ஏ. பிரான்ஸிஸ்,
ஜெனரல் ஸெகரட்டரி & மானேஜர்
ஏஷ்யாடிக் லைப் ஆபீஸ்,
ஏஷ்யாடிக் பில்டிங்ஸ், **பங்களூர் ஸிடி.**

அல்லது

எம். எஸ். கிருஷ்ணஸ்வாமி,
பிராஞ்ச் ஸெகரட்டரி,
ஏஷ்யாடிக் லைப் ஆபீஸ், கெய்த்னெஸ் ஹால்,
310/311, லிங்கிசெட்டித்தெரு, **சென்னை.**

பொழுதுபோக்கு

தி. சே. சௌ. ராஜன்

●

சமீபத்தில் திருநெல்வேலி ஜில்லாவின் தெற்குப் பக்கத்திலுள்ள நாங்குநேரிக்கு ஒரு கலியாணத்திற்குப் போயிருந்தேன். இரண்டு நாட்கள் தங்கவேண்டியிருந்தது. இதற்கு முன் இருமுறை அந்த ஊர் வழியாகப் போக நேரிட்டபொழுது, அங்கேதங்கி, அந்த ஸ்தலத்தின் மகிமையைத் தெரிந்துகொள்ள அவகாசமில்லை. மகாத்மா காந்தியுடன், ஹரிஜன இயக்கத்தின் சுற்றுப் பிரயாண நிமித்தம், அந்த ஊர்வழியாக வரும்பொழுது அங்குச்சில நிமிஷங்கள் தங்கினதும், கட்டுக்கடங்காத ஓர் பொதுக்கூட்டம், சுண்ணாம்புப் பட்டை, செம்மண்பட்டை மாறிமாறிப் பளபளவென்று அடிக்கப்பட்ட கோவில்மதில் மேல்புறத்து ரஸ்தாவில் ஆலமர நிழலில் கூடியிருந்தது எனக்கு ஞாபகமுண்டு. அங்கு நாங்கள் கன்யாகுமரியிலிருந்து வரும்பொழுது மாலை சுமார் நாலரை மணியிருக்கும். வெய்யில் ஓர்புறம். மற்றொரு புறம் பேரிரைச்சலும், ஒழுங்கற்ற மக்களின் ஆர்வமும் அமளியும். இவற்றிடையில் காந்திஜீ அவருக்கென அமைக்கப்பட்டிருக்கும் மேடை போய்ச்சேருவதே பிரம்மப்பிரயத்னமாகிவிட்டது. மேளம், தாளம், தாரை, தப்பு மலை போலச் சேர்ந்துகொண்டிருக்கும் பூமாலைகள், வேண்டாமெனச் சொல்லியும் கேளாது, யார் செவியிலும் நுழையக்கூடாத அந்த இரைச்சலினிடையே ஓயாதுபடிக்கப்படும்எண்ணற்ற வரவேற்புபத்திரங்கள், கடைசியாகத்தொகை இன்னதென்று அறிவிக்கப்படாத பணமுடிப்பு ஒன்று, இவைகளையெல்லாம் நான் இன்னும் மறக்கவில்லை. அந்த ஊர், வைணவர்களாலே வானமாமலையென்றழைக்கப்படும் ஓர் க்ஷேத்திரம் என்பது எனக்குத்தெரியும். அதற்கறிகுறியாக ஆயிரக்கணக்கான நெற்றிகளுக்கிடையே தீவுகள்போலப் பட்டைபட்டையாகப் போடப்பட்டுள்ள திருநாமங்களையும் கண்டேன். காந்திஜீயின் சொற்பொழிவு ஒருவர் காதிலும் விழவில்லை. ஐந்து நிமிஷங்கள் பேசியவுடன் பணமுடிப்பைப் பெற்றுக் கூட்டத்தைப் பிளந்துகொண்டு மோட்டார்காரில் ஏறிக்கிளம்பிவிட்டோம். அந்த ஊரைத் தாண்டிப்போகும்பொழுது கூட்டத்திற்குஜனங்கள் கும்பல் கும்பலாக வந்துகொண்டிருந்தவண்ணமிருந்தார்கள். தமிழ்நாட்டில் ஹரிஜன யாத்திரையில் முதல் முதலாகத் தங்கின இடம் இதுதான். இந்த அமளியில் ஊரைப்பற்றியாவது, மக்களைப்பற்றியாவது தெரிந்துகொள்ள எப்படி முடியும்?

மறுமுறை மந்திரியாக் இருக்கும்பொழுது, திருவனந்தபுரத்தில் அனந்தபத்மநாப ஸ்வாமி ஸன்னிதியில், ஹரிஜனங்கள் மங்களாசாசனமானபின் (தெய்வதரிசனம் செய்த பிறகு) அப்புனித க்ஷேத்திரத்திற்கு, எனது நண்பரான திவான் ஸர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யருடைய அழைப்பின் காரணமாகச்சென்று திரும்பும் வழியில் பிற்பகல் நான்குமணி சுமாருக்கு, இந்த ஊரில் அரைமணிநேரம் தங்கினேன். இந்தஊர் ஆஸ்பத்திரியைப்பார்வையிட்டதையும், பஞ்சாயத்துப் போர்டார்களுடைய குறைகளை என்னிடம் படித்துக்கொடுக்கப்பட்ட வரவேற்புப்பத்திரம் மூலம் வாங்கிக்கொண்டுவந்ததையும் நான் மறக்கவில்லை. மந்திரிகள் வரவேற்புப் பத்திரங்கள் பெறும் தோரணையில் விலையுயர்ந்த வெள்ளிப்பெட்டிகள் முதலியவை பெறக்கூடாதென்பது பிரதமர் ராஜாஜீயின் உத்தரவு. மக்களுடைய குறைகளைக் கடிதத்தில் எழுதிக்கொடுப்பனவற்றைப் பெற்றுக்கொள்ளும் கடமைமட்டிலுமுண்டு. செலவில்லாமல், சுலபமாக எவரும் எழுதிக்கொடுக்கும் மனுக்களை வாங்கவேண்டுமென்கிற முறையில் எனது சுற்றுப்பிரயாணத்தில் நான்பெற்ற வரவேற்பு மனுக்கள், கட்டுக்கட்டாகச் சேர்ந்துவிட்டன. மனுவில் இன்னதுதான் கண்டிருக்குமென ஊகிக்கத் திறம்பெற்ற சோதிடர்களால் கூட முடியாது. குடும்பத்தில் புருஷன் பெண்சாதி சண்டையைப்பற்றிய மனுக்கள் நல்லவேளையாக என் கட்டுக்களில் கிடையாது, ஊர்க்கோவில்களின் கட்சிகள் சண்டைகள், தெய்வத்தையே விழுங்கிக்கொண்டிருக்கும் தர்ம கர்த்தாக்களின் பேரில் புகார்கள், ஆஸ்பத்திரி டாக்டர்கள் பேரிலும் ஊழியர்கள் பேரிலும் பலவித குற்றங்களின் ஜாப்தா, குடி தண்ணீர் வசதி கோரிய மனுக்கள், ஆஸ்பத்திரி வேண்டிய மனுக்கள், நிலவரிவஜா செய்யும்படி பிரார்த்தனைகள், புது வாய்க்கால்கள் வெட்ட வேண்டிய அவசியங்கள், இம்மாதிரி கோரிக்கைகளெல்லாம்ஏராளமாய்க்கிடைக்கும். சில இடங்களில் சட்டசபை மெம்பர்களே தங்களுடைய கட்சிக்காரர்களுடனும் தங்களுக்கு ஓட் செய்த நபர்களுடனும் மனுக்கள் கொடுப்பார்கள். எல்லாவற்றையும் வாங்கிக்கொள்ளவேண்டும். வாங்கிக்கொண்டால் மட்டில் போதாது, படித்து முடிக்கும் வரையில் பொறுமையாகக்கேட்கவேண்டும். தகுந்த பதிலும் சொல்லவேண்டும். குறைபாடுகள் தீர்க்கமுடியாது—அதற்

கான மந்திரி நானல்ல—என்று சொல்லக்கூடாது. பூமாலையை அலட்சியமாகக் கழுத்தில் போடாமல் வைக்கக்கூடாது. போகுமிடங்களில், கோவில் வாத்திய கோஷ்டியார் மந்திரியை வரவேற்காமல் விடமாட்டார்கள். பெரிய தேவஸ்தானமுள்ள ஊராயிருந்தால், யானைகள், குதிரைகள், ஒட்டகங்கள், இவைகளெல்லாம் வரவேற்கும். ஆனால் இவைகளிடமிருந்து மனுக்கள் நான் பெறவில்லை. இவை மனுக்கள் எழுதிக்கொடுத்திருந்தால், அதில் என்ன கண்டிருக்குமென்பதை உலகத்தோர் அறிய ஆவலாக இருப்பார்கள். என்கட்டுக்களில்யானை, குதிரைமுதலியவற்றினிடமிருந்து மனுக்கள் ஒன்றுமிலாததால், அவற்றின் குறையைப்பற்றி எழுதமுடியவில்லை. மந்திரியை வரவேற்கவந்த கூட்டம், காந்திஜீயின் கூட்டத்தின் ஆயிரத்திலொரு பங்குகூட இல்லை! வரவேற்புப் பத்திரங்களில் இன்னது எழுதியிருப்பார்களென்று முன்னதாகவே தெரியாததலால், சமயோசிதமாக ஏதாவது சொல்லி அவ்வூரிலிருந்து கிளம்பிவிடவேண்டும். இந்த நிலையில், அந்தத்தல மகிமை, வினோதங்கள், ஆலயங்கள் மடங்கள் இவைகளைப்பற்றித் தெரிந்துகொள்ள நேரமில்லை. கன்யாகுமரியிலிருந்து திருநெல்வேலி போகும் பாதையில் இந்த ஊருக்கு என் வரவைத் தெரிவிக்காமல் போக முடியவில்லை. காங்கிரஸ் மந்திரி ஒருவர் போகும் வழியிலுள்ள முக்கியமான ஊர்களுக்குத் தகவல் கொடாமல் போனால், அந்த ஊர்க்காங்கிரஸ் சபையை அவமதித்துவிட்டதாக அச் சபையார் எண்ணுவது வழக்கம் ஆகையால் அந்தப்பழியை நீக்க எண்ணியே, அரை மணிநேரம் அந்த ஊரில் தங்கி மனுமூட்டைகளைச் சுமந்துகொண்டு திருநெல்வேலிக்குப் போய்ச்சேர்ந்தேன்.

மூன்றாவது தடவையாக எனது சொந்த அலுவல் நிமித்தம் சென்றதில், ஓய்வும், அமைதியும் பெற்றேன், யுத்தகாலத்தில் மூன்றாவது வகுப்புப் பிரயாணத்தின் சுகங்களை நேரில் அனுபவித்தேன், பஸ் பிரயாணமும், பதினெட்டு மைல்களுக்குக் கிடைத்தது. இருவித வாகனங்களில் ஒரே தினத்தில் பிரயாணம் செய்ததில், எதில் அதிக சுகம்—சுகப்பிரயாணமென்பது இந்தக் காலத்தில் கனவினால் கூடக் காணக்கூடாதது—எதில் அதிக கஷ்டமென்பதுதான் அறிந்துகொள்ளமுடியும். இரண்டும் எடைக்கெடை ஏற்றத் தாழ்வில்லாமலிருந்தது. நாங்குநேரியில், கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் தோதாத்திரிநாதன் கோயில் வாசலில் வானமாமலை ஜீயர் ஸ்வாமிகள் மடத்திற்கெதிரில் புதிதாகக் கட்டப்பட்டிருக்கும், மேல் மெத்தைக் கட்டிடத்தில் தங்கினேன். அவ்விடுதி சுகாதாரமுறைகளைத் தழுவி, காற்றுள்ளதாகவும், சுத்தமானதாகவும் அமைக்கப்பட்டிருந்தது. அக்கட்டிடம் ஜீயர் ஸ்வாமிகளின் சீடர்களுள் ஒருவரான நாட்டரசன் கோட்டை நாட்டுக்கோட்டைச் செட்டியாரின் ஆய்ச்சிகளால் கட்டப்பட்டதென்று அறிந்தேன். பிரயாணத்தின் கடுமை, கலியாண வைபவங்களின் நிகழ்ச்சிகள், இவைகளால் இரவில் நெடுநேரம் விழித்திருந்து, பிறகு படுத்து அயர்ந்து உறங்கிவிட்டேன். விடியற்காலம் கண் விழித்தவுடன் கோபுர தரிசனமும் கிடைத்தது. மடத்தின் காவல் மணியும் டாண் டாண் என்று காதைப்பிளந்தது.

எழுந்து ஸ்நானத்திற்காக ஏரிக்குச்சென்றேன். கண்கொள்ளாக் காட்சி. ஜில்லென்று வீசும் மேல் காற்று. நீர்ப் பரப்பின்பேரில் உயர்ந்து கிளம்பும் அலைகள், செம்மண் நிறமான தண்ணீர், கோயில்மதிலைக் கட்டியணைக்கும் வினோதம். கதிரவனின் பொன் கதிர்கள் அலைகளை ஊடுருவிச்சென்று வானவில் வர்ணத்துடன் வெளிவருவதைப் பார்க்கப்பார்க்க உள்ளத்தில் அடங்கா மகிழ்ச்சி. மண்டபப் படித்துறைகளில் அழுக்குப்படிந்த மனிதர்கள் பல்லை விளக்கும் கோரம். காவி படிந்த தங்கள் துணிகளை அடித்துத் கசக்கி, பக்கத்திலுள்ளவர்பேரில் நீர்த்துளி தெறிப்பதையும் கவனியாது துவைத்தல். பெண்கள் தாம்பிரச்செம்புகளை நன்றாக வெளியில் விளக்கிவிட்டு, உட்புறம் சுத்தமாகக் கழுவாது மாட்டுச்சாணியை ஏரித்தண்ணீரில் கரைத்துக் கரைத்து, நூறுதரம் செம்பின் வாயில் தெறித்து, சிஷ்டாசார முறையைக் காப்பாற்றும் வேலை — இவைகளையெல்லாம் கண்டேன். மக்கள் செய்யும் அசுத்தத்தை அந்த ஏரி நீர் கவனிப்பதாகத் தெரியவில்லை. குழம்பிக் குதித்துக்கொண்டேயிருந்தது. பார்ப்போரை வாவென்று அறைகூவியழைத்து, எதிர்கொண்டு கிளம்பி, 'உன் அசுத்தத்தை என்னிடம் கொடுத்து எனது புனிதத்தை அள்ளிக்கொண்டு போ'வென்று வற்புறுத்தும் காட்சியை அனுபவித்து ஸ்நானம் செய்தேன். சுகாதார ஞானமில்லாமலிருந்தால், புண்ணிய தீர்த்தத்தின் மகிமை நன்கு அனுபவித்திருப்பேன். துள்ளிக் குதிக்கும் மீன் "நீ ஒன்றுக்கும் வருந்தாதே நான் நீரைச் சுத்தம் செய்வதற்காகப் பிறந்தவன். என் குலம் ஏராளமாக இங்கு வளர்ந்திருக்கிறது" என்று அறிவித்து எனது பாதங்களுடன் கொஞ்சிக் குலாவியது. கோவில் மதில், ஜீயர் ஸ்வாமியின் மடத்தின் மேல் புறத்துள்ள கட்டிடம், விசாலமான ஏரி, மேற்கே சிறிது தூரத்திற்கப்பால் ஏரி ஜலத்தைக் குறையாது காப்பாற்றி வரும் மலை, இவ்வித இயற்கை வனப்புள்ள கூடிய இடமானதால்தான், அங்கு இறைவன் கோயில்கொண்டு பக்தர்களுக்குக் காட்சிகொடுக்க இசைந்திருக்கவேண்டும். கோவிலையும், க்ஷேத்திரத்தையும் காப்பாற்ற உலகப்பற்று அற்ற துறவியின் மேற்பார்வைவேண்டி ஜீயர் ஸ்வாமிகளுக்குக் கோவில் வாயிலில் மடம் நிறுவியிருத்தல் வேண்டும்.

கோவில் விசேஷமா, மடம்விசேஷமா என்ற சந்தேகம் அநேகருக்கு உண்டாகலாம். மடத்

தைக் காட்டிலும் கோவில் எவ்வளவோ பெரிது. கோவில்முன் மண்டபம், பிராகாரங்கள், அலங்கார மண்டபம், வாகன மண்டபம் மற்றும் பெரிய தேவாலயங்களின் அம்சங்களுடன் முற்றும் கருங்கல்லால் கட்டப்பட்டுள்ளன. மடம் கோவிலைக்காட்டிலும் சிறியதாயிருந்தாலும், விசாலமான முன்கட்டு, சிற்ப வேலைகள் செய்யப்பட்ட கற்கம்பங்களுடன் கோவிலின் முன் மண்டபத்திற்கு வடபாகத்தில் அமைந்துள்ளது. கோவிலினுள்ளே புகுவார் மடத்தைக் கவனியாது செல்லமுடியாது.

அடிமை நாட்டின் துயரங்கள் பல்வகைப்பட்டன. பொருட்செல்வம் குறைந்து வறுமை குடிகொண்டு மக்களை வாட்டுவது ஓர்புறம். நாட்டின் கலைச்செல்வம் நாளுக்குநாள் குன்றியதோடுமட்டுமல்லாமல், கலையின் திறத்தையும், அழகையும் அறியக்கூடப் பயிற்சியில்லாமல் கேவலம் மிருகங்களைப்போல மக்கள் வாழ்க்கை நடத்துவது மற்ருேர்புறம். திருநெல்வேலி ஜில்லாவிலும், மதுரை முதலிய இடங்களிலும் கருங்கல்லில் சிற்பவேலை வெகு அருமையான வேலைப்பாட்டுடன் செய்யப்பட்டிருக்கிறது. கண்ணிற்கு எட்டாததும், மனத்திற்கடங்காததும், எல்லையற்று, ஆதியும் அந்தமுமில்லாத பராபர வஸ்துவைக் கடவுளெனச் சிந்தையில் வைத்து அதற்கென எண்ணற்ற செல்வத்தையும், திறனையும் செலவுசெய்து கட்டப்பட்ட கோயில்களிலே; இந்தக்கலைச்செல்வம் காலத்தை எதிர்த்துப் போராடிநிற்கிறது. இவைகளின் அருமையைத் தற்சமயம் நமது நாட்டார் அறிந்தாரில்லை. அதுமட்டுமன்று. இந்த அருமைச் சிற்பங்கள் துவேஷ புத்தியால் அழித்த அன்னியர்களுடைய கொடுஞ் செயலினின்றுமட்டில் அவதிப்படவில்லை. நாம் இக்காலத்தில் இந்தச்சிற்ப விநோதங்களை அறியமுடியாமல் போனதுதவிர, கோவிலை அழகு படுத்திச் சுத்தப்படுத்தும் முறையில், வர்ணச் சுண்ணும்புப் பட்டை அடித்துப் பிம்பங்களின் உருவத்தைச் சிதைத்து மறைத்துச் செய்துவரும் அறியாமையை என்னவென்று சொல்வது? இக்கொடுமையை வானமாமலைக் கோயிலில் கண்ட என்மனம் எவ்விதத் துன்பமடைந்ததெனச் சொல்லிமுடியாது. கலைஞானமே தனது தாயகமாகக்கொண்ட நம் நாட்டைவிட்டு இக்கலை எப்படிப் பறந்தோடிவிட்டதென்பதற்கு இவையெல்லாம் அத்தாட்சிகள். நாங்குநேரியின் அழகையும், மக்களின் அறியாமையையும் ஒருவாறு மநோராஜ்யம் செய்துகொண்டு நான் தங்கியிருக்கும் வீட்டில் தூங்கியும், தூங்காததுமாகப் பகல் வேளையில் ஓய்வெடுத்துக்கொண்டிருக்கும் பொழுது, சற்று வயதுசென்ற ஒருவர் வெகு வினயத்துடன் எனதருகில் வந்தார், நெற்றியில் நல்ல பட்டை நாமம். நீர்க்காவியேறின பஞ்சகச்சவேஷ்டி. அதன்பேரில் அதே நிறமுள்ள உத்தரீயம். இவைகளுடன் காட்சியளித்தார்.

"எங்கே வந்தீர்கள்" என்றேன்.

"புருஷாகாரம்" என்ருர். எனக்கு ஒன்றும் புரியவில்லை. இதுவரையில் பலவித காரணங்களுக்காக ஏதாகிலும் ஒருவித உதவியைப்பெற வரும் மனிதர்களை நான் பார்த்திருக்கிறேன். ஒருவராகிலும் "புருஷாகாரம்" என்று சொல்லியதில்லை. "அப்படியென்ருல் என்ன" என்றேன். அதற்கு எனக்குப் புரியாதவிதமாக ஒரு சம்ஸ்கிருத சுலோகததைச்சொல்லி வியாக்யானம் சொல்லத்தொடங்கினுர். "முடிவில் தாங்கள் கேட்பது யாசகம்தானே" என்றேன். "ஆம்" என்று சொல்லாமல், முகக்குறிப்பால் அதுதான் எனச் சமிக்ஞை செய்தார். என் அகராதியில் "புருஷாகாரம்" என்ருல், மறைமுகமாக யாசகம் கேட்பது என முடிவு செய்துகொண்டேன். "சாயங்காலம் பெருமாள் சேவைக்காகக்கோயிலுக்கு வரப்போகிறேன். அங்குப் பார்த்துக்கொள்ளலாமே" என்றேன். சரியென்று சொன்னவர் நான் இரவு கோவிலுக்குப்போயிருந்தபொழுது, அங்கே என்கண்ணிற்குத் தென்படவில்லை. "புருஷாகாரம்" மறைந்து போய்விட்டது.

கோவிலைச்சுற்றி நான்கு தெருக்கள். இதில் அநேகமாகத் தென்கலை நாமம் போடும் ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய வீடுகள். எல்லோரும் கோவிலையும், மடத்தையும் நம்பிக் காலம் கழிப்பவர்கள். நான் போயிருந்தபொழுது ஜீயர் சுவாமிகள் ஊரிலில்லை. ஸ்தல யாத்திரை செய்துகொண்டு வருவதற்காகத் "திருக்குருகூர் மாறன்" என்று பெயர்பெற்ற வேளாளர் குலத்தில் பிறந்த ஸ்ரீ நம்மாழ்வாரின் அவதார ஸ்தலமாகிய ஆழ்வார் திருநகரிக்குப் போயிருப்பதாகக்கேள்விப்பட்டேன். தமிழ்வேதமாகிய திருவாய்மொழிக்கு மூலகர்த்தாவாகிய நம்மாழ்வாரின் அவதார ஸ்தலம் தமிழ்நாட்டு வைஷ்ணவர்களுக்கு ஓர் புனித க்ஷேத்திரம். வானமாமலை ஜீயர் ஸ்வாமிகள் அந்த க்ஷேத்திரத்திற்குச் சென்றிருப்பது எதற்காக என்பது எனக்குத் தெரியாது. ஆனுல், அன்று காலையில் அந்த ஊர் மாஜிஸ்ரேட்டால் ஜீயர் ஸ்வாமிகள் பேரில் 144 நெம்பர் சட்டப்படி தடை உத்தரவு போடப்பட்டிருக்கிறதென தினசரிப் பத்திரிகைகளில் கண்டேன். பாவம்! ஜீயர் ஸ்வாமிகள் காங்கிரஸ் வாதியல்லர். புரட்சி இயக்கத்தில் ஈடுபட்டவரில்லை. பொதுஉடைமைக் கட்சியைச்சேர்ந்தவருமில்லை. ஆழ்வார் திருநகரிக்கோவிலுக்குள் முதல் தீர்த்த மரியாதைக்காகப் போகக்கூடாதென்று தடை உத்தரவு. அதிகாரிகளிடம் தடை உத்தரவு கோரித்தடுத்தவர் ஆழ்வார் திருநகரியிலுள்ள எம்பெருமானுர் ஜீயர் ஸ்வாமிகள். இரு சுவாமியார்களும் தென்கலை ஸ்ரீ வைஷ்ணவர்கள். கலை எப்படியிருந்தாலென்ன? மனித வர்க்கத்தில் குணக்கேடு உண்டானுல், எந்தெந்தச்சமூகப் பாதுகாப்பிற்காக ஏற்படுத்தியிருக்கும் கட்டுப்பாடுகளும் சமூக கேவலத்திற்கு உபயோகமா

கிறது. இதற்குக்கட்டுப்பாடுகளின்பேரில் பழி சுமத்துவதில் பயனில்லை. மனிதனுடைய வீழ்ச்சியே அடிப்படையான காரணம்.

காலஞ்சென்ற வானமாமலை ஜீயருடைய புதல்வர் ஒருவர் என்னைச் சந்தித்தார். அவரிடம் இந்தச் சண்டைக்குக் காரணமென்னவென்று கேட்டேன். அவர் சொல்லியதைக் கேட்க என்மனம் வெதும்பிப்புண்ணுற்றது. வானமாமலைக்கு மேற்கே எட்டுமைல் தூரத்திற்கப்பால், திருக்குறுங்குடி என்று ஒரு க்ஷேத்திரம் இருக்கிறது. அங்கிருக்கும் ஓர் வைணவ மடத்தில் இருக்கும் ஜீயருக்கும், வானமாமலை ஜீயருக்கும் பரம்பரையாக மனத்தாங்கல். அவர் இருவருக்குள் யார் மற்றொருவரைவிட உயர்ந்தவர் என்ற சச்சரவு. ஆழ்வார் திருநகரி க்ஷேத்திரத்தில், யாருக்கு முதல் தீர்த்தமோ அவர்கள்தான் உயர்ந்தவர் என்று ஒரு எண்ணம். ஆகையால், வானமாமலைஜீயருக்கு முதல் தீர்த்தம் கொடாமல் தடுப்பதில் திருக்குறுங்குடி ஜீயருக்கு ஒரு பெருமை. அதற்காக, ஆழ்வார் திருநகரியிலிருக்கும் எம்பெருமானார் ஜீயருக்குச் சகலவித உதவியையும் கொடுத்து, வானமாமலையாருக்கு மரியாதை நடக்காமல் தடுக்க முயற்சி. இதற்குக் கோர்ட்டு, வக்கீல், 144 செ. கிரிமினல் சட்டம் எல்லோரும் உதவி. நாடு இருக்கும் நிலையில் வாழ்வதா இறப்பதா என்ற கவலை மக்களைப் பிடித்து ஆட்டுகிறது. கடும்போர் ஓர் புறம். பஞ்சம், விலைவாசி உயர்வு மற்றோர் புறம். ஏழைகளுடைய பரிதாபகரமான நிலையும், உணவுப் பொருள், உடை முதலியவை கிடைக்கப் படும்பாடு, இவைகள் ஒன்றும் மடங்களில் சந்நியாசியாக, யானை, குதிரை, ஒட்டை, பல்லக்கு முதலிய ஆடம்பரங்களுடன் வீற்றிருக்கும் பீடாதிபதிகளுக்குக் கவலை கொடுக்கவில்லை. யாருக்கு எந்தக்கோவிலில் முதல் தீர்த்தம், கோவிலில் சுவாமி சன்னிதானத்தில் ஒரு தரம் நமஸ்காரம் செய்வதா, அல்லது பல தடவை செய்வதா இம்மாதிரியான பூசல்களில், நமது பெரியார்களெனப்படுவோர் காலங்கழிக்கும் நிலை ஏற்பட்டிருப்பதைப் பார்க்கும்பொழுது, அழுவதா, நகைப்பதா, என்பது விளங்கவில்லை. வானமாமலை ஜீயரைப்பற்றியமட்டில் தமக்கு ஆழ்வார் திருநகரியில் முதல் தீர்த்தம் கிடைத்துவிட்டால் வைணவ சமூகமே கடைத்தேறிவிடுமென எண்ணம் போலிருக்கிறது. நமது மதமும், அதைப் பாதுகாக்க ஏற்பட்டுள்ள அதிகாரிகளின் மனப்பான்மையும், பாமர மக்களுக்கு எவ்விதம் உபயோகிக்கப் படுகிறதென்பதற்கு இந்த க்ஷேத்ரவாசிகளின் பொழுதுபோக்கு ஓர் அத்தாட்சி. ஸ்தல யாத்திரை சென்றிருக்கும் ஜீயர் இந்தத் துவந்துவ யுத்தத்தில் ஆழ்வார் திருநகரியில் ஈடுபட்டிருந்தாலும், வானமாமலை வைணவ வாசிகள் யாதொருகுறைவில்லாமல் சுகஜீவனம் செய்துவிடுகிறார்கள். பொது உடைமைக் கட்சிக்காரர்கள், எப்பொழுதும் ரஷ்யாவில் நடைபெறும் இயக்கத்தைப்பற்றி, நமது நாட்டினருக்குப்பிரசாரம் செய்துவருகிறார்கள், ஆனால், வானமாமலையில் நடைமுறையில் கையாண்டு வரும் பொது உடைமைக் கொள்கையைப்பற்றி அவர்களுக்குத்தெரியாது, இந்த ஊரில் நான்கு தெருக்களிலுள்ள வைணவர்கள் வீட்டிலும், தினந்தோறும் அடுப்புமூட்டிச் சமையல் செய்து உண்ணும் வழக்கமே கிடையாதெனக் கேள்விப்பட்டேன். நாளொன்றுக்கு இரண்டு தெருவார் வீதம், மாறி மாறி ஒரு நாள் விட்டு ஒரு நாள், எல்லோருக்கும் ஜீயர்மடத்தில் சாப்பாடு நடக்கிறது. ஆண்பாலார் எல்லோருக்கும் சாப்பாடு உண்டு. பெண்ணாகப் பிறந்தோர் பட்டினிகிடப்பதாகத் தெரியவில்லை. அவர்களுக்கும் மடத்துச்சாப்பாடு ஏதாகிலும் ஒரு வழியாக நடக்கிறதெனத் தோன்றுகிறது. எதற்காக இவர்களுக்குத் தர்மச்சாப்பாடு. இவர்கள் மடத்திற்கோ அல்லது கோவிலுக்கோ, அல்லது ஊராருக்கோ என்ன சேவை செய்வதற்காக இந்தக் கவலையற்ற வாழ்வு ஏற்பட்டிருக்கிறதெனத் தெரியவில்லை. பட்டையாக நாமம் போடுவதற்காகத்தான் தற்சமயம் நடந்துவருவதாக நான் நினைக்கிறேன். வானமாமலை மடத்திற்கு வருஷாந்தரம் நெல் வரும்படி மாத்திரம் ஐயாயிரம் கோட்டை வரப்பாடு என்று கேள்வி. இப்பொழுது விற்கும் விலையில் வருஷமொன்றிற்கு சுமார் லக்ஷ ரூபாய் வருமானம். இது தவிர ரொக்க வரும்படியும் ஏராளமாக இருக்கிறதாம். இவ்வளவும் உலகத்தைத் துறந்த ஒரு சந்நியாசிக்கு என்பதை நினைத்தால், அவருடைய இனத்தைச் சேர்ந்த வைஷ்ணவ நாமதாரிகள் எல்லோரும், ஏன் அந்த வருவாயைப் பங்கிட்டு உண்ணக் கூடாதென்றே தோன்றுகிறது. சமைத்து நல்ல பக்குவப் படுத்தின உணவு—பலவித ருசியுடன் சுவாமிக்கு நிவேதனம் செய்த உணவு—வயிறு கொள்ளுமட்டும் உண்ணக் கிடைக்கிறது. சண்டையும் பஞ்சமும் அவர்களை என்ன செய்யமுடியும்?

வானமாமலை மடத்தைச் சேர்ந்த பரிஜனங்கள் அக் கோவிலைச் சுற்றியிருந்து மடத்தையும் கோவிலையும் உண்டு வருகிறார்கள். ஜீயர்பதவியும் அடுத்தடுத்து அவ்வூராருக்குத்தான். ஆனால்' இவர்களில் பணக்காரர்கள் இருப்பதாகத் தெரியவில்லை. எல்லோரும் எளிய வாழ்வில் ஈடுபட்டிருப்பதாகவே தோன்கிறது. தமிழ் வேதம், சம்ஸ்கிருதம் இவைகளில் பாண்டித்யமுள்ளவர்கள் வெகு சிலரும் இருக்கிறார்கள். ஒருகால் சாப்பாட்டிற்குக் கஷ்டப்படும் காலம் எனக்கு ஏற்பட்டால், வானமாமலையில் போய்ச்சுக வாழ்வு வாழ முடியுமோ என்கிற எண்ணம் உண்டாகிறது. வயிற்றுப் பிழைப்பிற்காகப் பட்டை நாமமும் போடலாம். அப்படிப் போட்டுக்கொண்டாலும், அம்மடத்தை அண்டியிருப்பவர்கள் என்னை அவர்கள் கோஷ்டியில் சேர்த்துக்

கொள்ளுவார்களா என்பது சந்தேகம். ஆனாலும் பொதுஉடைமைத் தர்மம் அக்கூட்டத்தினருக்குள் கையாளப்பட்டு வருகிறது உண்மைதான்.

மற்றக் கோவில்களில் பார்க்காத ஓர் நூதன விசேஷம் இந்த ஊர்க் கோவிலில் கண்டேன். எண்ணெய்க் கிணறு என்று சொல்லப்படும் ஓர் தொட்டி, அதில் வெகுகாலமாகச் சேகரிக்கப்பட்ட நல்லெண்ணெய் இருந்துவருகிறது. அது குறையாமலிருப்பதற்காக ஒரு வழக்கமும் நடைபெறுகிறது. எண்ணெய்க் கிணறு பூட்டிடப்பட்டு, பந்தோபஸ்திலிருக்கிறது. யார்வேண்டுமானாலும் அனுமதியின்பேரில் எண்ணெய் எடுத்துக்கொள்ளலாம். ஆனால், எடுக்கும் எண்ணெயைக் காட்டிலும் சரிபங்கோ அல்லது அதிகமாகவோ, புதிய நல்லெண்ணெயை ஊற்றிவிட்டுப் பழைய எண்ணெயை எடுத்துக்கொள்ளவேண்டும். இதனால், கிணற்றில் எண்ணெய் குறையாமலிருந்து வருகிறது. இதை மேலுக்கு உபயோகப் படுத்தினால், சகலவித நோய்களும் தீர்ந்துவிடுகிறதாம். குஷ்டரோகிகள்கூடக் குணமடைந்துவிடுகிறார்களாம். எண்ணெயில் துர்நாற்றமொன்றுமில்லை. சற்றுச் சிவப்பு நிறமாக இருக்கிறது. தோதாத்ரிநாதனுடைய திருவருள் பெற்றது. நோயாளி உலகத்தில் இதன் பெருமையைப்பற்றி அதிகம் தெரியாதுபோலிருக்கிறது, "சகல வியாதி நிவாரண மருந்துகள்" பெறும் விளம்பரம் இந்தத் தெய்வீக எண்ணெய் பெறவில்லை. நான் சிறுவனாக இருக்கும் பொழுது எங்கள் ஊரில் "நம்பிக்கை டாக்டர்" என்று ஒருவர் இருந்தார். அவர் வைத்திய சாலைக்கு நம்பிக்கை வைத்தியசாலையென்று பெயர். அவர் நோய்க்கு வைத்தியம் செய்வதில் தேர்ந்தவரோ இல்லையோ, அதைப்பற்றி ஒன்றும் சொல்ல இயலாது. "நம்பிக்கை காரணம் வியாதி நிவாரணம்" என்று கொட்டை எழுத்துக்களில், அவர் வைத்திய சாலையின் தலைவாயிலில் ஒரு விளம்பரம் காணப்படும். வியாதி தீராவிட்டால் நம்பிக்கை குறைவு, என்ற முடிவிற்கு நோயாளிகளே வைத்தியர் பேரிலும், அவர் முறையின்பேரிலும் புகார் செய்யாமல், காரணத்தைத் தெரிந்துகொள்ளலாம். இந்த முறையை நாங்குநேரி எண்ணெய்க்கு வைத்துப் பார்த்தால், தோத்தாரிநாதனிடத்து நம்பிக்கையிருந்தால், எந்த நோயையும் இந்த எண்ணெய் நீக்கிவிடும். அப்படி நீங்காவிட்டால், தோதாத்ரிநாதனிடம் நம்பிக்கை குறைவாக இருப்பதாக முடிவு செய்துவிடலாம். என்னுடன் கலியாணத்திற்கு வந்திருந்தவர் ஒருவர் இந்த எண்ணெயை ஒரு புட்டி எடுத்துக்கொண்டு வந்திருக்கிறார். அதன் சக்தியை அவரிடம் நான் இன்னும் கேட்டுத் தெரிந்துகொள்ளவில்லை. ஆனாலும் தோதாத்ரிநாதனிடத்தும், அந்தத் தேவஸ்தானத்தைப் பரிபாலிக்கும் ஜீயர்ஸ்வாமிகளிடத்தும், எனக்கு நம்பிக்கைக் குறைவே கிடையாது. அந்த ஊரிலிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் கிடையாது. தினந்தோறும் பல்லாண்டுகளாக உணவளிக்கும் தெய்வத்தினிடத்தும், சுவாமிகளிடத்தும் நம்பிக்கை எவ்விதம் குறையக்கூடும்!

தொடர்பு வைத்துக் கொள்ளவேண்டிய கம்பெனி

ஹிந்துஸ்தான்

கோவாபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் சொஸைடி லிமிடெட்,

மன்னன் மகுடத்தினும் சிறப்புடைய கிரீடத்துடன் விளங்கும் கம்பெனி. நற்பெயரே கிரீடமாக விளங்குகிறது.

முன்னேற்றத்தின் நிலை.

1942-ஆண்டில் புதிய பாலிஸிகள்	ரூ. 2,88,05,001
அமுலிலுள்ள மொத்த வியாபாரம்	ரூ. 19,36, 75, 434
ஆயுள் அஷ்யூரன்ஸ் நிதி	ரூ. 4,72,89,810
மொத்த ஐவேஜிகள்	ரூ. 5,18,19,442

இதுவரை பிரதிநிதிகளில்லாத இடங்களில்

ஏஜண்டுகள் தேவை.

விபரங்களுக்கு எழுதவும்:—

மதராஸ் பிராஞ்சு: "ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"

107. அரமனைக்காரத்தெரு, ஜீ. டி. மதராஸ்.



உதயபுரி ஸ்நான கட்டம்

ஹமாமின் புது வடிவத்தைக் கவனிக்கவும். அதன் எடை முன்போலவேதான் இருக்கிறது.

காலை ஸ்நானத்திற்காக ஸ்நான கட்டங்களுக்குச் செல்லும் உதயபுரி நாரீமணிகளின் சிங்கார உடைகள்மீது அருணோதய இளங்கதிர்கள் ஒளிவீசுகின்றன.

பாரத நாரீமணிகளின் எழில்வதனங்களும் காலைக்கதிரவனொளியில் திளங்கி விளங்குகின்றன. அவ்வெழிலுக்குக் காரணம் அவர்கள் தினம் தேய்த்துக்குளிக்கும் குளுமையும் இனிமை நறுமணம் கமழ்வதுமான ஹமாம் ஸோப்பே தான்!

A TATA PRODUCT

ஹமாம்

உங்கள் ஸ்நானத்திற்குகந்த பெரிய ஸோப்பு.

டாம்கோ விற்பனை இலாகா,
19, வாணியர் தெரு,
தபால் பெட்டி நெ. 31, மதராஸ்.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்,

டாடாபுரம் & பம்பாய்.

கிரகப் பிரவேசம்

ரா. ஸ்ரீ. தேசிகன்

பொழுது புலர்ந்தது. அம்பிகாபுரத்தில் ஒரு தோப்பின் நடுவில் புதிதாய் அமைக்கப்பட்ட கட்டிடம் காலை எழிலில் தோய்ந்துகிடந்தது. அதன் பலசாயக் கண்ணாடி ஜன்னல்கள் இளங் கதிர்களில் ஒளி வீசிக்கொண்டிருந்தன. கட்டிடத்தில் புதிதாய்ப் பூசப்பட்ட வர்ணத்தின் மணத்தைக் காற்றுக்கவர்ந்துவந்தது. அக்காலை அமைதியில் இருவர் பேசுங்குரல் கேட்டது.

"என்ன, விச்வநாத கனபாடிகள், ஏதோ 'கம்' என்று ஒரு வாசனை மூக்கைத் துளைக்கிறதே, அதென்ன?" என்று கேட்டார் கிருஷ்ணசாஸ்திரிகள்.

"அது தெரியாதா, இப்பொழுதுதான் கட்டடத்திற்கு வர்ணம் பூசியிருக்கிறார்கள். இன்னும் உலரவில்லை" என்று பதில் அளித்தார் விச்வநாத கனபாடிகள்.

"அப்படியா, சரி இதற்கு எப்பொழுது கிரகப்பிரவேசம் செய்யப்போகிறார்கள்? உங்களுக்குத் தெரியுமோ?" என்று வினவினார் கிருஷ்ணசாஸ்திரிகள்.

"ஏதோ தை மாஸம் 25-ஆம் தேதி என்று ஊரில் சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆனால் கிரகப்பிரவேசம் நடக்கிறபொழுது பார்ப்போம்"

"என்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்? வீட்டைக்கட்டிக் கிரகப்பிரவேசம் செய்யாமலிருப்பார்களா?"

"ஏதாவது ஒருவிதமான கிரகப்பிரவேசம் நடக்கும்"

"அதென்ன, புதிர் போட்டதுபோலப் பேசுகிறீர்கள்"

"புதிர் ஒன்றுமில்லை. இந்த வீட்டு எஜமானர் சுந்தரம் ஐயர் இருக்கிறாரே, அவர் ஒரு விசித்திர புருஷர். அவருடைய சித்தவிருத்தியோ ஓர் அலாதியான விருத்தி. தயையினால் சாஸ்திர விரோதமான காரியங்களைச் செய்துவிடுவார்"

'தயைக்கு விரோதமாய்ச் சாஸ்திரமிருக்குமோ'

'இருக்குமோ' என்று கேட்கிறீர்களே. அவர் பண்ணின காரியம் உமக்குத்தெரியாதா? ஒரு நாள் சிராத்தத்திற்குவேண்டிய காரியங்களெல்லாம் நடந்துகொண்டிருந்தன. ஹரிஜன் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவன் 'அம்மா' பசியென்று கொல்லைப்புறத்தில்வந்து கத்தினான். பண்ணப்பட்டிருந்த பண்டங்களை அப்படியே அவனுக்குப்போடும்படி கட்டளை இட்டுவிட்டார் அவர்"

"ரொம்ப ஆச்சரியமாயிருக்கே"

"இப்படித்தான் அவருடைய ஒவ்வொரு காரியமும்"

"இந்தவீடு கலியாணத்திற்கோ, கருமாந்திரத்திற்கோ யாருக்குத் தெரியும்?"

ஃ ஃ ஃ

இரவு பத்துமணி இருக்கும்; ஊர் ஓசை அவிந்துவிட்டது. ஒரு வீட்டு மாடியில் இருவர் பேசிக்கொண்டிருந்தனர். அவ்வேளையில் கீழே காற்றோட்டமில்லாத ஓர் அறையில் ஒரு மங்கிய விளக்கெரிந்தது. முகமோதேய்ந்துவிட்டது. கண்களில் ஒளி மாய்ந்துவிட்டது. வியாதி முற்றிப்போய்விட்டது. அதில் அடிபட்டு ஒருவர் அசைவற்றுப் படுத்துக்கிடந்தார். குழந்தைகள் கவலையற்றுத் தூங்கிக்கொண்டிருந்தன. ஆனால் இருவர் விழிகள் மூடவில்லை: கவலை தேக்கிய இரண்டு முகங்கள் ஒன்றையொன்று நோக்கின.

"ஏதோ மாடியில் பேசிக்கொள்ளுகிற விஷயம் நம்முடைய விஷயமாயிருக்கே அண்ணா," என்றாள் அம்புஜம்.

"அது மாதிரிதானிருக்கிறது என்றார் ஸ்ரீநிவாச ஐயங்கார்.

இருவரும் உற்றுக் கேட்டார்கள்.

"டாக்டர் வந்தாரே, என்ன சொன்னார்?" என்றாள் பார்வதம்.

"இன்னும் இரண்டு நாள் மேல் தாங்காது என்றார் டாக்டர்" என்று பதில் கொடுத்தார் கோபால ஐயர்.

"அந்தப் பிராமணன் செத்துக் கிடந்தால் என்ன பண்ணுகிறது?"

"இப்பொழுது அவர்களைப் போகச்சொல்லு கிறதா? அப்படிச் சொல்லுவேனு? அவ்வளவு தெரியாதா எனக்கு?"

அங்கே போய்விட்டுக் கரிக்காலோடு அந்த அம்மா நம்மாத்தில் நுழையக்கூடாது. நுழைந்தால் நம்முடைய வீட்டுக்கு ஆகாது.

"அவர்கள் எங்கே போவார்கள்?"

"எங்கேயானும் போகட்டும். நம்மாத்துக்கு அவள் வரப்படாது. ஊரிலேயே கேட்டுப் பாருங்கள்."

"என்னமோ, எனக்குக் கஷ்டமாயிருக் கிறது."

"கஷ்டமோ என்னமோ, ஆகாததைச் செய்யலாமோ?"

"என்னமோ பார்ப்போம்."

நேரமாக இப்பேச்சு அடங்கிவிட்டது. ஆனுல் கீழே தமயனும் தங்கையும் பேசிக் கொண்டார்கள்.

"அண்ணு, அவர்கள் நம்மைப் போகச் சொன்னுல் என்ன பண்ணுகிறது? இந்த ஊருக்கு வந்து நாலு மாஸத்திற்கு மேலே ஆக வில்லை. அதற்குள்ளே வியாதியிலே விழுந்து விட்டாரே. உயிரோடே இருக்கச்சேயே அவர்கள் முடிவுகட்டிவிட்டார்களே"

"என்ன பண்ணுகிறது. அவர்களுக்கு நல்லது பொல்லாதது கிடையாதா? எந்த நேரத்தில் எது வரும் என்றதை யார்கண்டா. இவர்கள் வீடில்லாத போனுல் வேறு கிடைக்காமல் போய்விடுமா? இந்த ஊர் சுந்தரம் ஐயர் பிறர் துக்கங்கண்டு சகிக்கமாட்டாராம்; அவரைக் கேட்கிறேன்"

"பகவான் கண் திறந்து பார்க்கவேண்டும்."

கொஞ்ச நேரம் கழித்து இவர்களுடைய குரலும் ஊரமைதியில் கரைந்துவிட்டது.

ஃ ஃ ஃ

தை மாதம் 25-ஆம் தேதி. கிரகப்பிரவேசத்தையே கனவு கண்டுகொண்டிருந்த கனபாடிகளுக்கெல்லாம் ஏமாற்றம். அம்பிகாபுரத்தில் சுந்தரம் ஐயர் வீட்டில் தோரணத்தைக் காணும்; மேளதாளத்தின் மங்கல ஒலியைக் காணும்; பஞ்சாபகேச பாகவதர் கதையைக் காணும். அவ்வூர் பிரபுக்களின் வண்டி காடிகளின் தோற்றத்தைக் காணும். ஆனுல் ஓர் எளிய குடும்பத்திலே நிகழ்ந்த சாக்காட்டுச் சடங்குகளின் புகைதான் கட்டிடத்தின்மீது எழுந்தது.

"நீங்கள் சொன்னபடி ஆய்விட்டது விச்வநாதகனபாடிகளே" என்று சொல்லிக்கொண்டு போனுர் கிருஷ்ணசாஸ்திரிகள். அன்றிரவு சுந்தரம் ஐயர் என்றுங் காணுத மகிழ்ச்சியோடு படுத்துக்கொண்டிருந்தார். அவர் உள்ளக் கரைமீது உவகைப்பெருவெள்ளம் மோதி அடித்துக்கொண்டிருந்தது. வீட்டு வேலையை முடித்துக்கொண்டு, அன்னபூரணி அம்மாள் சுந்தரம் ஐயரிடம் வந்தாள்.

"என்ன, இப்படிப் பண்ணிவிட்டீர்களே? நம்முடைய குழந்தை ஹேமாவுக்குக் கலியாணம் செய்து கிரகப்பிரவேசம் செய்யலாமென்று நினைத்தேன்."

"நம்முடைய குழந்தையின் க்ஷேமத்தை உத்தேசித்தே செய்தேன்"

"நீங்கள் பேசுவது நிரம்ப ஆச்சரியமாயிருக்கே! இதுதானு க்ஷேமம்?"

"இதைவிட வேறு க்ஷேமம் உண்டா? நடந்தது உனக்குத் தெரியுமா? அந்த ஏழைப் பிராமணன் திடீரென்று போய்விட்டார். அந்த அம்மாளும் குழந்தைகளும் கஷ்டப்பட்டது உனக்குத் தெரியுமா? அவர்கள் மனம் சாந்தமடைந்ததே அந்தச் சாந்தம் நமக்குக் குறைவில்லாத க்ஷேமத்தைக் கொடுக்காதா? என்னமோ, கிரகப்பிரவேசம் என்கிறுயே, கிரகப்பிரவேசத்தின் உண்மை உனக்குத்தெரியுமா?"

"தெரியாது, சொல்லுங்கள்."

"பெரியவர்களின் காலடி படுகிறதே. அதைத்தான் வீட்டிற்கு மங்கலம் என்று சொல்லுவார்கள்."

"உத்தரக்கிரியைகள் நடந்தால் மங்கலமாகுமா?"

"இவ்விஷயத்தைப்பற்றி என் மனதில் உண்டான உண்மையைச் சொல்லுகிறேன். பிறருடைய துக்கத்தைச் சேர்ந்து அனுபவிக்க முடியும்; பிறருடைய சந்தோஷத்தைச்சேர்ந்து அனுபவிக்க முடியாது. எத்தனை சுத்தமான மனிதர்களாயிருந்தாலும், முதல் முதல் பொருமைதான் அவர்கள் மனதில் எழும். நம்முடைய வீட்டிற்கு அவர்களை வரவழைத்தால், உண்மையிலேயே அவர்கள் ஆசீர்வதிக்க முடியாது. இப்பொழுது நம்முடைய வீட்டிற்கு யார் வருகிறுர்கள், தெரியுமா?"

"தெரியாது. சொல்லுங்கள்."

"பிதிர்க்கள், மரணம் என்ன செய்தது தெரியுமா? மரணத்தைக் காட்டிலும் மங்கலமான பொருள் உலகத்தில் இல்லை. அது அவர்களுடைய பொருமையை நீக்கிவிடுகிறது. பொருமை நீங்கிய பிதிர்க்கள் கிரகப்பிரவேசம் செய்கிறுள். நமக்கென்ன குறைவு? இதைவிடப் பவித்திரமான காரியமுண்டோ"

"என்னமோ பேசுகிறீர்கள் வேதாந்தம்? எனக்கு என்ன தெரியும் நான் ஒரு பெண்தானே" என்றுள் பர்வதம்.

இரவு வளர்ந்தது: சுந்தரம் ஐயர் மனத்தில் எத்தனையோ எண்ணங்கள் தோன்றி மறைந்தன.

அறத்திற்கும் வரம்புண்டு

க. சந்தானம்

●

சாவித்திரியின் மஹிமையால் புத்துயிர் பெற்ற சத்தியவான் தன் பெற்றோர்களோடும், மனைவியோடும் தன் நாட்டையடைந்து அரசுபுரியலானான். சாவித்திரியின் கீர்த்தி உலகெல்லாம் பரவிற்று. வீட்டிற்கு வீடு அவள் படத்தை வைத்துப் பூஜைசெய்தார்கள். கிராமங்களிலும் நகரங்களிலும் அவள் சிலையைப்பிரதிஷ்டை செய்தார்கள். வெகு தூரத்திலிருந்து அரசர்களும் பெரியோர்களும் வந்து அவளைத் தரிசித்து அவள் கற்பின் சிறப்பைப் பற்றி சத்தியவானிடம் புகழ்ந்தார்கள். இதைக்கேட்டுச் சாவித்திரி கர்வங்கொள்ளவில்லை. ஆயினும் தன் புருஷன் இப்புகழுரைகளால் சிறிதும் மகிழ்ச்சியடையாதிருந்ததைப் பற்றி அவளுக்குக் கொஞ்சம் வருத்தம்தான். செத்துப்பிழைத்த நாள் முதற்கொண்டு சத்தியவானுக்குத் தன்னிடம் பிரேமை குறைந்துவிட்டதோவென்று சந்தேகிக்கலானாள். உண்மையில் சத்தியவானைக் கவனித்த எவருக்கும் அவன் தன் அதிர்ஷ்டத்தைப்பற்றி மிகவும் சந்தோஷப்பட்டவனாகத் தோன்றவில்லை. தன்னுடைய காரியங்களையெல்லாம் ஒழுங்காகச் செய்துவந்தான். எல்லோரிடத்திலும் பிரியமாகவும் பணிவுடனும் நடந்துகொண்டான். ஆனால் தன் வாழ்வில் உற்சாகமற்றவன்போல் தோன்றிற்று. தரையில் அயர்ந்து நித்திரை செய்பவன் திடீரென்று அலைமோதும் கடலில் கண்விழித்தாற்போல் சிற்சில வேளைகளில் அவன் கண்களில் கலக்கம் காணப்பட்டது. அளவற்ற அமைதியை அனுபவித்தபின் அரச வாழ்க்கையும் அவனுக்கு அல்பமாகத் தோன்றிற்று.

நல்ல வேளையாகச் சாவித்திரிக்கு இதைப் பற்றிச் சிந்திக்க அதிக அவகாசமில்லை. யம தர்ம ராஜனிடம் நூறு பிள்ளைகளைக் கேட்பது சுலபமாகவிருந்தது. அந்தவரன் பலிக்க ஆரம்பித்தபொழுதுதான் தன் பிசகையறிந்தாள். முதல் கர்ப்பம் தோன்றியபொழுது, ஒருகால் காந்தாரியைப்போல் விசித்திர விதத்தில் நூறு குமாரர்களையும் பெற்றுவிடக் கூடுமென்று எண்ணினாள். ஆனால் அப்படியொன்றும் நடக்கவில்லை. இரட்டைக் குழந்தைகளைமட்டும் வருஷந்தோறும் பெற்றுவந்தாள். எவ்வளவு செல்வமிருப்பினும், வேலையாட்களிருப்பினும் இந்தப் பாரத்தை மற்றவரிடம் மாற்ற முடியாதன்றோ? குழந்தைகளை வளர்ப்பதிலும், குடும்ப பாரத்தைத் தாங்குவதிலும் தன் கவனத்தைச் செலுத்தவேண்டியிருந்ததால், புருஷனின் பொறுமையையும் இன்சொல்லையும் ஏற்று அவனது உண்மையான மனோபாவத்தை ஆராயப்புகவில்லை.

2

இவ்வாறு பல வருஷங்கள் கடந்தன. சத்தியவானின் பெற்றோர்களும் காலகதி அடைந்தனர். பிள்ளைகளும் பெரியவர்களாகி இராஜகுமாரர்களுக்குரிய எல்லா வித்தைகளிலும் தேர்ச்சியடைந்தனர். ராஜ்யமோ சிறிது. குமாரர்களோ நூறுபேர். ஆரிய தர்மத்தில் திக்விஜயம் செய்வது வீரர்களின் கடமை. இம்முறையை அனுசரித்துச் சாவித்திரியின்குமாரர்களும் பக்கத்து நாடுகளின் மீது படையெடுத்தனர். சில சமயங்களில் வெற்றிபெற்றார்கள்; மற்றக் காலங்களில் தோல்வியுற்றனர். வெற்றியிலும் தோல்வியிலும் புத்திரர்கள் அனைவரும் வீரசொர்க்கம் அடைந்தனர். இதைக்கண்ட பகைவர்கள் சத்தியவான் மீது படையெடுத்து வந்தனர். அவர்களை அவன் எதிர்க்கவில்லை. தன் மனைவியை அழைத்துக்கொண்டு மீண்டும் பழைய கானகத்தை அடைந்தான். அப்பொழுது அவன் கண்களில் புதியதோர் சோதி தோன்றிற்று. வெகுநாள் தாங்கமுடியாத சுமையைத் தூக்கிச் செல்பவன் அதை இறக்கி வைத்ததுபோல் நிம்மதி யடைந்தான். சாவித்திரியின் மனத்திலோ துக்கங் குடிகொண்டது. தன் மக்கள் இறந்ததும், அரசிழந்ததும் தன் கற்பின் குறையால்தான் என்று எண்ணினாள். தன் நாயகனுக்குப் பக்தியுடன் பணிவிடை செய்து ஒழிந்த நேரமெல்லாம் இறைவனைத் தியானம் செய்து வந்தாள்.

பிதுரார்ஜித சொத்தை இழந்துவிடலாம். ஆனால் பிதுரார்ஜிதகுணம் விடாதன்றோ? தந்தையைப்போலவே சத்தியவானும் தன் பார்வையிழக்கலானான். இதனால் அவன் வருந்தவில்லை. உள்ளத்தின் அமைதி ஊர்ஜிதமாயிற்று. சாவித்திரியின் சேவை அதிகரித்ததை நோக்கி, அவன் அவளுக்காகப் பெரிதும் இரக்கங் கொண்டான். ஆனால் விதியின் செயலையும், வினையின் பயனையும் மாற்றக்கூடுமோ? தன்னால் தடுக்கவொண்ணாத துன்பங்களைப்பொறுமையுடன் சகிப்பதே வாழ்வின் இறுதித் தத்துவமென்பற்கு மூர்த்திபோல் விளங்கினான்.

3

சாவித்திரிக்குத் திடீரென்று ஒருநாள் சுரம் கண்டது. அடுத்தநாள் அது கடுமையாகித் தன்

உயிருக்கே அபாயமென்று அவளுக்குத் தோன்றிற்று. சாவுக்குச் சாவித்திரி அஞ்சவில்லை. ஆனால் தன் கண்ணில்லாத புருஷனைக்காட்டில் ஆதரவின்றி விட்டுப்போகவேண்டுமேயென்று நடுங்கினாள். தவிர, தன் மனத்தில் பல வருஷங்களாகத் தோன்றிய சந்தேகத்தையும் சத்தியவானிடம் சொல்லித் தீர்த்துவிட வேண்டுமென்று நிச்சயித்தாள். அவனை மெதுவாகப் பக்கத்திலழைத்துக் கூறுவாள்

சாவி: நான் என்ன பாவஞ் செய்தேனோ, தெரியவில்லை. உங்களை இந்நிலைமையில் விட்டுவிட்டுப் போகவேண்டுமேயென்று என் மனம் புண்ணுகின்றது. நான் ஏதாவது தவறு செய்திருப்பின் இறக்குமுன் அதை எனக்கு எடுத்துக் காட்டி, மன்னித்தருளவேண்டும்.

சத்: ஆம், உண்மையறிந்து இறப்பதே உன் மறுமைக்கும் நல்லது. உலகில் கற்பின் மகிமையை ஸ்தாபித்தாய். ஆனால், உன் கற்பின் கர்வத்தால் அறத்திற்கும் வரம்புண்டு என்பதை அறியவில்லை. கற்பும், நட்பும், மற்ற எல்லாக்குணங்களும் இவ்வாழ்க்கையின் எல்லைகளுக்குள்ளேதான். மணம்புரிந்த நாள் முதற் கொண்டு யமன் வந்தழைக்கும் வரையில் என்னிடம் குறைவற்ற அன்புகொண்டு சேவை செய்ததாலேயே உன் கற்பு பூர்த்தியடைந்துவிட்டது. இறந்த என்னை இவ்வுலகத்திற்கு மீட்டுவந்தது உன் தவத்தின் சக்தியைக் காட்டிற்று. ஆனால் அது உன் கடமைக்கும் நன்மைக்கும் மீறியதாயிற்று. அதனால் விளைந்த தீமைகளை நீயே அறிவாய்.

சாவி: அப்படியானால் நீங்கள் இறப்பதை நான் கையாலாகாதவள்போல் பார்த்துக்கொண்டிருக்கவேண்டுமா? உங்களுடன் உடன் கட்டை ஏறியிருந்தால் மேலாக இருந்திருக்குமா?

சத்: அதுவும் வீண் பிரமை. மனிதருக்குள் பரஸ்பரக் கடமைகளுக்கு ஆதாரம் இவ்வுலக வாழ்க்கை. இயற்கையாலும், விதியாலும் ஒருவனது வாழ்நாள் முடிந்ததும், மற்றவர்களுக்கு அவன்பால் வேறு கடமையில்லை. உயிருள்ளளவும் அன்பும், ஆதரவும் அளித்து இறந்ததும் மறந்துவிடுவதே தர்மம்,

சாவி: ஆரியப்பெண்களுக்கு இது அறமாகுமோ? பதியே அவர்கள் தெய்வமன்றோ?. தெய்வம் மறைந்திருந்தால் அதை வழிபடாமல் விட்டுவிடலாமோ?

சத்: உண்மையை மிகுதிப்படுத்தினால் அது திரிந்து பொய்யாகும். கணவனும் மனைவியும் ஒருயிரும் உடலிரண்டும்போல் இருந்தால் குடும்பம் செழிக்கும். சமூகம் நிலைபெறும். வாழ்க்கையின் இன்பம் வளரும். ஆனால் அவர்கள் ஒன்றாகப் பிறப்பதில்லை; ஒன்றாகவும் இறக்கமுடியாது. சாவிற்குப்பின் அவர்களுடைய ஆத்மாக்கள் ஒன்று சேர்ந்திருக்கமுடியாது. இறந்தபிறகும் பழைய அன்பின் ஞாபகம் இருப்பது சகஜம். ஆனால் பிணத்தை வீட்டில்வைத்து எப்படி வாழமுடியாதோ, அப்படி செத்தவரையே மனத்தில் வைத்து வாழவுமுடியாது. உயிருடனிருப்போருக்கு அது தீங்கிழைப்பதாகும்.

சாவி: இன்னுமோர் கேள்விகேட்கச் சங்கோசமாக இருக்கிறது. நீங்கள் புத்துயிர்பெற்றபின் என்பாலுள்ள பிரேமை குறைந்துவிட்டதுபோல் தோன்றிற்று. இது உண்மையா?

சத்தி: ஆம். உண்மைதான். நான் இறந்து 6 மணி நேரத்திற்குப்பின் பிழைத்ததாகச் சொல்லியிருக்கிறாய். அக்காலத்திய ஞாபகம் ஒன்றுமில்லை. ஆனால் நினைவு திரும்பியதும் என் சுபாவமே மாறிவிட்டதுபோலிருந்தது. அயர்ந்து நித்திரைசெய்து விழிக்கும்போதுள்ள உணர்ச்சி உனக்குத் தெரியுமல்லவா? ஓர்புறம் உடலெல்லாம் மனமெல்லாம் களைப்பின்மை, மற்றோர்புறம் விழித்துக்கொள்ளுகிறோமே என்ற வேதனை. இதை ஆயிரம் மடங்காகப் பெருக்கிக் கற்பனை செய்துகொண்டால் என் இப்போதைய நிலைமை ஒருவாறு விளங்கும். அன்றுமுதல் இந்த வாழ்க்கையில் எனக்குப் பற்று அற்றுவிட்டது. என்னைச் சுற்றியுள்ள சம்பவங்கள் ஏதோ கனவில்காணும் காட்சிகள் போலிருந்தன. என் மரணத்திற்குமுன் உன்னைக்கண்டபோதெல்லாம் ஓர் அடங்கா ஆனந்தமும், ரத்தக்கொதிப்பும் உண்டாகும். திரும்பிப் பிழைத்தபின் நீ ஒரு அழகிய சித்திரம்போல் காணப்பட்டாய். கண்டால் இலேசான இன்பமுண்டாயிற்று. பிரேமைப் பிரவாகம் எங்கேயோ அடியோடு வறண்டு போயிற்று.

சாவி: விதியை வெல்லமுயன்று பெரும் தவறிழைத்துவிட்டேன். அதற்கு இப்பொழுது நான் செய்யவேண்டிய பிராயச்சித்தமென்ன? திரும்பவும் தர்மராஜனைக் கூப்பிடலாமா?

சத்: எதற்கு?

சாவி: என்னுடன் தங்களையும் எடுத்துப் போகும்படி பிரார்த்தனை செய்வேன். இந்நிலைமையில் உங்களைத்தனியாக எப்படி விட்டு விட்டுப்போவேன்?

சத்: ஒரு பிழைக்கு மாற்று மற்றோர் பிழையல்ல. என்னைப்பற்றி நீ கவலை கொள்ளாதே. உயிருள்ளளவும் மனப்பூர்வமாகச் சேவை செய்தாய். உன்கடன் பூர்த்தியாகிவிட்டது. பரம்பொருளைத் தியானம்செய்து முக்தியடையக்கடவாய். எனக்கு ஒரு தீங்கும் நேரிடாது. பிழைக்க வேறு வழியில்லாதிருந்தால், தர்மராஜன் தானே வந்து அழைத்துப்போவான்,

அப்பொழுது 'சாவித்திரி தேவிக்கு ஜே' என்ற சத்தம் கேட்டது. சிறிதுநேரத்தில் ஓர் இளைஞர் கூட்டம் தர்ம தம்பதிகள் இருக்குமிடம் நெருங்கிற்று. அருகில்வந்து எல்லோ

வஸுந்தராதேவி	... அவுன்ஸ்	1
ரஞ்சன்	... ,,	½
தியாகராஜ பாகவதர்	... ,,	1
ராஜகுமாரி	... ,,	½
கிருஷ்ணன் மதுரம்	... ,,	1
மீதி சில்லரை நக்ஷத்திரங்கள் (aqua add)	... ,,	2

இந்த மருந்தைச் சாப்பாட்டுக்குப்பிறகு ஒரு நாளைக்கு மூன்று முறை 98 வாரங்களுக்குச் சாப்பிட்டால் வசூல் என்கிற வியாதி தீர்ந்து கலாபிவிருத்தி என்கிற தாதுவுக்குப் புஷ்டி ஏற்படும் என்று பிராணரக்ஷாமிருத சிந்து என்கிற புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் தெரிந்துகொள்ளாமல் நீ மங்கம்மா சபதத்திற்குப்போய் அதிருப்தியுடன் வந்து சேருவாய் என்றான்.

அதுபோல்தான் ஆயிற்று; நான் பட்டபாடு நாயும் படாது. கல்கத்தா பம்பாய் மாதிரி முன்பாகவே ஸீட் ரஸர்வேஷன் உண்டா? கிடையாது! டிக்கட்டுகளை வாங்கிக் கொண்டு வெளியே வந்தால் கஜேந்திர மோக்ஷம்தான். அது போகட்டும்-படத்தில் என்ன விசேஷம் என்பீர்களோ? முதலாவது, கார்மன் மிராண்டா மங்கம்மாவை எப்பொழுது சந்தித்தார்? தென் இந்தியாவில் இடுப்பை வளைத்து வளைத்து ஆடும் ஆட்டம் எப்பொழுதாவது இருந்ததா? அடடா! அந்த வஸுந்தராதேவிதான் "என் நெத்தைப்பார், என் மையத்தைப் பார்" என்று சொல்லிக்கொண்டே, என்ன ஆட்டம் ஆடுகிறார். அம்மாஞ்சி சொல்லுகிறான்—"வேறு யாராவது இந்தமாதிரி ஆடவேணும் என்றால், இடுப்பைச் செதுக்கி, உள்ளே பால் பேரிங்க்ஸ் (ball-bearings) வைத்து, மாபிலாயில் பி. பி. (B. B.) ஒரு காலன் கொட்டிக்கொண்டு, ஆடிப்பார்த்தால் ஏதாவது முடியலாம்" என்கிறான். வஸுந்தராதேவி மகா சாமர்த்தியசாலி என்பதில் சந்தேகமேயில்லை—மங்கம்மா சபதம் பிரமாதமான படம் என்பதிலும் சந்தேகமில்லை. ஆனால் அதைப் பார்க்கக்கூடியவர்கள். ரொம்ப பெரிய மனுஷாள் (ஏனென்றால் அவாள்தான் சிறிது சுலபமாக டிக்கட்டுகள் வாங்கிக்கொண்டோ, வாங்கிக்கொள்ளாமலோ உள்ளே போகலாம். பார்த்துவிட்டு, ஆஹா, பேஷாயிருக்கு என்று, வாய் வாழைப் பழமாகச் சொல்லிவிட்டு வரலாம்), அல்லது ரொம்ப துணிந்தவர்கள் (ஏனென்றால் அடிதடிக்கு அஞ்சாமல் டிக்கட்டு வாங்கி உள்ளே நுழையலாம்)—நடுத்தரமாக நாணயமான மனுஷாள் போனாலோ, வெளியேவரும்போது "என்ன ஸார், ரொம்ப சிரமமாய் போச்சு போங்க! என்னமோ, மங்கம்மா சபதம் என்றால் ரொம்ப உத்தமமான படமாயிருக்கும்னு என் ஆம்படையாள், மச்சினி, பொண், மாட்டுப் பொண், எல்லாரையும் கூட்டிண்டு போனேன்—அது என்னடான்னா, ரொம்ப ஜிகுப்ஸையாய்ப் போச்சு அந்தப் பயல் ராஜகுமாரனும், டீ குடு, டீ குடு, என்று, அரை டிக்கட் குட்டிகளோடே தவளைமாதிரி தாவரான், இந்தம்மா தானாச்சு-மங்கம்மா—என்னைப்பார், என்னைப் பார், என்று சொல்லிக்கொண்டே, என்ன ஆட்டம் ஆடிப்பிட்டா—ரொம்ப சிரமமாகப் போச்சு போங்க" என்று சொல்லிக்கொண்டு வருவார்கள்.

அம்மாஞ்சி வெளியே வந்தபிறகு "என் அபிப்பிராயம் வேண்டுமா—உன் "காவேரி" பத்திரிகைக்கு — சொல்லக்கேள் — மங்கம்மா சபதத்தில் நான் ரசித்தது என்னவென்றால் அந்தப் புதுர்கள்தான்—பாக்கி விஷயங்களில் படமே ஒரு பெரிய புதுர் ஆகத்தானிருக்கிறது" என்றான்.

Telegrame 'FLOWER' 'Telephone No. 69

SOUTH INDIA CORPORATION (MADRAS) LTD.,

Dealers in all kinds of Hardware, Electric, Sanitary, Piece goods and Produce goods

CHAKRAPANISWAMI KOIL SOUTH GATE,

KUMBAKONAM.

எல்லாவிதமான இரும்பு, எலக்டிரிக் சானிடரி சாமான்களும், நவதான்யங்களும் நியாயமான விலைக்கு மொத்த வியாபாரம் செய்பவர்கள்,

ஸௌத் இந்தியா கார்ப்பொரேஷன் (மதராஸ்) லிமிடெட்

சக்ரபாணிஸ்வாமி தெற்குக் கோபுர வாசல்

கும்பகோணம்.

‘நந்தனர்,’ ‘ரிஷ்ய சிருங்கர்’ படங்களில் நடித்து, தனது இனிய பாடல், சிறந்த நடனம், உயரிய நடிப்பு முதலியவைகளால் ஜனங்களின் மனதைக் கவர்ந்த பிரபல தென்னிந்திய சினிமா நக்ஷத்திரம் ரஞ்சன் சொல்லுகிறர்:

“நான் எப்பொழுதும் நரஸூஸ் காபி, டீயையே உபயோகிக்கிறேன். ஏனெனில் அவைகள் மிகச் சிறந்தவை என்பது எனக்குத் தெரியும்.”

Ranjan.

புகழ்பெற்ற சினிமா நக்ஷத்திரங்கள் விரும்புவது

நரஸூஸ் டீ

M. N. K—15 TM.

காட்டு யானைகளின் ★ தர்ம யுத்தம்

"பேய்"

★

காட்டு யானைகளின் தர்ம யுத்தத்தைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அதர்ம யுத்தம் கோர தாண்டவமாடும் இக்காலத்தில் ஐயறிவுபடைத்த காட்டு யானைகள் அறப்போர் புரிகின்றன என்று கேள்விப்படுவது மிக்க ஆச்சரியத்தை விளைக்கலாம்.

காட்டில் சுயேச்சையாகத் திரியும் யானைகள் எப்பொழுதும் கூட்டம் கூட்டமாகவே செல்லுவதை நீங்கள் நேரில் கண்டிருக்கலாம் அல்லது கேள்விப்பட்டிருக்கலாம். ஒரு யானை குட்டி போட்டு அக்குட்டி ஆணாய் இருக்குமானால் அதைப் பராமரிப்பது பெரிய ஆண் யானையின் வேலை. அந்த யானையானது தனது குட்டியைச் சகல விதத்திலும் பழக்கும்.

குட்டிக்கு மூன்று வயதானவுடன், அக்குட்டி ஏாவது ஒரு மேட்டில் ஏறிக்கொண்டிருக்கும் பொழுது, பின்னால் செல்லும் பெரிய யானை தடதடவென அதனை இழுத்து மறுபடியும் பள்ளத்திற்கு இறக்கிவிடும். பின்பு குட்டி மிகுந்த பிரயாசையுடன் மேலே ஏறவேண்டி நேரிடுகிறது. சில குட்டிகள் இதைச் சிறிதும் லட்சியம் செய்வதில்லை. நம்மில் சில முன்கோபக்காரர்கள் இருக்கிறார்களே அவர்கள்போல இந்த யானை இனங்களிலும் சிறிய குட்டியாக இருக்கும்பொழுதே பெருங் கோபமடையக்கூடிய சில குட்டிகளும் இருக்கின்றன. அப்படிப்பட்ட சுபாவமுள்ள குட்டி, சமயம் பார்த்திருந்து எப்பொழுதாவது பெரிய யானை மேட்டில் ஏறும்பொழுது அதனுடைய வாலைப் பிடித்து இழுத்துவிடும். அப்பொழுது பார்க்க வேண்டுமே பெரிய யானைக்கு வரும் கோபத்தை! "என்னடா! நாம் வளர்த்த சின்னப்பயல் நம்மை வாலைப்பிடித்து இழுப்பதாவது?" என்று கோபங்கொண்டு, அக்குட்டியைத் தாக்க ஆரம்பிக்கும். அதுமுதல் இரண்டுக்கும் சண்டை ஆரம்பமாகிறது. இவ்விரண்டும் சண்டையிட ஆரம்பித்துவிட்டால், அக்கூட்டத்திலுள்ள மற்ற யானைகள் இவ்விரண்டையும் தனியே விட்டுவிட்டுப் பிரிந்துபோய்விடும். இச்சண்டையில் மற்றயானைகள் கலந்துகொள்வதில்லை. சுமார் 5, 6 மாதங்களுக்கு இச்சண்டை நீடிப்பது வழக்கம். அதாவது சண்டையிடும் யானைகளில் ஏதாவது ஒன்று இறக்கும் வரை இந்த யுத்தம் நடக்கும். மத்தியில் சமாதானம் என்ற பேச்சே கிடையாது. ஒன்றை ஒன்று பலமாக முட்டியும், கொம்புகளால் குத்தியும், சண்டை செய்வது வழக்கம். மலைகளில், எங்குப் பார்த்தாலும் மேடுகளும், பள்ளங்களுமாகத்தானே இருக்கும். அவை எப்படியாவது எதிரியை ஏதாவது பெரிய பள்ளத்தில் தள்ளிக்கொல்ல முயலும். சண்டை முடிவதற்குள் இரண்டு யானைகளுடைய உடம்பிலும் கணக்கிடமுடியாத காயங்களைக் காணலாம்.

மிகவும் ஆச்சரியமான விஷயமென்னவென்றால், இவ்விரண்டு யானைகளும் பலமாகச் சண்டை செய்துகொண்டிருக்கும்பொழுது ஏதாவது ஒரு யானைக்குப் பசி, தாகம் முதலானவைகள் ஏற்பட்டுவிட்டால், உடனே அது ஒரு மாதிரியான கர்ஜனை செய்யும். இரண்டும் யுத்தத்தை உடனே நிறுத்திவிட்டுப் பிரிந்துபோய், தங்களது ஆகாராதிகளை முடித்துவிட்டுவந்து மறுபடியும் போரைத் துவக்கும். இதற்குத்தான் 'யானைகளின் அறப்போர்' என்று பெயர். எதிரி அயர்ந்திருக்கிற நேரம் பார்த்துப் பின்னால் போய்த் தாக்குவது ஆற்றிவு படைத்த மனிதர்கள் இக்காலத்தில் செய்யும் மறப்போர். ஆனால், யானைகளோ, எதிரியும் தயாராகஇருந்தால் ஒழிய, சண்டை செய்வது கிடையாது. இதை ஒப்பிட்டுப் பார்க்குங்காலையில் அக்காலத்தில், நிராயுதபாணியாக்கப்பட்ட இராவணனை, "இன்று போய் போர்க்கு நாளை வா" என்று இராமர் திருவாக்காகக் கல்வியிற் பெரிய கம்பன் சொன்னதுகூடப் பெரிதாகத் தோன்றவில்லை. இந்த யானைகளின் தர்ம யுத்தத்தை ஒரு தடவை நேரில் காணும் பாக்கியம் எனக்குக் கிட்டியது. பெரியாறு அணைக்கட்டிற்குச் செல்லுங்காலையில், போகிற வழியில் இக்காட்சியைக் கண்டு நானும் என்னுடன் வந்தவர்களும் பரமானந்தமடைந்தோம். எங்கள் கூடவந்த சில கூலியாட்கள் மேற்கண்ட சமாசாரங்களை எங்களுக்கு விளங்கச் சொன்னார்கள். இந்த யானைகள் சண்டையிட ஆரம்பித்துவிட்டால், மாதந்தோறும் திருவாங்கூர் மஹாராஜா அவர்களுக்கு அந்த யானைகளுடைய நிலைமைகளைப்பற்றி மாதாந்தர ரிப்போர்ட் காட்டிலாகா அதிகாரிகள் செய்ய

வேண்டுமாம். ஏதாவது ஒரு யானை இறந்ததும் அந்த யானையினுடைய கொம்பு, நகம் முதலானவற்றை எடுத்து அரசாங்கத்தாரிடம் ஒப்புவிக்க வேண்டுமாம்.

போர் உடற்றிய யானைகளில் ஒரு யானை இறந்ததும், மற்ற யானை அதனுடைய கூட்டத்தில் மறுபடியும் சேர்வதேயில்லை. அதுதான் நாம் கேள்விப்படும் ஒற்றை யானை. இதனைக் கொம்பன் என்றுங் கூறுவதுண்டு. இது யானைகளின் சமூகத்திலிருந்து, "கொலையாளி" எனத் தள்ளிவைக்கப்பட்ட யானை. இந்த ஒற்றை யானை செய்யும் அட்டகாசம் சொல்லி முடியாது. மதம் பிடித்துப்போய், கண்ணில் காணும் ஜனங்களையெல்லாம் விரட்டி விரட்டி அடிக்கும். சாதாரணமாகக் கூட்டமாய் வரும் யானைகள் மனிதர்களுக்கு எவ்விதக் கெடுதலும் செய்வதில்லை. ஆனால், இந்த ஒற்றை யானையின் கையில் அகப்பட்டாலோ சட்னியாய் ஒழியவேண்டும். அகஸ்மாத்தாகக் காட்டில் நாம் ஒரு ஒற்றை யானையிடம் அகப்பட்டுக்கொண்டால் உயிர் தப்புவதற்கு ஒரே ஒரு உபாயம்தான் இருக்கிறது. ஒற்றையானை நம்மைத் துரத்திவருவதாக வைத்துக்கொள்வோம். உடனே நாம் செய்யவேண்டியதென்ன? பக்கத்தில் பள்ளமான பாகங்களோ அல்லது பெரிய பள்ளமோ இருந்தால் அவற்றை நோக்கி ஓடவேண்டும். ஏனென்றால் இந்த யானைகளுக்கு மேடுகளில் நம்மைவிட வேகமாக ஏறக்கூடிய சக்தி இருக்கிறது. ஆனால் பள்ளங்களில் இறங்குவதென்றால் யானைகளுக்குக் கொஞ்சம் யோசனைதான். ஒவ்வொரு அடியாகப் பயந்துகொண்டே அடி வைத்து இறங்குவதற்குள்ளாக நாம் எவ்வளவோ தூரம் ஓடிவிடலாம். தற்செயலாக அதனுடைய கையிலே அகப்பட்டுவிட்டால் தப்ப என்ன வழி என்றுமட்டும் தயவுசெய்து என்னைக் கேட்கவேண்டாம். "ஆதிமூலமே" என்றழைத்த கஜேந்திரனுக்கு உயிர்ப்பிச்சையளித்த அந்தப் பரந்தாமனை வேண்டிக்கொள்வதைத் தவிர வேறுவழி எவருங் கூறுதற்கில்லை.

பாத்ருடுவின்

பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து.)

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து.

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

48 வருஷகாலமாகப் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்கியாதிபெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக்கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மைலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில்
கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு,
தெப்பக்குளம் போஸ்டு.

ஷஷ்டாஷ்டகம்

கே. சுந்தரம்மாள்

"என்ன? மிஸ்டர் கோபால்! இப்படி வீணாக ஏன் நீயும் தூங்காமல், என்னையும் தூங்க விடாமல், அலட்டிக்கொண்டிருக்கிறாய்?" என்று பி. ஏ. ஆனர்ஸ் மாணவர்கள் வசிக்கும் ஹாஸ்டலிலுள்ள அறையில் படுக்கையின்மீது உட்கார்ந்துகொண்டிருந்த ரகு, அங்குமிங்கும் உலவும் தன் நண்பனைப் பார்த்துக்கேட்டான்.

"ஒரு! கல்யாணவிஷயத்தில்கூட மனிதனுக்கு ஸ்வதந்திரமில்லையென்றால் என்ன உலகம்? என்ன வாழ்வு? என்ன படிப்பு? எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. என் நிலைமையில் நீ இருந்தால் அப்பொழுது தெரியும் வருத்தம்."

"நிச்சயமாக உன் நிலைமை எனக்கு வரவேண்டாம். இன்னும் நமக்குப் பதினெட்டு வயது முடியவில்லை. இதுதான் முதல் வகுப்புப் படிப்பு. இதற்குள் கல்யாணம், காதல் என்றால் எனக்கு அதுவிஷயம் சரியெனத்தோன்றவில்லை."

"நான் மாத்திரம் இப்பொழுது கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்று சொல்லுகிறேன். 'காதல்' என்பது மனிதனுக்கு வாழ்க்கையில் முக்கியமான தத்துவமில்லையா? நான் காதலிக்கும் கனியைப்பெற அனுமதி கிடைத்தால் போதும், கல்யாணம் மெள்ள ஆகட்டும்."

"சரி. அப்படியானால் அவர்களுக்கு 'உறுதி மொழி' சொல்லிவிட்டுப் படிப்பைக் கவனி. வீணாக இப்படி மனத்தை அலட்டிக்கொள்ளாதே."

"இப்பொழுது அதுதானே சங்கடமாக இருக்கிறது. என் மாமா சம்சாரம் பொல்லாதவளாம், அதனால் அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ளக்கூடாது என்பது என் அம்மாவின் எண்ணம். முதலில், மாமா, 'ஜாதகத்தில் ஏதோ ஷஷ்டாஷ்டகமாக இருக்கிறது' என்று யாரோ ஜோஸ்யர் ஒருவர் சொன்னதாக சொன்னாராம். அதனால் அந்தப் பெண் உதவாது என்றார் அப்பா. மேலும் அவரே அந்தப்பெண்ணுக்காக வேறு ஜாதகங்களை வாங்கி அனுப்புகிறார். ஏன் இவர் இப்படிச்செய்யவேண்டும்? இதனால் அவர்கள் வேறு இடத்தில் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்துவிட்டால் என் கதி யாதாகும்?" என்பது தான் என் கவலை.

"உன்னைப்போல் அந்தப்பெண்ணும் உன்னை விரும்புவது நிச்சயமானால், அவர்கள் பொறுத்திருப்பதற்கு ஆட்சேபம் என்ன? உங்களுக்குள் இவ்விஷயத்தைப்பற்றிப் பேச்சு நடந்திருக்கலாமே? காதல் என்றால் சம்பாஷணையும்கூட அல்லவா."

"ஆஹா எங்களுக்குள் எப்பொழுதோ உறுதிசெய்துகொண்டுவிட்டோம். இரண்டு வருஷங்களுக்குமுன், அவள் தமையன் கல்யாணத்திற்குச் சென்றிருந்தேன். அப்பொழுது நாங்கள் இருவரும் தனியிடங்களுக்குச்சென்று எப்பொழுதும் பேசிக்கொண்டிருப்போம். அவள் என்னிடம் அளவற்ற காதல்கொண்டிருக்கிறாள். தந்தை தாயார் இருவருக்கும் என் அத்தை பெண்ணைக் கல்யாணம் செய்ய வேண்டுமென்று எண்ணம். அதனால் ஷஷ்டாஷ்டகம். பஞ்சாக்ஷரம் என்று சொல்லி ஏதாவது ஆட்சேபம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். என் மாமி சற்றுப் பதட்டக்காரி. மாமா அவள் சொல்லைத்தட்டி நடக்கமாட்டார். அதனால் மாமி பிடிவாதஞ் செய்வாளானால், நிச்சயம் வேறு இடத்தில் கல்யாணம் நடந்துவிடும்."

"ஏன் அவர்கள் இஷ்டப்படி அத்தைப் பெண்ணைத்தான் கல்யாணம் செய்துகொள்ளேன். அவள் அழகாக இருக்கமாட்டாளோ?"

"அவள் இவளைவிட நல்ல அழகிதான். எஸ். எஸ். எல். ஸி. படிக்கிறாள். நன்றாகப்பாடுவாள். ஒரேபெண்; நிரம்ப பணமும் இருக்கிறது. அதனால்தான் அம்மாவிற்கு அவ்விடத்தில் ஒரு கண். இருவரும் சமவயதுள்ளவர்களே. மாமா பெண் சாதாரண அழகுள்ளவள்தான். படிப்பும் நான்காவது வகுப்புடன் சரி. சங்கீதம். ஏதோ ஒரு மாதிரிதான் என்றாலும், என் மனதிற்கு அவள் ரம்பையாகத் தோன்றுகிறாள். அவளையடையாவிட்டால், பைத்தியம் பிடித்துவிடும்போலிருக்கிறது."

"கோபால், நான் இப்படிச் சொல்லுகிறேன் என்று வருத்தப்படாதே. எல்லா விஷயங்

களும் பொருந்தியிருக்கின்றன அத்தைபெண்ணிடம், அவளையே கல்யாணம் செய்துகொள்ளேன். காதலாவது கத்தரிக்காயாவது? எல்லாம் பழக்கந்தான் காரணம். கல்யாணம் முடிந்து அவளுடன் பழகினுயானுல், அவளும் உனது அருமைக் காதலியாய்விடுவாள். நம் பெரியோர்கள் அவர்கள் பெற்றோருக்குக் கட்டுப்பட்டு நடந்ததில் என்ன குறைந்துபோய் விட்டார்கள்? நீ ஏன் இப்படி வீணுக மண்டையை உடைத்துக்கொள்ளுகிருய்? இதில் என்ன லாபம்."

"போடா மண்டு. உனக்கு இன்னும் காதல் அனுபவம் ஏற்படவில்லை...' அதனுல்தான் இப்படி உளறுகிருய்? காதல் தெய்வீகமாவது. மாற்றமுடியாதது. அத்தை பெண் சுகந்தா எல்லாம் பொருந்தியவள்தான். ஆனுல் தான் அழகி என்ற கர்வம் உள்ளவள். சங்கோசமில்லாமல் பேசமாட்டாள். குடிக்க ஜலம் கேட்டால் கையில் கொடுக்கமாட்டாள், கீழே வைத்துவிடுவாள். அத்தையும் பெண்ணை அதிகமான கட்டுப்பாடுகளுடன் நடத்திவருகிருள். மாமா வீட்டிலோ எல்லா விஷயங்களும் மேல் நாட்டாரின் நாகரிகத்தைப் பின்பற்றியே இருக்கும். பரிமளாவும், அதே தோரணையில் என்னுடன் தாராளமாகப் பழகுவாள். அநாவசியமான கட்டுப்பாடுகள் அங்கு இல்லை. முக்யமாக நாங்கள் குறித்த இடங்களில் பேசுவதற்குத் தடையுத்தரவு கிடையாது. எனக்கு இவ்விஷயமே மிகவும் இஷ்டமானது. சுகந்தாவும் பரிமளாவும் சமவயதினராயிருந்தாலும் குணத்தில் அநேக மாறுதல்கள். ஒரு விஷயம் கேள், சொல்லுகிறேன். ஏழெட்டு மாதங்களுக்குமுன், இவ்விருவரில் யாரைத் தேர்ந்தெடுப்பது என்ற பிரச்னையில், ஒருநாள் அத்தை வீட்டிற்குச் சென்றேன். சுகந்தா மாத்திரம் இருந்தாள். அதுவேசமயமெனக்கருதி, 'என் மேல் உனக்குப் பிரியம்தானே?' என்றேன் 'அதிலென்ன சந்தேகம்? என்ருள், தலையைக் குனிந்தவாறே. அவள் கையைப்பிடித்தேன். சட்டெனக் கையைத் திமிறிக்கொண்டு, எட்டி நின்று, "அம்மாஞ்சி! மன்னிக்கவேண்டும். இம்மாதிரியான செய்கையை வெறுக்கிறேன். எல்லாம் கல்யாணத்திற்குப் பின் பார்த்துக் கொள்ளலாம். வண்டினங்களையொத்த ஆண் பிள்ளைகளிடம் நம்பிக்கைவைப்பது தப்பு என்பது என் எண்ணம். நாம் இனிமேல் தனிமையில் சந்திக்காமலிருப்பது நலம்" என்ருள்.

"என் மனம் என்ன ஏமாற்றமடைந்திருக்கும்? நம்மைவிடப் பணத்தில் மேற்பட்டவர்களுடன் சம்பந்தம் செய்தால் அப்பெண் நம்மை அலக்ஷ்யம் செய்வாள்; நாம் பணிந்தே நடக்க வேண்டிவரும் என்ற எனது அபிப்பிராயமானது இச்சம்பவத்தால் உறுதியுற்றது. சுகந்தத்தினிடம் ஏற்பட்ட மனப்புயல் பரிமளத்தினிடம் உடனே ஆறிவிட்டது. என் மனம் யாரை நாடும்? சொல்லு"

"என்ன கோபால். இவையெல்லாம் ஒருகர்வம் என்று நினைக்கலாமா? பணமுள்ளவர்கள் செருக்குள்ளவர்களாக இருப்பார்களென்றும், இல்லாதவர்கள் பணிவாக இருப்பார்களென்றும் எப்படி நிச்சயிக்கமுடியும்? 'குணம்' என்பது தனிப்பட்ட விஷயம்; அதுவிஷயத்தில் ஆராய்ந்தே முடிவு கூறவேண்டும். ஸ்திரீகளிடம் அடக்கமிருப்பது உயர்வான குணந்தானே? அவளிடம்தான் நீ அதிக அன்பைப் பெறமுடியும். அதிக ஆடம்பரம் வீண்மயக்கமே."

"நீ என்னவேண்டுமானுலும் சொல்லு, நான் பரிமளாவைத்தான் கல்யாணம் செய்துகொள்ளப்போகிறேன். இந்த ஜாதகத்தில் 'ஷஷ்டாஷ்டகம்' என்கிருர்களே, அதுதான் குறுக்கே நிற்கிறது. பத்துப்பொருத்தமும் இல்லாவிட்டால் என்னமோசம்? மனப்பொருத்தந்தானே முக்யம். மேல்நாட்டவர் எந்த ஜாதகம் பார்க்கிருர்கள்?"

ரகுவிற்குத் தூக்கம் கண்ணைச் சுற்றுகிறது. 'இது என்ன சங்கடம்? நல்ல காதல் பைத்தியம். இதற்குஏதாவது வழிசெய்யாமற்போனுல் நமக்கு இரவில் தூக்கமும், படிக்க அவகாசமும் கிடைக்காது' என்று சற்று ஆலோசித்து, "கோபால், ஒரு விஷயம். நான் சொல்லுகிறபடி நடந்தால் உன் இஷ்டம் நிறைவேறும்."

"அஃது என்ன? சீக்கிரம் சொல்" என்று அவன் பக்கத்தில் உட்கார்ந்தான்.

"நமது கணக்கு வாத்தியாருக்கு நன்ருக ஜோசியம் தெரியும். ஜாதகம் நன்ருகப் பார்ப்பார். முதலில் உன்ஜாதகத்தைக் காட்டிப் பலன் கேள்; பிறகு பரிமளாவின் ஜாதகத்தைக் காட்டிப் பொருத்தம்கேள். அவர் சொல்லிவிட்டால் ஒருவரும் மறுக்கமுடியாது. உன் தகப்பனுர் அவர் சொன்னுல் சம்மதித்துவிடுவார். மாமாவிடம் படிப்பு முடியுமட்டும் பொறுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்" என்ருன்.

"ரைட்டோ! நீ சொல்லியபடி செய்கிறேன். ஆனுல் அவரிடம் எப்படிக்கேட்பது?"

"நான் மெதுவாக அவரிடம் ஏதோ தகப்பனுரிடம் 'மனஸ்தாபம்' என்று மாத்திரம் சொல்லிவிடுகிறேன். பிறகு அவரே எல்லாம் சொல்லிவிடுவார்" என்று கொஞ்சநேரம் இருவரும் மௌனத்தைக் கடைப்பிடித்தார்கள். பிறகு, 'சரி இனி தூங்கலாமல்லவா?' என்ருன் ரகு. இருவரும் படுத்துத் தூங்கிவிட்டார்கள்.

2

"கோபால்! இப்படிவா; உட்கார். ரகு விஷயங்கள் சொன்னுன். ஜாதகத்தை எடு"

தானுக ஒன்றும் கேட்காமல் அவரே தன்னைக் கேட்டதில் மிகவும் சந்தோஷமடைந்தவனுகத்

தன் ஜாதகத்தை ஆசிரியரிடம் கோபால் கொடுத்தான்.

சற்றுநேரம் பார்த்துவிட்டு, "இப்பொழுதிருக்கும் கிரஹ நிலைமையில் உனக்கும் தகப்பனாருக்கும் சற்று மனஸ்தாபம் ஏற்பட்டிருக்கலாம். இரண்டு வருஷம் சென்றால் நீ தகப்பனாருக்கு மிகவும் உதவியாக இருப்பாய். ஒற்றுமை ஏற்பட்டு விடும். பிற்காலத்தில் உன் சம்பாதித்தியமே தகப்பனாருக்கு மிக்க உதவியாக இருக்கும்" என்றார். பிறகு பரிமளா ஜாதகத்தைக்கொடுத்து, "இரண்டும் பொருந்துமா" என்று கேட்டான் கோபால்.

சற்றுநேரம் புன்சிரிப்புடன் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, எட்டுப்பொருத்தம் மிக ஒற்றுமையாக இருக்கின்றன. இரண்டில்லாம விருப்பதனால் பாதகமில்லை. என்றாலும் ஷஷ்டாஷடகம் அவ்வளவு முக்கியமன்று. அடிக்கடி சண்டையுண்டாகும்; அதனால் என்ன? குடும்பம் என்றால் சண்டையும் பூசலுமாகத் தான் இருக்கும். ஆனால் இந்தக் கல்யாணம், கொஞ்சம் பணவிரயம் மனஸ்தாபம் இவைகளுடன்தான் நடக்கும். இன்னும் இரண்டு வருஷம் கழித்தபிறகுதான் கல்யாணம் நடக்க வேண்டும். அதற்குள் நடவாது. அவசரப்பட்டாயானால் இருவரில் யாருக்காவது ஏதாவது......" என்று இழுத்தபடியே சொன்னார்.

"சரி அதற்கென்ன? இரண்டு வருஷம் செல்லட்டும். எனக்கு இந்தக் கல்யாணந்தானே நடக்கும்?"

"நிச்சயம் இதுதான் நடக்கும்" என்றார்.

சற்றுநேரம் பேசிக்கொண்டிருந்து, உபாத்தியாயருக்கு வந்தனம் செலுத்திவிட்டுச் சென்றான். பிறகு இத்துடன் நில்லாமல், "ஜோஸ்யம் சொல்லப்படும்" என்று பலகை மாட்டியிருக்குமிடமெல்லாம் சென்று ஜாதகத்தைக் காட்டிக்கொண்டு வரத்தொடங்கினான். இவ்விஷயம் பையன்களிடையே பரவ 'ஜாதகப்பித்து' என்ற நாமகரணம் சூட்டினார்கள். விடுமுறை நாட்களில் செங்கற்பட்டிலிருந்து கார் வந்து கோபாலனை அழைத்துச் செல்வது வழக்கமாகிவிட்டபடியால் அத்தை வீட்டின் பக்கமே அவன் வருவதில்லை. இப்படி இவன் சினிமா, பீச்சு என்று அவர்களுடன் சுற்றுவதும், ஜாதகம் பார்ப்பதுமாக இருந்ததின் பலன், அவ்வருஷம் டிஸம்பர் பரீக்ஷையில் மார்க்குக்கள் மிகவும் குறைவாக வாங்கினான். இந்தத் தகவல் அவன் தகப்பனாருக்கு எட்டவே அவர் இவனுக்குக் 'கல்யாணத்தைப்பற்றிப் பிறகு பார்த்துக்கொள்ளலாம், படிப்பைக் கவனிக்கவேண்டும்' என்று கண்டிப்பான முறையில் கடிதம் எழுதிவிட்டார். தாம் புறப்பட்டு வருவதாகவும் எழுதியிருந்தார். இதனால் கோபாலனுக்கு ஒரு விதத்தில் கஷ்டமும் ஒரு விதத்தில் சந்தோஷமும் உண்டாயின. தகப்பனாரிடம் சொல்லிக் கல்யாணத்தை உறுதிப்படுத்திவிடலாமென்பதை நினைக்கச் சந்தோஷம். சம்மதிக்காமல் சண்டைபோட்டால் என்ன செய்வது என்ற பயம் ஒரு பக்கம். அதனால் அந்த வாரம் சனி ஞாயிறு விடுமுறையில் செங்கற்பட்டிற்குச் செல்லாமல், "ஒரு சமயம் அத்தை வீட்டிற்குத் தகப்பனார் வந்திருப்பாரோ?" என்று நினைத்து நுங்கம்பாக்கம் வந்து சேர்ந்தான். தீபம் ஏற்றும் சமயம். வாசற்கதவு சாத்தியிருந்தது. உள்ளே ரேடியோ பாடும் சப்தம்கேட்டது. ஒரு பெண், சுகமான சாரீரத்தில், கல்யாணி ராகத்தில் பாடிக்கொண்டிருந்தாள். சுகந்தாவும் மெதுவாகக் கூடப் பாடிக்கொண்டிருந்தாள். கோபாலனுக்குச் சற்றுச் சங்கீத ஞானம் இருந்ததனால் படியில் நின்றபடியே பாட்டைக் கேட்டுக்கொண்டிருந்தான். பாட்டு முடிந்ததும் கதவைத் தட்டினான். வேலைக்காரக் கிழவி கதவைத்திறந்தாள். ஹாலுக்குள் இவன் வரும்பொழுது சுகந்தா ரேடியோவின் பக்கத்திலுள்ள நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள். இவனைக் கண்டதும், 'வரவேண்டும் அம்மாஞ்சி! வழிதவறி வந்துவிட்டாற்போலிருக்கிறது, என்று சொல்லிக்கொண்டே நாற்காலியைவிட்டு எழுந்திருந்து அதில் அவனை உட்காரும்படி சொல்லிவிட்டுச் சற்றே தள்ளிப் போடப்பட்டிருந்த நாற்காலியில் தான் உட்கார்ந்துகொண்டாள்.

"செங்கற்பட்டிலிருந்து வண்டி வரவில்லையா?"

"வந்தது; நான்தான் வரவில்லையென்று திருப்பி அனுப்பிவிட்டேன்."

"ஏன் ஏதாவது..........?"

"இல்லை இல்லை; இவ்விடம் வரவேண்டுமென்பதற்காகவே அஃதிருக்கட்டும். அத்தை அத்திம்பேர் எங்கே போயிருக்கிறார்கள்?"

'அம்மா கோவிலுக்குச் சென்றிருக்கிறாள்; அப்பா ஆபீஸிலிருந்தே வரவில்லை"

"சரிதான்" என்று சொல்லிவிட்டுச் சற்றுநேரம் ரேடியோவைத் திருப்பிக்கொண்டிருந்துவிட்டுச் "சுகந்தா! மாமா இவ்விடம் வந்திருக்கிறாரா?"

"ஏன் உங்களுக்குக் கடிதம் வரவில்லையா?"

"வந்தது, அதனால்தான் இவ்விடம் வந்தேன்."

"ஒஹோ, விஷயம் அப்படியா? ஆனால் ஏமாற்றமே. உங்கள் அப்பா இவ்விடம் வரவில்லை."

"கடிதம் ஏதாவது வந்ததா?"

"ஏதோ வந்ததுபோலிருக்கிறது."

"அதை என்னிடம் காட்டமுடியுமா? அல்லது என்ன எழுதியிருந்தது என்பதையாவது சொல்லுவாயா?"

"கடிதம் அப்பாவிடமிருக்கிறது; பிறர் கடிதத்தைப் படிக்கும் வழக்கம் எனக்குக் கிடையாது. ஏன் இவ்வளவு ஆத்திரம்? விஷயம் என்ன?"

"ஒன்றுமில்லை; இங்கு ஏதோ வேலையாக வருவதாக எழுதியிருந்தார்; அவ்வளவுதான். சரி அஃதிருக்கட்டும், நீ ஸெலக்ஷன் பரிக்ஷையில் முதல் மார்க் வாங்கியிருக்கிருயென்று கேள்வியுற்றேன்; ரொம்ப ஸந்தோஷம்; தை பிறந்துவிட்டதே; உன் கல்யாணத்திற்கு ஏற்பாடாகி விட்டதோ?" என்று பேச்சை மாற்றினன்.

இச்சொல்லைக் கேட்டதும் அதுவரையில் சந்தோஷத்தால் மலர்ந்த முகபத்மம் கவலை தோய்ந்து வாடிக்குவிந்தது; தரையை நோக்கிய வண்ணம், "நான் கல்யாணம் செய்துக் கொள்ளப் போவதில்லை; மெடிகல் காலேஜில் சேரப்போகிறேன்."

"இஃதென்ன சுகந்தா! இது நடக்கக்கூடிய காரியமா? ஓரேபெண். தகப்பனர் நல்ல சம்பாத்தியமுள்ளவர்; ஆஸ்தியோ அதிகமிருக்கிறது. யாராவது, ஐ. ஸி. எஸ். அல்லது ஜமீன்தார் இப்படிப்பட்ட வரன் கிடைப்பான். நிச்சயம் கல்யாணம் நடக்கும். நான் வந்தால் திரும்பிக்கூடப் பார்க்கமாட்டாய்" என்று சிரித்துக்கொண்டே கூறினன்.

இவன் சொல்லி முடித்ததும் அடிபட்ட பெண் புலியென நாற்காலியிலிருந்து எழுந்து நின்ருள். கண்களில் கோபக்கனல் வீசிற்று. ஆனாலும் அமைதியாகவே, "என் கல்யாணத்தைப்பற்றித் தாங்கள் கவலைப்படவேண்டாம்; உங்கள் கேள்வி, புண்ணில் சூட்டுக்கோலை நுழைப்பதுபோலிருக்கிறது; ஒருவரை மனதில் நினைத்த பின் மற்ருெருவருடன் வாழ என்னுல் முடியாது; நான் மறை முகமாய்ப் பேசாமல் உள்ளதையே சொல்லி விடுகிறேன்; என் ஞாபகம் தோன்றியது முதல், யாரை என் மனம் விரும்பியதோ அவர் 'இன்னெருத்திக்குச் சொந்தம்' என்று தெரிந்த அன்றே என் வாழ்க்கையை ஒரு விதமாக முடிவு கட்டிவிட்டேன். கொஞ்ச நாள் முன்பு என்னுடன் மனஸ்தாபத்தோடு வெளியில் சென்றது ஞாபகமிருக்கலாம். என்னுடைய மனமறிந்தும் நீங்கள் இப்படிப் பேசுவதுதான் எனக்குப்பொறுக்கவில்லை."

இவளுடைய தோற்றத்தையும் பேச்சையும் பார்த்துப் பயந்தே போய்விட்டான். அவன் மனம் என்னவோ வேதனை செய்தது. மெதுவாகத் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, "சுகந்தா! என்னை மன்னித்துவிடு; நீ இவ்வளவு உறுதியாக இருப்பாயென்று நினைக்கவில்லை; எல்லோரும் சொன்ன விளையாட்டுப் பேச்சை விளையாட்டாகவே நினைத்தேன்; காதலில்லாக் கல்யாணத்தால் இருவருக்கும் கஷ்டமே; 'பரிமளா' என் மனதில் இடம் பெற்ருள்; என் மனத்தை மாற்ற முடியவில்லையே! அவ்விஷயமாத நான் எவ்வளவு விஷயங்களை எதிர்த்து நிற்கவேண்டியிருக்கிறது; பொய் சொல்லி மறைப்பது என் வழக்கமன்று; இனிமேல் இது விஷயமாகப் பேசவில்லை; நீ என்னை மறந்துவிடவேண்டும்; உன் பெற்ருேர் மனம் நோகாமல் நடப்பது உன் கடமை."

"ஏன்? அந்த ஓலையைத் தங்களுக்கே திருப்பி வாசியுங்கள்; நியாயம் யாவருக்கும் பொது. உங்கள் மனதிற்கு விரோதமாக நடக்கும்படி நான் கேட்கவில்லை; தங்களிடம் யாசிக்கவும் இல்லை. அவரவர் இஷ்டம்போல் நடக்கலாம்; ஒரு விஷயம் நம்மவர்களில் கெட்டபழக்கமாக இருக்கிறது; "விதி ஒன்று இருக்கிறது" என்பதை நம்பிக்கொண்டே, அர்த்தமில்லாமல் நம் மனத்தில் அவர்களின் சொற்களினுல் ஒரு நம்பிக்கை உண்டாகி, அதையே மனம் நாடி உறுதிப்பட்டுவிடுகிறது; பின்னுல் அது கிடைக்காவிட்டால் எவ்வளவு ஏமாற்றம், கஷ்டங்கள் உண்டாகின்றன? 'இவனுக்குத்தான் அந்தப் பெண்' என்ற அர்த்தமற்ற பேச்சைக் குடும்பங்களில் சொல்லாமலிருப்பார்களானுல் எவ்வளவு நன்மையாக இருக்கும்; நீங்கள், நான் இவ்வாறு பேசியதற்காக மன்னித்துவிடுங்கள். பகவான் உங்களுக்கு நன்மையைக் கொடுக்கட்டும்" என்று சொல்லிவிட்டு உள்ளே சென்று படுக்கையில் சாய்ந்து அழலானுள்.

3

தனியே விடப்பட்ட கோபாலன்பாடு சங்கடமாகிவிட்டது. "இஃதென்ன கிணறு வெட்டப் பூதம் கிளம்பினதுபோல் நாமொரு காரியமாக இவ்விடம் வந்தால், எதிர்பாராத வகையில் இவளை வருத்தத்திற்குள்ளாகிவிட்டோமே; என்னிடம் அளவற்ற அன்புவைத்து ஏமாற்றமடைந்துவிட்டாள்; நான் என்ன செய்வது? பரிமளாவை எப்படி மறக்கமுடியும்? தனியே அத்தையின் கட்டுப்பாடுகளுக்குப் பயந்து, கல்யாணம் செய்துகொள்வாள்" என்று சமாதானம் செய்துகொண்டான். 'இதுவரை ரேடியோ பாடிற்ரு, பேசிற்ரு?' என்பதை இருவரும் கவனிக்கவில்லை. இப்பொழுது அது தெலுங்கில் ஏதோ சொல்லிக்கொண்டிருந்தது. அந்தச் சமயம் கோவிலுக்குச் சென்ற அத்தை வந்தாள்.

"என்ன கோபாலா! அத்தையினுடைய ஞாபகம்கூட இருக்கிறதா?"

"என்ன அத்தை அப்படி ஒன்றுமில்லை. படிக்கவேண்டியிருப்பதால் வரமுடியவில்லை." என்ருன் ரேடியோவைத் திருப்பியவாறே.

"ஏன் பொய் சொல்லுகிறாய்? செங்கற்பட்டிலிருந்து கார் சகிதம் வந்து அழைக்கும்பொழுது போகாமலிருக்க முடியுமா? போகவேண்டியதுதானே? இருந்தாலும், அத்தை ஒருத்தி இருக்கிறாள் என்ற நினைவு இருக்கவேண்டும்." இதற்குள் ஆபீஸிலிருந்து ராமய்யர் வந்துவிடவே பேச்சு மேலும் தொடங்கலாயிற்று. "என்ன மிஸ்டர் கோபால், ஏது இவ்விடம் விஜயம் செய்தது? விஷயமென்ன?" என்றார்.

"விஷயம் ஒன்றுமில்லை, சும்மா பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தேன்."

"ஆஹா! மூன்று மாதமாக இவ்விடம் வந்து பார்க்கவேண்டுமென்று தோன்றாமல் இன்று திடீரென்று தோன்றிவிட்டதோ? அப்பா கடிதம் எழுதியிருக்கிறான்; அவன் கையில் பணமில்லையாம்; அதனால் என்னைக் கொடுக்கும்படி எழுதியிருக்கிறான்; அதற்காகப் பையன் இவ்விடம் வந்திருக்கிறான் தெரியுமா?" என்றார் மனைவியைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே.

கோபால் பதில் பேசாமல் தலையைக் குனிந்துக்கொண்டே நின்றுகொண்டிருந்தான்.

உடுப்புகளைக் கழற்றிக்கொண்டே, "கோபால், நான் சொல்லுவதைக் கொஞ்சம் கேள்; என் பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்பதற்காக இவ்விஷயங்களைச் சொல்லவில்லை. இந்தியா முழுதும் சுற்றி, அவள் இஷ்டம்போல் கல்யாணம் செய்ய என்னால் முடியும். 'அவள், கல்யாணம் வேண்டாம்: படிக்கிறேன்' என்றால், அவள் இஷ்டப்படி விட்டுப் பிறகு விரும்பியவனைக் கல்யாணம் செய்துகொள்ள அனுமதியும் கொடுப்பேன்; அதனால் நான் சொல்லுவதைப் புத்தியாக நினை; கல்யாணத்திற்கு அவசரப்படாதே. உன் அப்பா, அம்மா இருவருக்கும் சம்மதமில்லை. மேலும் 'ஷஷ்டாஷ்டகம்' என்று சொல்லுகிறார்கள்; தினம் சண்டைதான் வாழ்க்கையில் கண்ட பலனாகும் என்று பெரியோர்கள் சொல்லுவார்கள்; அதனால் படிப்பு முடிந்தபின்பு வேறு உனக்கு இஷ்டமான பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ளலாம்; தாறுமாறாக அப்பாவுக்குக் கடிதமெழுதி, வீண் மனஸ்தாபத்திற்கு இடம் வைத்துக்கொள்ளாதே; நீ தான் ஸீமந்த புத்ரன்; அவனுக்கு உதவியாக இருக்கவேண்டியவன்; அவன் மனம் நொந்து எவ்வளவு கஷ்டமாக வருத்தத்துடன் கடிதம் எழுதியிருக்கிறான்! வீணாக ஸினிமா பாட்டுக் கச்சேரி என்று அலையாமல் படிப்பைக் கவனி"

"நான் அப்படி ஒன்றும் கல்யாணத்திற்கு அவசரப்படவில்லை; இந்தப் பெண்ணை மணந்து கொள்வதற்காக அவர்களுக்கு உறுதி சொல்லிவிட்டால் போதும்; இப்பொழுது குறைவாக வாங்கின 'மார்க்குக்களை' அடுத்த பரீக்ஷையில் சரிக்கட்டிவிடுவேன் அதைப்பற்றிக் கவலை இல்லை. 'ஷஷ்டாஷ்டகம், பஞ்சாக்ஷரம், என்பவற்றிலெல்லாம் எனக்கு நம்பிக்கையில்லை."

"சரிதானப்பா. எனக்கென்ன வந்தது? அப்பாபாடு, பிள்ளைபாடு; இப்பொழுது சாப்பிட்டுவிட்டுக் காலையில் பணத்தை வாங்கிக் கொண்டு போ" என்றார். சுகந்தா தனக்கும் அவனுக்கும் நடந்த விஷயத்தை வெளிக்காட்டாமல், ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட்டு, ரேடியோ கேட்பது முதலிய விஷயங்களில் தமாஷாகவே நடந்துகொண்டாள்.

ஒருவாரம் சென்றது. மறுபடியும் கோபால் அத்தை வீட்டிற்கு வந்தான். அவன் முகத்தில் உக்கிரதேவதை ஆட்கொண்டிருந்தாள். நேராக அத்தையிருக்குமிடம்வந்து, "அத்தை! அத்திம்பேர் என்னைப்பற்றித் தாறுமாறாக ஏ கடிதம் எழுதவேண்டும்? என்னோடில்லாம மாமாதான் என்னைக் கெடுக்கிறாரென்று எழுதியிருக்கிறாராம். இவைகளெல்லாம் நன்றாக இருக்கின்றனவா? ஒரு நல்ல உத்தியோகத்திலிருப்பவரைப்பற்றி இவ்விதம் சொல்வது நியாயமா? இனிமேல் அத்திம்பேர் இவ்விதமாகக் கடிதம் எழுதக்கூடாது." என்று படபடப்பாகப் பேசினான்.

"என்ன கோபாலா! படபடவெனப் பேசுகிறாய்; அத்திம்பேர் ஒன்றும் அவ்விதம் எழுதி இருக்கமாட்டார்; நீ எப்படிப்போனால் அவருக்கென்ன?" என்றாள் அத்தை.

"இல்லை அத்தை! என்னை என்னவேண்டுமானாலும் சொல்லட்டும்; தகுந்த அந்தஸ்துள்ள உத்தியோகஸ்தரைக் 'கெடுக்கிறார்' என்று சொன்னால் அஃது எவ்வளவு தப்பு? படிப்பைக் கவனிக்க எனக்குத்தெரியும்."

"இதுவரை பேசாமல் நின்றுகொண்டிருந்த சுகந்தா, "அம்மாஞ்சி! அதிகமாக வார்த்தைகளைச் செலவழிக்கவேண்டாம்; என் அப்பாவும் ஓர் உயர்ந்த உத்தியோகத்திலிருப்பவரே; சோம்பேறிமடவாசியல்ல; கடிதம் எழுதுவது அவர் இஷ்டம்; அதற்கு அவருக்குச் சுதந்திரமுண்டு. அதைத்தடைசெய்ய ஒருவருக்கும் உரிமை கிடையாது; வேண்டுமானால் உங்கள் அப்பாவிற்குப் புத்தி கற்பித்துக் கொடுங்கள்" என்றாள்,

"சரி உத்தரவு" என்று சொன்னானேதவிர வேறொன்றும் பதில்சொல்லத் தோன்றவில்லை.

"நான் வருகிறேன்" என்று சொல்லிப் புறப்பட்டான். "காப்பி சாப்பிட்டுவிட்டுப்போ" என்றாள் அத்தை. "ஒன்றும்வேண்டாம்" என்று சொல்லிக்கொண்டே போய்விட்டான்.

அடுத்தவாரம் கோபாலன் தகப்பனார் வந்தார். நயமாகவே பிள்ளைக்குப் புத்தி புகட்டினார். "கோபாலா! நான் சம்சாரி; நீ ஒருவன்; சினிமாவுக்கும், பாட்டுக்கச்சேரிக்கும்,

ஊர்சுற்றுவதாகக் கேள்விப்பட்டேன். இவ் விஷயம் நன்றன்று, புத்தியுடன் நடந்து கொள்" என்றார்.

"நீங்கள் வீண்வதந்தியைக் கேட்கக்கூடாது. ஏதோ மாமா கூப்பிடுகிறாரென்று போகிறேனேதவிர அவளுடன் கொஞ்சிவிளையாடப் போகவில்லை; நான் இப்பொழுதே கல்யாணம் செய்துகொள்ளவேண்டும் என்றும் சொல்லவில்லை; 'படிப்பு முடிந்தபிறகு பரிமளாவைக் கல்யாணம் செய்துகொள்ளலாம்' என்ற உறுதி கிடைத்தாற்போதும். காதல் ஒருத்தியிடம் கல்யாணம் ஒருத்தியுடன் என்றால்.........?"

"சரி போதும் வாயைமூடு; மிதமிஞ்சிப் பேசுகிறாய். வயது பதினெட்டு முடியவில்லை; ாதலாம், கத்தரிக்காயாம்; வெட்கமில்லாமற் ால்லுகிறாயே! தறிதலை; இந்தா, அதிகமாக ர்த்தை வளர்த்தவேண்டாம்; மரியாதை க மூன்று வருஷப்படிப்பையும் முடித்து ிட்டு நாங்கள் சொல்லுகிறபடி கேட்பதானால், உன்படிப்பிற்குப் பணம்கொடுப்பேன். ஆஸ்தியிலும் பங்குண்டு. இல்லையேல் இன்றுடன் உனக்கும் எனக்கும் சம்பந்தமில்லை. பெண்ணையும் கொடுத்துப் படிப்புச்செலவையும் ஏற்றுக்கொள்ளச் சொல்லு; உன் சம்பாத்தியத்தில் ஒரு தம்படிகூட எனக்கு வேண்டாம். மற்றக் குழந்தைகளையும் உன்னைப் போல் வளர்க்கவேண்டாமா?" என்றார்.

பதில் பேசமுடியாமல் நின்றுகொண்டிருந்தான்.

"சரி உன் வேலையைப் பார்; போ!" என்று சொல்லிவிட்டு மைத்துனன் வீட்டிற்குச் சென்றுவிட்டார்.

சற்றுநேரம் பரஸ்பரம் குசலப்ரசனம் செய்த பிறகு பரிமளாவின் கல்யாணப் பேச்சைத் துவக்கினார் பலராமய்யர்.

"இந்த வருஷம் பரிமளாவிற்கும் கோபாலனுக்கும் கல்யாணத்தை முடித்துவிடலாமல்லவா?"

"கல்யாணம் எப்படி நடத்த முடியும்? நீதானே முதலில் ஷஷ்டாஷ்டகம், பொருத்தமில்லை, என்று சொன்னாய்?" என்றார் சிவஸ்வாமி ஐயர்.

"அப்படி ஒரு ஜோஸ்யர் சொன்னார்? இப்பொழுது சிலபேர்களிடம் காட்டினதில் ஏதோ பாதம் வித்யாசமாயிருப்பதால் பாதகமில்லை என்று சொல்லிவிட்டார்கள்."

"நான் இதை ஒத்துக்கொள்ள மாட்டேன்; ஷஷ்டாஷ்டகம் கூடவே கூடாது"

இவையெல்லாம், நம்காலத்துப் பழங்கிரை; தற்காலத்தையொட்டித்தானே நாம் நடக்க வேண்டும்; அவர்களிருவரும் உண்மையான காதல்கொண்டிருக்கிறார்கள்; கோபாலன் இவளைக் கல்யாணம் செய்துகொள்ளாவிட்டால் அவனுக்குப் பைத்யம் பிடித்து விடும் என்று கூடச் சொல்லுகிறானும். இதைத் தடுத்தால் நன்றாக இராது"

"காதலாவது மண்ணாங்கட்டியாவது? நீயும் நானும் காதலித்துத்தான் கல்யாணம் செய்து கொண்டோமோ? இப்பொழுது, நாம் சண்டை போட்டுத்தான் சம்ஸாரம் நடத்துகிறோமோ? நம்மைப்போல் நம் பிள்ளைகளும் இருந்தால் போதும். இந்தக் கல்யாணம் செய்வதில் எனக்கும் என் மனைவிக்கும் சம்மதமில்லை."

"நம்முடைய இஷ்டப்படி இந்தக்காலத்தில் நடக்காது. இவர்கள் இருவரும் லலிதா கல்யாணத்தின்பொழுதே உறுதிசெய்துகொண்டிருக்கிறார்களாம். நம்மால் மாற்றமுடியாது."

"நல்லவேளை பரிமளாவின் ஆண்டுநிறைவின் பொழுதே உறுதி செய்துகொண்டுவிட்டார்களென்று சொல்லாமல்போனாயே. ஏன் வீண் பேச்சு? என்னை மீறி இக்கல்யாணம் நடக்குமானால், பிள்ளையாண்டானுடைய சகல பொறுப்புக்களையும் நீ ஏற்றுக்கொள்ளவேண்டியதுதான். பிறகு ஸ்னானப்ராப்திகூடவேண்டாம். அவ்வளவே. இவையெல்லாம் விளையாட்டுப் பேச்சன்று. அவன் எங்களுக்கு மூத்த புதல்வன்; ஜாதப்பொருத்தமில்லாமல் கல்யாணம் செய்ய நான் சம்மதிக்கமாட்டேன்." என்று மிகக் கடுமையாகச்சொன்னார்.

"என்ன ரொம்ப விரட்டுகிறாய். ஏதோ குழந்தைகளின் இஷ்டப்படி நடத்தலாமென்பதற்காக இவ்வளவு தூரம் சொன்னேன். என் பெண்ணுக்கென்ன வரன் கிடைக்கமாட்டானா? நொண்டியா? குருடா? உன் பிள்ளைக்கு மேலான வரனை நிச்சயம் தேடிவிடுவேன். காலத்தையொட்டிக் காதல் மணத்தை விரும்பினேன். உன் பிள்ளைதான் ஒரே உறுதியாகச் சொல்லுகிறான். அவன் எப்படிப் போனால் எனக்கென்ன? ஷஷ்டாஷ்டகம் பஞ்சாக்ஷரம் என்று வீண்கதை கட்டுகிறாய். வேண்டவே வேண்டாம்"

சற்றுநேரத்தில் இருவருக்கும் வாக்குவாதம் முற்றி இன்னொருவர் வந்து விலக்கும் நிலைமைக்கு வந்துவிட்டார்கள். கடைசியில் கோபாலன் தகப்பனார் கோபத்துடன் எழுந்து சென்றுவிட்டார். கோபாலனுக்கு நன்மதி புகட்டிவிட்டு ஊருக்கும் சென்றுவிட்டார்.

(தொடரும்.)

சியில் ஜயித்தாள். பிச்சைக்கு என்ன? தினம் ஒரு விளையாட்டுச்சாமான், நித்தியம் ஒரு புதுத் தின்பண்டம், வேளைக்கு ஒரு சட்டை, நகை. பாட்டியும் தாதாவும் மாமாவும் நாளைக்கு ஒருவர் வந்தார்கள் குழந்தையைப் பார்க்க. இந்தத் தாதா இல்லாவிட்டால் அவனுக்கென்ன குறை? மனமார வீட்டில் அவரை நினைப்பவர்கள் அலமுவும் ராஜாமணியும்தான்.

பொழுது விடிந்தால் நித்தியம் வீட்டில் விருந்துதான். அமர்க்களம்தான். எல்லாவற்றிற்கும் ஈடுகொடுக்கவேண்டும் அலமு.

ராஜாமணிக்கோ பிச்சை பிறந்ததனால் ஒரே கொண்டாட்டம், அவன் பட்ட ஸந்தோஷம் இவ்வளவு அவ்வளவு இல்லை. தம்பியைத் தொட்டிலில் போட்டு ஆட்டுவான். தனக்குத் தெரிந்த விளையாட்டைக் காட்டிக் கைகொட்டுவான். குழந்தையைத் தடவித்தடவிப் பார்ப்பான். "பெரியம்மா பிச்சையை என் மடியில் வெக்கறயா" என்று ஆசையுடன் பெரியம்மாவைப் பார்த்துக் கேட்பான். கற்பகமா கொடுத்துவிடுவாள். "வேண்டாம் அவனுக்கு உடம்பு சரியாய் இல்லை" என்று ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லிவிடுவாள். மேலும் விடமாட்டான் ராஜாமணி. "ஏன் பெரியம்மா இன்னும் கொஞ்சம் பெரியவனானா பிச்சை என்னோடே விளையாட வருவானோன்னோ" என்று ஆசையுடன் அவளைக் கேட்பான். பேசாமலிருந்தாலும் இருப்பாள். சில சமயம் குழந்தையின்பேரில் "சள்ளென்று" விழுவாள். ராஜாமணியின் முகம் வாடிவிடும். அவன் உள்ளத்தில் துக்கம் பொங்கும். கண்ணும் கண்ணீருமாய் அலமுவிடம் வந்துசேருவான்.

ராஜாமணிக்கு ஐந்து வயது இன்னும் நிறையவில்லை. நிறைந்தஉடனேயே அவனைப் பள்ளிக்கூடத்தில் வைக்கவேணுமென்று சொல்லிக்கொண்டிருந்தார் அவன் பெரியப்பா. ஆனால் அதற்குள் ராஜாமணியை வேறு இடத்திற்கே அனுப்பும்படியாய்விட்டது.

ராஜாமணியின் தகப்பனார் வேங்கடராமன் உயிருடனிருந்தவரையில் வீட்டில் எதுவானாலும் ஸரி அவன் தலையில்தான் வந்து விடிந்துகொண்டிருந்தது. பாவம் அவன் அசடுதானே? அவனை யார் என்ன சொன்னால் என்ன? இப்பொழுதோ அதை ஏற்றுக்கொள்ள வேண்டியவன் அவன் மகன் ராஜாமணியாய்விட்டான். தந்தையுடைய சொத்து ஸுதந்தரத்திற்கு அவன் ஆளாவது ஸந்தேகமாய் இருந்தாலும் இப்பட்டத்திற்கு அவன் தயாராய் விட்டான். விளையாட்டு ஸாமானோ, பேனாவோ, பென்ஸிலோ, எது காணாமற்போனாலும் ராஜாமணிக்குத்தான் ஆசீர்வாதம். எது உடைந்தாலும் அவன் தலையும் உடையும். தாரைதாரையாய்க் கண்ணீர்விட்டு அழும் குழந்தையைக் காணும் பொழுது அலமுவுக்கு என்ன ஸுகம்? வரவர அவளால் பொறுக்கமுடியவில்லை. எவ்வளவு வருஷங்கள் பொறுப்பது? என்று விடியும் என்று நினைத்துக் காத்திருப்பது? அவளும் பொறுமையை இழக்க ஆரம்பித்துவிட்டாள். குழந்தையைக் கண்டு களிக்கவேண்டிய அவளுக்கு அவன் பேரிலும் வெறுப்பும் கோபமும் உண்டாய்விட்டன. "நீ இல்லாமல் எனக்கு என்ன குறைச்சலாய்இருந்தது? எதுவும் இல்லாவிட்டால் எங்கேயோ ஆத்திலோ குளத்திலோ விழுந்து பிராணனை விட்டிருப்பேனோ இல்லையோ" என்று வெறுத்துக்கொள்ள ஆரம்பித்தாள். அன்பையும் இரக்கத்தையும் இழந்து பேயானாள். அவள் புக்ககம் புகுந்த நாள்முதல் பட்டகஷ்டங்களை நினைக்கும்பொழுது அவள் உள்ளம் சூன்யமாய்த்தோன்றும். தனயனைக் கண்டு தணியவேண்டிய தாபம் கோபமாய் மாறும். அருமையும் ஆதரவும் இன்றி நிற்கும் குழந்தையை அக்கோபாக்னியால் வாட்டிவிடுவாள். அன்பின் ஊற்றுக்கு இருப்பிடமாகிய அவள் உள்ளம் வெறுப்பெனும் கற்பாறையாய் உறைந்துவிடும். குழந்தையை அன்புடன் தடவி அணைக்கும் அன்னையின் கைகள் தவக்கமின்றி அவனை அறையும். ராஜாமணியின் பேரில் அவளுக்கு அன்பில்லையா? அவளால் பொறுக்கமுடியவில்லை. எல்லாவற்றிற்கும் துணிந்துவிட்டாள். வெறுப்பென்னும் ஆயுதங்கொண்டு போராடி அவ்விடத்தைவிட்டு வெளியே வந்துவிட்டாள் "இனி என்னால் இங்கு இருக்க முடியாது" என்று கல்பகத்தினிடம் சொல்லிவிட்டுப் பிறந்தகம் போய்ச்சேர்ந்தாள். அவளுடைய பொறுமை இருந்த இடம் தெரியவில்லை. எல்லாவற்றிற்கும் காரணம் அந்த வெறுப்புத்தான்.

வருஷங்களும் ஓடி மறைந்தன. அலமுவும் குழந்தையும் இங்கு வந்து ஸுமார் இருபது வருஷங்களும் ஓடிவிட்டன, புக்ககத்திலிருந்து ஒருநாள் ஒருவர் கூட எட்டிப்பார்க்கவில்லை.

ராஜாமணி நன்றாய் வளர்ந்து பெரியவனாய் விட்டான். வேங்கடராமனேதான் அச்சு, அப்படியே இருந்தான். நல்ல உயரம், வாட்டசாட்டமான தேகம், நல்ல சிவப்பு, எடுப்பான மூக்கு முழி, வேறு என்னவேண்டும் புருஷப் பிள்ளைக்கு? "ஏண்டி, சச்சுருவம் வேங்கடராமனேதான். கல்யாணத்திலே அவன் எப்படியிருந்தானோ அதேமாதிரி இருக்கிறான் பிள்ளை" என்று ஒருவர்பாக்கி இல்லாமல் சொன்னார்கள். இப்பொழுது இந்தத் தாதாவிற்குச்செல்லப் பேரனாகிவிட்டான் ராஜாமணி. அவனை நல்ல பள்ளிக்கூடத்தில் சேர்த்தார். வேண்டிய துணியோ மணியோ எதுவும் நிறையக்கொடுத்தார். "ராஜாமணி நீ ஸூட்டுத்தான் போட்டுக்கொள்ளணும்" என்றார். அவனுக்கு வேண்டியது வாங்கிக்கொடுத்தார். பாவம் அலமு ஸுகப்படவே இல்லை. இவ

ளுலேயாவது அவளுக்கு விடியனும் என்பது தான் அவருக்கும். பேரனுக்கு வேண்டியது செய்தார்.

ஸூட்டும் பூட்சுமாய், தாதாவின் எதிரில் வந்து நிற்பான் பேரன். "அலமு! ராஜாவைப் பார்த்தாயா? நல்ல துரை மாதிரி இருக்கான். ஒரு துரைசாணிதான் பாக்கி" என்று குலுங்கக்குலுக்கச் சிரிப்பார். அலமுவுக்கு எவ்வளவு ஸந்தோஷம்தான் இராது? ஸந்தோஷத்தால் பூரித்துப்போவாள். "என்னமோ அப்பா, அவன் எப்படியாவது நன்ருய் இருக்கனும்" என்று சொல்லிக்கொண்டே போய் விடுவாள். தாயாரின் கண் பொல்லாதது, என்று சொல்வதுண்டு. அதுதான் பயம் அவளுக்கு. ராஜாவைப்போல் எதிரில் வந்து நிற்கும் அவனைப்பார்க்கக்கூடச் சற்றுப்பயமாய்த் தான் இருக்கும் அவளுக்கு.

இன்னும் பத்தொன்பது வயது நிரம்பவில்லை. பீ. ஏ. பரிக்ஷை பாஸ் செய்துவிட்டான் ராஜாமணி. இன்னும் மேலே உயர்ந்த படிப்பு படிக்க வைக்க வேணுமென்று சொன்னுர் தாதா. கையில் கோதண்டராமையர் கொடுத்த ரொக்கம் கொஞ்சம் இருந்தது. அதை வைத்துக்கொண்டு அவனை நன்ருய்ப் பெரிய வேலைக்குக்கொண்டு வரவேண்டுமென்ற ஆசை. அலமுவின் எண்ணமோ வேறு. இனி படிக்கவேண்டுமானுல் பணச்செலவு. வெளியூருக்குப் போகவேண்டி இருக்கும். அவனையும் விட்டுவிட்டு அவளால் இருக்கமுடியாது. அதனுல் எப்படியோ ஈச்வரன் கொடுத்தது போதும். கையிலிருக்கும் இரண்டு காசை வைத்துக்கொண்டு இங்கேயே ஏதாவது கிடைத்த வேலை ஒன்றை ஒப்புக் கொள்ளவேண்டும் என்பதுதான்.

இவர்கள் எண்ணம் இருக்கட்டும் ராஜாமணிக்கோ எண்ணமே அலாதி. மேலே என்ன செய்யவேணும் என்பதை அவனே தீர்மானித்து வைத்திருந்தான். செல்லக்குழந்தையா, அவன் சொல்வதுதான் நடக்கும். தாதாவும் அவர் விருப்பத்தை அவனிடம் தெரிவித்தார். அலமுவும் அவள் மனத்தைத் தெரியப்படுத்தினுள். ராஜாமணி அசைத்துக் கொடுக்கவில்லை.

ஒரு நாள் அவன் அலமுவிடம் வந்து உட்கார்ந்தான். "அம்மா, நீங்கள் சொல்வதெல்லாம் ஸரி, ஆனுல் நான் என்ன செய்யவேண்டுமென்பதைத் தீர்மானித்துவிட்டேன். அப்படித்தான் செய்யப்போகிறேன். நீயும் இதற்குத் தடை கிடை செய்யக்கூடாது. எவ்வளவு நாள்தான் நீயும் இப்படியே இருந்து கஷ்டப் படுவது? நான் ஸம்பாதித்தால்தானே உனக்கு விடிவு? இதை எல்லாம் யோசித்துக்கொண்டு இங்கேயே உட்கார்ந்திருப்பதில் பயனே இல்லை. பம்பாயில் ஒரு நல்ல வேலை இருக்கிறதாம். இதை ஒப்புக்கொண்டே மேலும் படிக்கலாம். நம்மூரிலிருந்து இன்னும் இரண்டு மூன்று பையன்களும் போகிருர்கள், அவர்களுடன் நானும் போவது என்று தீர்மானித்து விட்டேன்? என்ன சொல்லுகிருய்?" என்ருன்.

"திடுக்" என்று தூக்கிவாரிப்போட்டது அலமுவிற்கு.எப்படி ராஜாமணியை அவ்வளவு தூரம் தனியாய் அனுப்புவாள்? "ஏண்டா அவ்வளவு தூரம் போய் என்னடா படிப்பு? நான் உன்னை அனுப்பிவிட்டுக் கவலைப்படமுடியுமா? ஏதாவது ஒரு வேலை இங்கேயே பார்த்துக் கொண்டால் போகிறது" என்ருள். அவனேடு, ஒவ்வொரு நாள் பட்டிருக்கும் கஷ்டமும் வேதனையும் அவள் மனக்கண்முன் வந்து நின்றன. "வேண்டாமடா ராஜாமணி, இங்கேயே ஏதாவது பார்த்துக்கொள்ளலாமடா" என்ருள்.

ஆனுல் ஒன்றும் பலிக்கவில்லை. ராஜாமணி இதை ஒன்றையும் காதில் வாங்கவில்லை. தாதா சொன்னுலும் இல்லை, அம்மா சொன்னுலும் இல்லை, ஒரே பிடியாய்ப் பிடித்தான். குழந்தைக்கு இவ்வளவு இடம் கொடுத்தது பிசகு என்று ஒரு பக்கம் தோன்றியது அலமுவுக்கு. ஆனுல் அதுவும் அவன் ஒன்றும் கோணல் வழியில் போகவில்லையே? நல்லதைத்தானே செய்ய வேணுமென்கிருன் என்ற மற்ருேர் எண்ணம் அவளைத் தேற்றியது. எது எப்படி இருந்தால் என்ன? ஒரே பிடியாய்ப் பிடித்து ராஜாமணி பம்பாய்க்குப் போய்விட்டான்.

பிள்ளையை ஊருக்கு அனுப்பிவிட்டு ஒவ்வொரு வேளையும் அலமு கவலைப்பட்டுக்கொண்டிருந்தாளே ஒழிய ராஜாமணியிடமிருந்து மேன்மேலும் ஸந்தோஷமான செய்திகளே வந்துகொண்டிருந்தன. அலமுவின் உள்ளத்தில் படர்ந்திருந்த அந்தகாரம் நீங்கி அவள் உள்ளத்தில் புதியதோர் விளக்குப் பிரகாசிக்க ஆரம்பித்தது. 'எப்படியோ எவ்வளவு கஷ்டப் பட்டாலும் அவனுவது நன்ருய் இருக்கமாட்டானு' என்ற ஓர் எண்ணம் அவளுடைய ஆசை விளக்கை இன்னும் பிரகாசமாக எரியச்செய்தது. அவள் செய்த பாக்யம் இரண்டே வருஷத்தில் மாதம் ஐந்நூறு ரூபாய் சம்பளத்தில் உயர்ந்த உத்தியோகஸ்தனுய் விளங்கினுன் ராஜாமணி.

அவ்வளவுதான். அலமுவை வந்து கொத்திப் பிடுங்க ஆரம்பித்துவிட்டார்கள் ஊரார்கள். எங்கெங்த ஊரிலிருந்தோ எவ்வளவோ ஜாதகங்கள் வந்து குவிந்துவிட்டன. கணக்கே இல்லை. அலமுவிற்குத்தான் எவ்வளவு ஸந்தோஷமாய் இராது? அவளுக்கு ஆசைதான் பாவம். "நல்ல அழகாய் ஏற்ற பெண்ணுய்ப் பார்த்துக் கல்யாணம் சுருக்கப் பண்ணிவிடனும் நம்ம ராஜாமணிக்கு" என்று சொன்னுள் அப்பாவிடம். அவருக்கும் அந்த ஆசைதான். "அதற்கென்னடியம்மா அவனுக்குப் பெண்தான் வந்து காத்துக்கொண்டிருக்கே. பார்த்துப் பண்ணினுல் போறது. கடிதாசி எழுதினுல் வரான்" என்ருர் அவர்.

இப்பொழுது அலமுவின் விசாரமே வேறு தினுஸாய்விட்டது. "பகவானே, குழந்தை ஒருவர் கண்ணிலும் படாமல் எங்கேயாவது நன்றாய் இருக்கணும். யார் கண்ணாவது அவனைச் சுட்டுவிடப்போகிறதே!" என்னும் அந்த ஒரே விசாரம்தான். அவனைப்பற்றிப் பெருமையடித்துக்கொள்ள அவளுக்குப் பிடிக்கவில்லை. அவனைப்பற்றி யாராகிலும் சொன்னாலும் அவளுக்கு என்னவோ அது ஒரு கவலையையே உண்டாக்கியது. மனதில் மட்டும் "குழந்தை இவ்வளவு கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கிறானே. ராஜாமாதிரி. அவனைப் பார்க்க அவன் தாதாவும் அப்பாவும் இல்லையே" என்று எவ்வளவோ தடவை ஏங்கினாள். அவள் குறையை எவ்வளவோ தடவை ராஜாமணியிடமும் சொன்னாள். அவனுக்கென்ன குறை?

உத்தியோகம் உயர உயர அவனுக்குப் பெண் கொடுக்கிறேன் என்று வருபவருக்குக் கணக்கே இல்லை. எவ்வளவோ பணக்காரர்கள், உத்தியோகஸ்தர்கள், மிராசுதார்கள் எல்லோரும் அலமுவையும் அவள் தகப்பனாரையும் பார்த்து ஜாதகம் வாங்க வந்தார்கள். அலமுவின் தகப்பனார் ஜாதகம் என்னவோ கொடுத்தார். ஆனால் பையன் உத்தேசத்தைக் கேட்கவேண்டாமா? உத்தியோகம் செய்கிறவன். "கல்யாணப்பிள்ளை பம்பாயிலிருக்கிறான் ஸார். அவனைக் கேட்டுவிட்டுத்தானே எதையும் செய்யவேண்டும்" என்று சொல்லிப் பார்த்தார். ஆனால் அவரை ஒருவரும் விடுவதாய் இல்லை. "அதற்கென்ன ஸார்! முதலில் ஜாதகப் பொருத்தம் நீங்கள் பார்த்துவிடுங்களேன். ஒருதடவை பெண்ணை நீங்களும் பார்த்துவிட்டு அவனுக்கு எழுதிவிட்டால் போகிறது" என்று ஒரேயடியாய் அடித்தார்கள். தாட்சிணியம் அதைத் தட்டவும் முடியவில்லை. அலமுவைக் கேட்டார் அவர். "அப்படியானால் ஸரி, அவனுக்கும் வயஸாச்சு, கல்யாணம் பண்ணவேண்டியதுதானே? நாம் பெண்ணை ஒருதடவை பார்த்துவைத்தால் அப்புறம் அவனும் வந்து பார்க்கட்டுமே, இதில் என்ன வந்துவிட்டது?" என்றாள் அவளும். ராஜாமணிக்கும் சீக்கிரம் கல்யாணம் செய்து தனக்கும் ஒரு நாட்டுப்பெண் வரமாட்டாளா? என்ற ஆசைதான் பாவம் அவளுக்கு.

சில இடங்களுக்குப் போய்ப் பெண் பார்த்துவிட்டு வந்தார் அலமுவின் தகப்பனார். ஆனால் அவர் எவ்வளவு வர்ணித்து என்ன பயன்? அவன் நேரில் பார்த்ததுபோல் ஆகுமா? அதற்குத்தான் "அவனும் பார்க்கவேண்டும், உங்களால் முடியுமானால் பெண்ணை இங்கேயே அழைத்துக்கொண்டுவந்து காண்பித்தால் நல்லது" என்று சொன்னார்.

எவ்வளவோ பெண்களைப் பார்த்தாள் அலமு. அவள் மனதிற்குப் பிடித்த பெண் ஒன்றே ஒன்றுதான். அவளைப் பார்த்தவுடன் "ஹா..." என்று தலையை அசைத்துவிட்டாள். பெண் வீட்டாருக்கும் இந்தச் சம்பந்தத்தைப் பற்றி மிகுந்த திருப்தி. பெண் உயர்ந்த இடத்துப் பெண். வெகு லக்ஷணமாக இருந்தது. நிறத்திலோ, உயரத்திலோ எல்லாம் ராஜாமணிக்கு ஏற்றபெண். அவனுக்குப் படிப்புவேண்டும். அது அலமுவிற்கு தெரியாதா? நன்றாய்ப் படித்த பெண். குற்றம் சொல்வதற்கு ஒன்றும் இல்லை. நகையோ, சீரோ ஒன்றுக்கும் குறைவில்லை, எவ்வளவு செய்வதற்கும் தயாராய் இருந்தார்கள். எல்லாவற்றையும் திருப்தியாய் முடித்து வைப்பதற்குத்தான் அடுத்தாத்துச் சுப்புப்பாட்டி தயாராய் காத்துக்கொண்டிருந்தாள். "பெண் கிளியாட்டம் இருக்குப்பா, பாாத்தால் ராஜாமணி வேண்டாம் என்று சொல்லவே மாட்டான், உடனே எழுதிப் போடுங்கோ. வந்து பார்த்துட்டுப்போகட்டும்" என்றாள் அப்பாவிடம். "ஸரி" என்று உடனே கடிதம் எழுதிவிட்டார் அவர்.
நான்குநாட்களில் ராஜாமணியிடமிருந்து பதில் வந்துவிட்டது. புறப்பட்டு வருகிறேன் என்று எழுதியிருந்தான். உயர்ந்த அந்தஸ்தும், அழகும் பொருந்திய ராஜாமணியைப் பார்க்கும்பொழுது அலமுவுக்குத்தான் எவ்வளவு ஸந்தோஷமாய் இருக்கும்?

எப்படியோ, அதற்குள் ஸமாசாரம் ஊர் முழுவதும் பரவிவிட்டது. கல்யாணமே நிச்சயமாய்விட்டதுபோல் வீட்டிற்கு வீடு பேச்சு நடந்துகொண்டிருந்தது. "அவர் இன்னடீ கெட்டிக்காரர், ஒரே பிடியாய் நின்று கல்யாணத்தை முடித்துவிட்டார் பாரேன், மாப்பிள்ளையாவது மாப்பிள்ளை, பிடிச்சாலும் அப்படின்னா பிடிக்கணும்" என்று ஒருவருக்கொருவர் வாய் ஓயவில்லை பேச்சு.

அலமு அதற்குள் தன் மனத்திற்குள் எவ்வளவோ தீர்மானங்கள் செய்துவிட்டாள். ராஜாமணி கல்யாணம் பண்ணிக்கொண்டால் ஸரி, இல்லாவிட்டால் அவனுடன் பம்பாய்க்குப் புறப்பட்டு விடுவது. இனி அவனைத் தனியாய் விட்டுவிட்டு இருப்பதில்லை என்று திட்டம் போட்டு வைத்தாள். "அதற்கென்ன? அவனும் எவ்வளவு நாள் தனியாய் இருப்பான், உன்னிஷ்டப்படி செய்" என்று சொல்லிவிட்டார் அவள் தகப்பனாரும்.

•

கல்யாணப் பாத்திரங்களுக்கு ஜாப்தா தயாரித்தாள் சுப்புப்பாட்டீ. "அது கிடக்கட்டும் பாட்டீ, கல்யாணப் பாத்திரம் எல்லாம் பெரிய பெரிய பாத்திரமான்னா இருக்கும், சின்ன குடித்தனமாய்ச்செய்ய அழகு அழகாய் வாங்கவேண்டாமோ" என்றாள் அலமு. "போடீ, பைத்தியமே, இதை நீ போய் வாங்குவாயோ, அவனையே வாங்கித் தரச் சொன்னா ஸலாம் போட்டுண்டு வாங்கி வைக்கறா, இதுக்கொரு கவலை, அசடே, போ" என்று ஒரு போடு போட்டாள் சுப்புப் பாட்டி.

"ஓகோ, வாங்குவதில் பலே பேர்வழிதான் பாட்டி" என்று ஸந்தோஷப்பட்டுக்கொண்டாள் அலமு.

திங்கட்கிழமை வருவதாய் எழுதி இருந்தான் ராஜாமணி. நாளை எண்ணிக்கொண்டிருந்தாள் அலமு. அலமுவிற்கு ஒருநாள் ஒரு யுகமாய்த் தோன்றியதேயொழிய அதற்காக நாள் நின்று விடுமா? அவள் எதிர்பார்த்த நாளும் வந்தது. ரயிலிலிருந்து ராஜாமணி வரப்போகிறான் என்றுஎதிர்பார்த்துக்கொண்டிருந்தாள் அவள். ஆனால் ரயிலடிக்குச் சென்றிருந்த அவள் தகப்பனார் தனியாகத் திரும்பிவந்தார்.

அலமுவுக்கு வயிற்றில் என்னவோ சங்கடம் பண்ணத் தொடங்கிவிட்டது. ரயில் வண்டி எதாவது ஸரியாய் வரவில்லையோ என்று கலங்கினாள். இல்லை, எல்லாம் அவள் கலக்கம் தான். வண்டி ஸரியான நேரத்திற்கு வந்து எவ்வளவு ஜனங்கள் வரவில்லை. எல்லாம் அவளுக்கு உண்டான பிரமைதான். திரும்பித் திருப்பித் தகப்பனாரை விசாரிக்கச்சென்றாள். ஒரே வார்த்தையை அவள் எவ்வளவு தடவை திருப்பித் திருப்பித் சொன்னாள் என்பது அவளுக்கு எப்படித் தெரியும்? பாவம்! கவலை அவளை அவ்விதம் ஆட்டியது. தந்திமேல் தந்தி பறந்தது பம்பாய்க்கு. பதில் வருவதற்கு நேரமாகவில்லை.

"பகவானே, என் ராஜாமணி நன்றாய் இருக்கவேணும், அவனுக்கு ஒரு குறைவும் வரக்கூடாது ஆண்டவனே" என்று வாய் ஓயாமல் பிரார்த்தித்துக்கொண்டிருந்தாள் பூஜை அறையில்போய்.

மணி பதினொன்று இருக்கும்—அலமு பூஜை அறையில் இருந்தாள். "அலமு" என்றுகூப்பிட்டார் அவள் தகப்பனார். ஓடி வந்தாள் அலமு, "ஏனப்பா தந்திவந்ததா?" என்றுகேட்டுக்கொண்டே. அவர் ஒன்றும் பேசவில்லை. கையிலிருந்த கடிதத்தை அவளிடம் கொடுத்துவிட்டு நாற்காலியில் சாய்ந்தார். வாடிப்போயிருந்தது அவர் முகம்.

"ராஜாமணி எழுதி இருக்கானா அப்பா, உடம்பு ஒன்றும் இல்லையே" என்று கேட்டுக்கொண்டே கடிதத்தைப் பிரித்தாள் அவள்—அவள் உடல் பதறிக்கொண்டிருந்தது. நெஞ்சு கவலையாய்த் துடித்துக்கொண்டிருந்தது. கடிதம்! ராஜாமணி எழுதி இருந்தான்! அலமுவுக்கு.

அம்மா,

நான் புறப்பட்டு வருவதாய் இருந்தேன். என்னை மன்னிக்கவேணடும். நேரில் வந்து உங்களிடம் சொல்லலாம் என்று நினைத்தேன். ஆனால் எனக்குத் தைர்யம் வரவில்லை. என்மேல் தப்பிதம்தான். ஆனால் நான் என்ன செய்வேன்? நான் ஸந்தோஷமாய் இருக்க வேண்டுமென்று நீங்கள் விரும்பினால் என்னிஷ்டத்திற்கு விரோதமாகச் சொல்லமாட்டீர்கள். அம்மாவல்லவா நீங்கள்? என்னை மன்னிக்க வேண்டும். நான் இங்கேயே என் மேலதிகாரியின் பெண்ணை மணப்பதாய் நிச்சயம் செய்து அவர்களுக்கும் வாக்குக்கொடுத்துவிட்டேன். அப்பெண்ணைத்தான் நான் மணக்க விரும்புகிறேன். நீங்கள் அவ்விடமே இருப்பது நலம் என்று எனக்குத் தோன்றுகிறது. தங்களுக்கு நானும் கடமைப்பட்டவன். மாதம் உங்களுக்கு வேண்டிய உதவியை எவ்வளவானாலும் செய்யத் தயாராய் இருக்கிறேன். பிழைதான். என்னை மன்னிக்கவேண்டும்.

இப்படிக்கு,
ராஜாமணி.

தரையில் சாய்ந்தாள் அலமு. அவள் கட்டியிருந்த ஆசைக்கோட்டை இடிந்து மண்ணோடு மண்ணாய்விட்டது. ராஜாமணியால் அவள் உள்ளத்தில் ஏற்றிவைக்கப்படிருந்த விளக்குச் சுடர்விட்டு எரிந்து, அணைந்தது. காரிருள் வந்து சூழ்ந்தது அவள் உள்ளத்தில். இரவுகள் ஓடி மறைந்தன. பொழுதும் விடிந்து மறைந்தது. ஆனால் அலமுவிற்கு விடிவு ஏற்படுவது எப்பொழுது? பயங்கரமான இருள்வந்து அவளைச் சூழ்ந்துகொண்டது.

ஆப்டோன் ப்ளாக்குக்களும்
அழகான கலர் ப்ளாக்குக்களும்
செய்யுமிடம்!

எம். ஸி.
அப்பாசாமி செட்டி & கோ.,
14, ஜோன்ஸ் தெரு, மண்ணடி,
மதராஸ்.

தெய்வப் பெண்

'ஹரிணி'

சித்திரை மாதம். கடுமையான வெய்யில். மாலை ஐந்து மணியாகும் ஸமயம். குளிர்ந்த தண்ணீரில் குளித்துவிட்டு என்னுடைய உடுப்பறையில் நுழைந்தேன். 'உஸ்' அப்பாடா! என்ன வெய்யில்' என்று முணகிய வண்ணம் அருகிலிருந்த சாய்வு நாற்காலியில் படுத்தேன். எதிரேயுள்ள என்னருமைச் 'சுகந்தி'யின் படம் என்னைப் பார்த்துச் சிரிப்பதுபோன்றிருந்தது. அவள் கண்களில் சோகம் ததும்பி நின்றது. அந்தச் சோகப்புன்னகை என்னை எங்கேயோ இழுத்துச்சென்றது. என்னையுமறியாமல் என் மனம் பழைய நினைவுகளிற் சுழன்றது. ஆம்! இன்று நேற்று நடந்ததன்று, அந்தத் துக்கமயமான ஸம்பவம் நடந்து பன்னிரண்டு வருடங்களாகிவிட்டன. ஆயினும் பேதைச் சுகந்தியின் ஏங்கியமுகம் இன்னமும் என் மனத்தை விட்டகலவில்லை. அச்சம்பவம் இன்றுதான் நடப்பதுபோன்று என் மனக்கண்களின் முன்பாகத் தோற்றமளித்தது. மனம் சொல்லமுடியாத வேதனையிலாழ்ந்தது. சில நிமிஷங்கள் கண்களை மூடிக் கனா உலகில் சஞ்சரித்தேன்.

"மணி ஐந்தடித்துவிட்டது. இன்னுமா தூக்கம்? இனிமேலேபோனால் ஒரு 'ஸெட்' கூட ஆடமுடியாதே. வாயாடி மீனாக்ஷி வந்துவிட்டால் நம் ஆட்டம் திண்டாட்டம்தான். கோர்ட்டைப் பிடித்துக்கொண்டு அட்டகாசம் செய்வாள். நன்றாய்த் தூங்கினாய், எழுந்திரடீ கமலா" என்று அதட்டிய விமலாவின் குரலைக்கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தேன்.

"இல்லை விமலா! நான் இன்று 'கிளப்பி'ற்கு வரவில்லை. நீ போய் விட்டு வா" என்றேன்.

" கமலா! என்ன சமாசாரம்? ஏன் உன் கண்கள் இப்படிக் கலங்கியிருக்கின்றன?' என்று பதட்டமாகக்கேட்டாள்.

"ஒன்றுமில்லை விமலா, ஏதோ பழைய ஞாபகம், என் சுகந்தியின் நினைவு வந்தது. மனம் சற்றுச் சஞ்சலமாயிருக்கிறது".

"என்ன? சுகந்தியா? யாரவள்? உன் தங்கையா? அவளுக்கென்ன?"

"ஆம்! விமலா! என் சுகந்தி என் சகோதரிக்கும் மேலானவள். பாவம், பேதைப்பெண். அவளுடைய வாழ்க்கையில் அவள் கண்ட கனவு, கனவாகவே முடிந்துவிட்டது." "அஃது என்ன? அப்படி என்ன நடந்தது? எனக்குச் சொல்லேன். எப்படியும் நேரமாகிவிட்டது. நான் இன்று பந்தாடப்போகவில்லை.' என்று கூறியவண்ணம் எதிரேயுள்ள நாற்காலியில் உட்கார்ந்தாள்.

"அதனைச் சொல்லவேண்டுமா? ஒரு சாதாரண கதைதான். ஆனால் மனதைக் கலக்கிவிடும்", என்று சொல்ல ஆரம்பித்தேன்.

ஃ ஃ ஃ

1

சுகந்தியும், நானும் இணைபிரியாத தோழியர் ஆனோம். அவள் ஒரு நாள்கூட என்னைப்பார்க்காமலிருக்கமாட்டாள். நான் என்ன மழையானாலும், வெய்யிலானாலும், சாப்பாடு முடிந்ததும் அவள் வீட்டிற்கு ஓடிவிடுவேன். அவளும் அப்படியே செய்வாள். அவர்கள் 'பங்களா' எங்கள் வீட்டிற்கு அருகிலேயேயிருந்தது.

பாரிஸ்டர் சிவக்கொழுந்து முதலியாருடைய கடைசிப்பெண்தான் சுகந்தி. நல்ல சிவப்பு. கொடிபோன்ற சரீரம். புன்சிரிப்புத் தவழும் முகம். கபடமற்ற உள்ளம். நிதானமான பேச்சு. சாந்தகுணம். எப்பொழுதும் குழந்தையைப்போல் விளையாடுவாள். கலகலவென்று சிரிக்கும்பொழுது கவலையெல்லாம் பறந்துவிடும்.

பாவம்! தாயற்ற குழந்தை. அவளுக்குத் தாயும் தந்தையும், ஆசாரியனும், விளையாட்டுத் தோழனுமாயிருந்தவர் அவள் தந்தையே. தாயில்லாக்குறையை அறியாமலிருக்க அவளை மிகச்செல்வமாக வளர்த்தார். அவர் கோர்ட்டுக்குப் போகும்வரையில் சுகந்தி அவருடைய 'ஆபீஸ்' அறையிலேயேதானிருப்பாள். அவரைவிட்டு ஒரு நிமிஷம்கூடப் பிரியமாட்டாள். தினந்தோறும் அவருக்குத் தலை வாரி, நெற்றிக்கும் பொட்டு இட்டு, சட்டைகளை எடுத்துக்கொடுத்து, பூட்ஸை அணிவித்து, கோர்ட்டுக்குச்செல்லத்தயாராய்க் காத்திருக்கும் வண்டிவரையில் கொண்டுவந்து விட்ட பிறகுதான் மற்றவேலைகளைக் கவனிப்பாள். சாயங்காலம் அழகிய வெள்ளைக் குதிரை பூட்டிய 'கோச்'

வண்டியில் வந்து இறங்கியதும் முதலியார் 'சுகந்தி' என்று கூப்பிட்டபடியே உள்ளே நுழைவார். அவ்வளவுதான் "இதோ வந்தேன் அப்பா" என்று கையில் எது இருந்தாலும் போட்டுவிட்டுக் குடுகுடுவென்று ஓடிவந்து விடுவாள்.

முதலியார் மிகவும் அடக்கமும், சாந்த குண முமுள்ளவர். யாவரிடமும் மிருதுவாகப் பேசுவார். அன்புடன் உபசரிப்பார். தூய வெண்மையான உடை தரித்து, பரிசுத்தமாக விளங்குவார். முகத்தில் 'களை' சொட்டும். லக்ஷ்மி கடாக்ஷம் நிரம்பியவர்.

முதலியாரின் தங்கை நீலாம்பிகையம்மாள் தான் வீட்டிற்கு யஜமானி. அவளிஷ்டப்படியே யாவும் நடக்கும். குடும்பக்காரியங்களில் கை தேர்ந்தவள். வேலைக்காரர்களிடம் வெகு சாமர்த்தியமாக வேலைவாங்குவாள். கண்டிப்பான ஆசாமி. ஆரத்திர ஆலோசிக்காமல் ஒரு வேலையிலும் தலையிடமாட்டாள்.

சுகந்தியின் விவாஹத்தைச் 'சுயம்வரம்' என்றே சொல்லலாம், நீலாம்பிகைக்கு அந்த வரன் இஷ்டமேயில்லைதான். பாரிஸ்டருக்கும் சம்மதக்குறைவுதான். என்ன செய்வது? தம் செல்வப்புதல்வியின் இஷ்டத்திற்கு விரோதமாகச் சொல்ல அவர் மனம் துணியவில்லை. கடைசியில் விவாகம் விமரிசையாக நடை பெற்றது.

சுகந்தியின் கணவன் துரைசாமி. அப்பொழுது 'பி. ஏ.' வகுப்பில் படித்துக்கொண்டிருந்தான். அவன் தகப்பனுர் பெரிய பணக்காரர். பெருங் குடும்பத்திற் பிறந்தவர். நல்லகுணமுள்ளவரே. ஆனுலும் என்ன காரணத்தினுலோ பாரிஸ்டருக்கு அந்தச்சம்பந்தத்தில இஷ்டமில்லை. துரைசாமியின் அழகில்தான் சுகந்தி மயங்கிவிட்டாள்போலிருக்கிறது.

உடலிரண்டும், மனமொன்றுமாக ஒற்றுமையுற்றிருந்த தந்தைக்கும், மகளுக்கும் நடுவில் இப்பொழுது ஒரு மானஸீகத்திரை போடப்பட்டது. சுகந்தி புக்ககத்திற்குச் சென்று ஒரு மாதமிருந்துவிட்டு வந்தாள். அதற்குப்பிறகு ஓயாமல் கணவனைப்பற்றிய பேச்சுத்தான்.

"என்ன அழகோ காண்டாமிருகம்போல, நீ தான் புகழனும் உன் அகமுடையானை". என்று பரிகசிப்பேன்.

"உஸ், பேசாதே. அவரா அழகில்லை? என் கண்ணைக்கொண்டு பாரடி, தெரியும். கொஞ்சம் பருமன். இருந்தால் என்ன? உனக்கும் கல்யாணம் ஆகட்டும் சொல்லுகிறேன் இரு" என்பாள்,

இவ்விதமாக வேடிக்கையும், விளையாட்டுமாக இரண்டு வருடங்கள் ஓடி மறைந்தன.

ஃ ஃ ஃ

2

ஒருநாள் மாலை ஆறுமணி வேளை. சுகந்தியின் வீட்டிற்குப்போனேன். அவள் தோட்டத்தில் இருப்பதாக அத்தை சொன்னுள். தோட்டத்தில் நுழைந்தேன். சுகந்தி கிணற்றின் மேல் கன்னத்தில் கைவைத்தபடி உட்கார்ந்திருந்தாள். அவள் கண்கள் வெட்டவெளியை வெறித்துப்பார்த்தன. கண்ணீர் மாலைமாலையாக வழிந்துகொண்டிருந்தது. என் உள்ளம் துடித்தது. 'சுகந்தி! என்ன இது?" என்றேன். அவள் பரபரப்புடன் கண்களைத் துடைத்துக் கொண்டு நாற்புறமும் சுற்றிப்பார்த்தாள். சட்டென்று குனிந்து ஒரு காகித உரையை எடுத்துக்கிணற்றில் போட்டாள். எனக்குச் சந்தேகம் உண்டாயிற்று.

அருகிலுள்ள திண்ணையில் அமர்ந்தோம். வெகு நேரம் அவள் பேசவில்லை. என் தோளில் சாய்ந்தபடியே வெட்ட வெளியைக் கண் கொட்டாமல் பார்த்தாள். நீண்ட மௌனம். அந்த நிலையைக் கலைத்தது 'கூ' என்ற சப்தம். உடனே சுகந்தி நிமிர்ந்து உட்கார்ந்தாள். அருகிலுள்ள ரயில்வே ஸ்டேஷனிலிருந்து, புகைவண்டித்தொடர் வேகமாகச் செல்லும் சப்தம் கேட்டது. சுகந்தி மெதுவாகச் சிரித்தாள்.

என்னுல் இந்த மௌனத்தைச் சகிக்கமுடியவில்லை. பல கேள்விகளை அடுக்கினேன். பதிலில்லை. பெருமூச்சுடன் என்னை உற்றுப்பார்த்தாள். ஐயோ! அந்தக் கண்களில்தான் என்ன சோகம்! என்ன ஏமாற்றம்!

"என்ன சுகந்தி! இவையெல்லாம் என்ன? உனக்கென்ன வருத்தம்? சொல்லேன்!" என்று வேண்டினேன்.

"கமலா" உனக்கெதற்கம்மா வீண் கஷ்டம்? என் துக்கம் என் உள்ளத்திலேயே கிடந்து என்னுடனேயே அழியட்டும்." என்று அடக்கமாகக் கூறினுள்.

"இல்லை, நீ சொல்லத்தான் வேண்டும். மனதிலுள்ள கஷ்டங்களைப் பிறரிடம் சொல்லிக் கொண்டால் சற்று ஆறுதலாவிருக்கும். என்னிடம்கூடவா ஒளிக்கவேண்டும்? சொல்லு" என்று கூறும்பொழுதே, அருகில் குதிரைகளின் காலடிச்சத்தம் கேட்டது. தொடர்ந்தாற்போல் "சுகந்தி!" என்ற குரல். "இதோ வந்தேன் அப்பா!" என்றவண்ணம் ஓட்டமெடுத்தாள். அச்சமயம் அவளுடைய கவலைகள் எங்கு ஓடி மறைந்தனவோ! நான் பிரமித்து நின்றேன்.

ஃ ஃ ஃ

3

பிறகு அத்தையிடம் கூறினேன். "ஐயோ! பாவிப்பெண் கிணற்றில் விழுந்துகிடக்கப்போ

கிறதே! எனக்கு அப்போதே தெரியும். என்ன செய்ய? அவனைத்தான் கட்டிக்கொள்வேன் என்று ஒத்தைக்காலிலே நின்னுதே அசடு. கிளியாட்டமா பெண்ணை வீட்டிலே அடச்சி வச்சிருக்கு. இந்தக்கண் செய்த பாவம்" என்று கண்ணீர்விட்டாள்.

"ஏன்! மாப்பிள்ளைக்கு என்ன? கடுதாசு வரதோ இல்லையோ"?

"ஐயோ! அதை ஏன் கேட்கிறே? வாரம் வாரம் கடுதாசு, மாசம், மாசம் வந்து குலாவல். எல்லாம் ரொம்பத்தான் ஆடினான். இந்த அசட்டுப் பெண்ணுக்கு உலகமே தெரியலே. 'என்னமோ சிறுசு' என்று இருந்தோம். படிப்பு முடிப்பாப் போச்சு. இரண்டு வருஷத்துக்கு மின்னே 'எப். எல்' பரீக்ஷையில் குண்டு வாங்கிவிட்டான். திருவனந்தபுரம் போய் ஒரே வருஷத்தில் புரட்டிவிடுவேனாக்கும், என்று பிடிவாதம் செய்தான். எவ்வளவோ சொன்னோம். கேட்டாத்தானே. விதியிருக்கே, பிடிச்சுது சனியன். ஒரு வருஷமா கடுதாசுகூட இல்லை" என்று கண்ணைத் துடைத்துக்கொண்டாள்.

''அப்படியா சமாசாரம்? சுகந்தி என்னுடன் சொல்லவேயில்லையே. போன வருஷம்கூட வந்திருந்தார்போலிருக்கே? ஆறு மாசமாய் நான் ஊரில் இல்லாதபடியால் எனக்கு ஒன்றுமே தெரியவில்லை''.

''உன்னோடயா? வீட்டிலே மாத்திரம் யாரோடாவது சொன்னாளா? பேச்சே எடுக்கமாட்டாள். போனவருஷம் வந்திருந்தபோது கல்லாட்டமா இருந்த நாற்பது பவுன் காசு மாலையைத் தூக்கிக்கொடுத்துட்டுது அசடு. ஐய! அவன் வந்திருந்தப்போ என்ன சிரிப்பு? என்ன விளையாட்டு? அந்தப்பாவியினுடைய பசப்பு வார்த்தையில் மயங்கிவிட்டது. எனக்கென்னமோ சந்தேகந்தான். சொன்னால் இந்தப்பெண் நம்பாது. அந்தப்பாவியிடம் ஒரே நம்பிக்கை. ஆசை. நெனச்சு நெனச்சு உருகிப் போறா."

''கமலா! இங்கே வாயேன், ஒரு வேடிக்கை'' என்று கத்தினாள் சுகந்து. நான் மாடிக்கு ஓடினேன்.

"என்ன! அத்தை அளக்கிறாளோ? அவளுக்கென்ன வேலை? ஏதாவது உளறுவாள். அவர் கெட்டவர் என்கிறாளோ! இல்லவே இல்லை. ஒரு வேளை பரீக்ஷை தவறிவிட்டிருக்கும். வெட்கப்பட்டுக்கொண்டு எழுதாமலிருக்கிறாரோ என்னவோ! திடீரென்று ஒரு நாள் வந்துநிற்பார்."

எனக்கு ஒன்றுமே தெரியவில்லை. அவள் முகம் நம்பிக்கை நிரம்பியிருந்தது. அவளையே கவனித்தேன்:

''ஆனால் கமலா! இதோ பார்! என் தேகம் எப்படி நடுங்குகிறது பார். எத்தனை இரவுகள் நான் தூங்கவில்லை தெரியுமா? என் இரத்தம் கொதித்துப்போய்விட்டது. என் கையைத் தொட்டுப்பார். என்னால் அவரைப் பிரிந்திருக்கவே முடியவில்லை" என்று பெருமூச்சுவிட்டாள். அவள் நிலைமை மிக்க பரிதாபகரமாயிருந்தது.

இப்பொழுது நாங்கள் உலாவச் செல்வதில்லை. ஓயாமல் தன்னுடைய கணவனைப்பற்றியும், அவன் தன்னிடத்தில் எவ்வளவு அன்பாயிருக்கிறான் என்பதைப்பற்றியும்தான் பேசுவாள். அதனால் அவள் மனம் சற்றுச் சாந்தியடையும். நானும் அலுத்துக்கொள்ளாமற் கேட்பேன். எப்படியோ? அவள் மனம் திருப்தியடைந்தால் போதும் என்று நினைப்பேன். தன் கணவன் எழுதிய பழைய கடிதங்களைத் தினமொருமுறை பாராயணம் செய்வாள். ரயில்வண்டி எஞ்ஜின் கூவும் சப்தம் எப்போது கேட்டாலும் தாய்ப்பசுவின் குரலைக் கேட்டுத் தலைநிமிர்ந்து நோக்கும் கன்றைப் போல் ஆவலுடன் நிற்பாள். "ஒரு வேளை இந்த ரயிலில் வரலாம்'' என்று அவள் வாய் முணுமுணுக்கும். ஆவல் நிறைந்தவளாக வாசலிற்போய் நிற்பாள். ''சாயங்காலம் நான் எங்கும் வரமாட்டேன். அவர் வரும்போது நான் வீட்டில் இல்லாவிட்டால் என்ன நினைப்பார்?" என்று கூறுவாள்.

ஐயோ! இஃதென்ன பைத்தியம்? என்று நினைப்பேன்.

ஃ ஃ ஃ

4

நாட்கள் ஓடின. சுகந்தியின் கணவன் வரவில்லை. அவளோ நாளுக்குநாள் இளைத்துத் துரும்பாகிவிட்டாள். டாக்டர்கள் 'காசநோய்' என்றனர். மருந்துகள் ஒன்றும் குணமளிக்கவில்லை. வெளியூர் வாசம் நல்லதென்று கூறினர். அவள் அவ்விடத்தை விட்டு அசையவே மாட்டேனென்று சொல்லிவிட்டாள். "அவர் எந்த நிமிஷம் வருவாரோ! நான் இவ்விடத்தைவிட்டு நகரவேமாட்டேன்" என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டாள்.

பகல் இரண்டுமணியிருக்கும். நான் அவள் வீட்டிற்குச் சென்றேன். அவள் பெட்டியில் சாமான்களை அடுக்கிக்கொண்டிருந்தாள். ''என்ன! ஊருக்கா?" என்றேன்.

''இல்லை, அவர் வந்து 'உடனே புறப்படு' என்றால், அதற்காகத் தயாராக இருக்கலாமென்றுதான்" என்றாள். 'ஐயோ இஃதென்ன பேதைமை'! என்று வருந்தினேன். ஒரு பெட்டி நிறையச் சிறு பாத்திரங்கள், ஒரு பெட்டியில் அவனுடைய உடுப்புக்கள், ஒரு சிறு தோற்

பெட்டி நிறையப் பனியன்களும், அரை நிஜார்களும் வைத்திருந்தாள். இவைகள் அவள் கணவனுக்காக அவளே தைத்தவைகள்.

''அஃதிருக்கட்டும், அத்தை சொல்வதுபோல் உன் கணவருக்கு இன்னொருமனைவி இருப்பது உண்மையா''......

"இருக்கட்டுமே. நான் அவருக்குப் பணிவிடை செய்துகொண்டு அவருடைய அருகிலேயே இருப்பேன்" என்று வெடுக்கென்று பதில் சொன்னாள்.

அவளுடைய இணையற்ற பிரேமையைக் கண்டு அதிசயமடைந்தேன். பல சம்பவங்களுக்கிடையில் சில தினங்கள் சென்றன. "என்னை அவரிடமே கொண்டுபோய் விட்டு விடுங்கள்". என்று மன்றாடினாள். முதலியார் முகத்தைப் பார்க்கவே முடியவில்லை. யாவரும் திருவனந்தபுரம் புறப்பட்டார்கள். "ஊர்களைச்சுற்றிப் பார்த்து வரலாம் நீயும் வாயேன்" என்று அத்தையும், சுகந்தியும் என்னை வற்புறுத்தினபடியால், என் பெற்றோர்கள் என்னையும் அனுப்பிவைத்தனர்.

மதுரையில் தங்கினோம். அவ்விடத்தில் ஒரு மகான் இருப்பதாகவும், அவரைத் தரிசித்தால் சகல கஷ்டங்களும் நீங்குவதாகவும் அத்தையிடம் யாரோ கூறிவிட்டனர். ஆகையால் அத்தை மதுரையில் சில நாள் தங்கவேண்டுமென்று கண்டிப்பாக உத்தரவிட்டாள். மகானைத் தரிசித்தோம். 'ரக்ஷை' கொடுத்தார். அங்கிருந்து புறப்பட இன்னும் நான்கு நாட்கள்தானிருந்தன. சுகந்தியின் ஆனந்தத்திற்கு எல்லையேயில்லை. அத்தை மாத்திரம் ஏதோ யோசித்த வண்ணமிருந்தாள். திடீரென்று ஒரு நாள் முதலியாரைக் கூப்பிட்டுத் திருவனந்தபுரம் போகக்கூடாது, ஊருக்கு உடனே திரும்பவேண்டுமென்றாள். முதலியாரும் நானும் எவ்வளவு சொல்லியும், அத்தை கேட்கவில்லை.

"அண்ணா! உனக்குத் தெரியாது. அவன் அயோக்யன். ஏதாவது எக்கச்சக்கமாகிவிட்டால், பாவி எதைவேணுமானாலும் சொல்லுவான். பிறகு நம் குழந்தைக்கும், குடும்பத்துக்கும் அபகீர்த்தி. தவிர அவனை நம்பி, குழந்தையை எப்படி விடுவது? முகமறியாத ஊரில் சிறுமி என்ன செய்வாள்? சொல்லாமல் ஓடி விடுவான். மண்டபத்தில் சிலநாளிருந்து, குழந்தையின் உடம்பைப் பார்த்துக்கொண்டு போகலாம்." என்று கூறிவிட்டாள். அதற்குப்பிறகு சுகந்தா எழுந்திருக்கவேயில்லை. குளிப்பதுமில்லை, சாப்பிடுவதுமில்லை. அழுது அழுது கண் வீங்கிவிட்டது. அத்தையைக்கண்டால் கோபம் இவ்வளவென்று சொல்லமுடியாது. முதலியார் ஒன்றும் சொல்லமுடியாமல் தவித்தார். அத்தை மூட்டை முடிச்சுக்களைக் கட்ட ஆரம்பித்துவிட்டாள். ஆனால் மண்டபத்திற்கும் போகவில்லை. முடிவில் எல்லாரும் ஊர்வந்து சேர்ந்தோம்.

ஃ ஃ ஃ

5

வியாதி முற்றிவிட்டது. சுகந்தி படுத்த படுக்கையில் கிடந்தாள். மனோ வியாதிக்கு மருந்தேது? மெருகிடப்பட்டது போன்ற அவள் சரீரம், சுருங்கி உலர்ந்து விட்டது. தங்கப்பதுமை போலிருந்தவள் கருத்து, இளைத்து விகாரமாகிவிட்டாள். இடுப்பில் ஒரு சிறு பாவாடைதான். அவள் வெகு ஆவலுடன் சேர்த்த புடவைகளும், விதவிதமான 'ஜாகிட்'களும் ஒரு மூலையில் கேட்பாரின்றிக் கிடந்தன. அத்தையினுடைய கண்ணீர் வற்றவேயில்லை.

ஒரு நாள் என்னைக் கண்டதும் சுகந்தா 'ஓ'வென்று கதறி அழுதுவிட்டாள். என் இதயமே வெடித்துவிடும் போலிருந்தது. அவள் முகத்தோடு முகம்வைத்து நானும் அழுதேன். "அம்மா! கமலு! இப்படிவா!" என்று பரிவுடன் என்னை அழைத்தார் முதலியார். பிறகு தனியே அழைத்துச் சென்று "கமலு! நீயும் பல ஹீனக் குழந்தை. அவளுக்கோ க்ஷயரோகம். கிட்டப் போகக்கூடாதம்மா. ஒட்டிக்கொள்ளும்" என்றார். அவர் குரல் கம்மியிருந்தது. நான் முகத்தை மூடிக்கொண்டு அழுதேன். அத்தை என்னைக் கீழே அழைத்துச் சென்றாள்.

இரண்டுவேளையும் நான் அங்கே செல்வேன். என்னைக் கண்டால் சுகந்தி சற்று நிம்மதியடைவாள், அத்தையைக் கண்டால் முகத்தைத் திருப்பிக்கொள்வாள். நான் போனதும் அறைக் கதவை தாளிடவேண்டும். பிறகு அவளுடைய கழுத்திலிருந்து சாவியைக் கொடுப்பாள். நான் அவள் பெட்டியைத் திறந்து, அவள் காதலன் படத்தையும், கடிதங்களையும் எடுத்துக் கொடுப்பேன். கடிதங்களைச் சிறிது படிப்பாள். காதலனைக் கண்கொட்டாமற் பார்த்துவிட்டுத் தன் கழுத்திலுள்ள திருமங்கல் கல்யத்தை எடுத்துக் கண்களில் ஒற்றிக்கொள்வாள். மறுபடி எல்லாவற்றையும் அவள் எண்ணப்படி பெட்டியில் வைத்துப் பூட்டுவேன். இதற்கு என்னதான் அர்த்தமோ? அவள் மனதில் தோன்றும் எண்ணங்கள்தான் என்னமோ? இதுதான் என்னைச் செய்ய வேண்டுமென்று அவள் வேண்டிக்கொண்டது.

இவ்வாறு நான்கு மாதங்கள் ஓடின. அவள் கணவனுக்குப் பல கடிதங்கள் எழுதினார் முதலியார். பதிலே கிடைக்கவில்லை. ஒருவரை நேரில் அனுப்பிக் கூப்பிட்டதற்கு "இவையெல்லாம் வேஷம், பொய். என்னை வரவழைக்கச் செய்யும் சூழ்ச்சி" என்று கூறினானாம். ஆனால் இதை யாவரும் அவளிடம் கூறவில்லை.

"கமலா! தபாற்காரன் வந்துவிட்டானா?" இதுதான் காலையில் நான் போனதும் அவள் கேட்கும் முதற் கேள்வி. "கடிதம் இல்லை" என்றதும் அவள் முகத்தில் தோன்றும் ஏக்கம் என் மனத்தைப் பிளக்கும். ஆனாலும் அவள் நம்பிக்கையை இழக்கவில்லை.

காலை எட்டு மணி. முதலியார் வீட்டிலில்லை. தபால்கள் வந்தன. அவைகளிலிருந்து ஒரு கவரை ஆவலுடன் எடுத்தாள். அது அவள் கணவன் கையெழுத்து. முதலியாருக்கு வந்திருந்தது. தந்தை வரும்வரை காத்திருக்க முடியவில்லை. பிரித்தாள் பாவம்! அதுதான் அவளுடைய மரணத்தின் அழைப்பு என்று எப்படித் தெரியும்? படித்தாள். உடனே அவள் முகம் போன போக்கை நான் என்னவென்று சொல்வேன்? "அம்மா!" என்று வீரிட்டவண்ணம் மார்பை அமுத்திப் பிடித்துக் கொண்டாள். நினைவிழந்து படுக்கையில் சாய்ந்தாள்.

"உடனே இரண்டாயிரம் ரூபாய் வேண்டும். பணம் அனுப்பினால்தான் வரமுடியும். உங்கள் பெண்ணுக்கு உடம்பு சரியில்லை என்பதை நான் நம்பவில்லை. என்னை இப்படி மேலும் மேலும் கடிதம் எழுதி வரச்சொல்லி அவசரப் படுத்துவதினால் ஏதோ காரணமிருக்கவேண்டுமென்று நினைக்கிறேன். உங்கள் பெண் நல்ல நடத்தையுள்ளவளாயிருந்தால் நீங்கள் இப்படி அவசரப்படமாட்டீர்கள். எதற்கும் பணமனுப்பினால் வரமுடியும்."

இதுதான் கடிதத்திலுள்ள விஷயம். "நான்தான் சொன்னேனே. அவன் எதற்கும் துணிந்த படுபாவி" என்று கத்தினாள் அத்தை. முதலியார் தலை நிமிரவேயில்லை. டாக்டருக்கு ஆட்கள் ஓடினர். அவளுடைய இருண்ட வாழ்க்கையில் நம்பிக்கை என்னும் சூரியனும் மறைந்துவிட்டான்.

ஃ ஃ ஃ

6

மறு நாள் காலை ஏழுமணி. சுகந்தாவுக்கு வலிப்பு வந்து இழுப்பதாக ஆள்வந்து கூறினான். நாங்கள் யாவரும் போனோம். டாக்டர் 'இனி நம்பிக்கையில்லை. தலையிலுள்ள இரத்த நரம்பு அறுந்துவிட்டது" என்று சொல்லிவிட்டார். உடனே அவள் கணவனுக்குத் தந்தி கொடுத்தனர். 200 ரூபாய் அனுப்பிவைத்தனர். நான் அங்கேயிருந்தேன்.

பகல் மூன்று மணிக்கு நினைவு வந்தது. என்னை ஜாடைகாட்டி அழைத்து ஏதோ சொல்ல முயன்றாள். பேசமுடியவில்லை. அவளிஷ்டத்தை ஒருவாறு ஊகித்துக்கொண்டு, அவள் கணவன் படத்தைத் தலையணையடியில் வைத்தேன். உடனே அந்த ஒட்டி உலர்ந்த முகத்தில் ஒரு வறண்ட சிரிப்புத் தோன்றியது, அப்பப்பா! அந்தக் காட்சி என்னால் மறக்கவே முடியாது. பிறகு வீடு சென்றேன்.

இரவு முழுவதும் ஒரே கலவரம். நான் தூங்கவேயில்லை. விடியற்காலம் ஐந்து மணியிருக்கும் என் உயிர்த்தோழி இவ்வுலகிலிருந்து மறைந்துவிட்ட செய்தி வந்தது. எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. தூரத்திலிருந்தே அத்தையின் அலறல் கேட்டது. மாடிப்படி ஏறும்பொழுது முதலியார் என் கைகளைப் பிடித்துத் தம் மார்பின்மீது வைத்துக்கொண்டு கதறினார். என் தந்தை எவ்வளவுதான் ஆறுதல் கூறியும் ஆறவில்லை. எப்படி ஆறும் விமலா? தங்கப் பதுமைபோன்ற, குணவதியான பெண்ணை இழந்த அவர் மனம் துடித்தது. அவள்தான் அவருடைய சகல சொத்துக்களும் என்றிருந்தார். அன்பின் உருவமாய் இருந்தாள் அவள். அப்பப்பா! மிக்க துக்ககரமான காட்சி.

சுகந்தாவின் முகம் நிர்மலமான சாந்தியுடன் விளங்கியது. கபடமற்ற புன்னகை தவழ்ந்தது. பரிசுத்தமான பதிவ்ரதை. பிரேமையின் உருவம், தன் பதியின் நிந்தனையைச் சகிக்கமுடியாமல் உயிரை விட்டாள். அவளுடைய பஞ்சை உள்ளம் கடைசி வரை அவனை நம்பியது. அவள் வாழ்க்கையும், கனவாகவே முடிந்தது. தூய்மையான அன்பை, தெய்விகக் காதலை அடையக் கொடுத்துவைக்காத பாவி. கல்நெஞ்சன், கடைசிக் காலத்திற்கூட வரவில்லை.

எல்லாம் முடிந்து வீடு வந்து சேர்ந்தோம். முதலியார் பங்களா, ஊருக்கு வெளியில் ஒரு வெட்ட வெளிப்பிரதேசத்தில் இருந்தது. அன்று நாங்கள் அங்கேயேயிருந்தோம். மாலைக் கதிரவன் மலைவாயில் விழுந்துகொண்டிருந்தான். முன் வராண்டாவின் 'கிராதி'யைப் பிடித்துக்கொண்டு நின்றேன். என் மனம் சூன்யமாயிருந்தது. உலகமே பாழடைந்துவிட்டதுபோல் தோன்றியது. ஒரே வெட்ட வெளி. தூரத்தில் புகைப்படலம் எழுந்தது. என் கண்கள் மங்கியது.

"எந்த நேரத்திலும், அப்பாவிதன்னையே, பற்றி மறக்குதில்லை, பஞ்சையுள்ளமே" என்னும் பாரதியாரின் வாக்கியங்களை என் மனம் கூறியது. 'சுகந்தியின் பஞ்சை உள்ளமும் அப்பாவியை மறக்கவில்லை" என்று முணுமுணுத்தேன். கண்ணீர் வழிந்தது. பேதை! சுகந்து! என்றேன்.

"அழாதேயம்மா! கமலா! உடம்பு கெட்டுவிடும். பாவம்-குழந்தை மனம் திருப்தியடையாமலே போய் விட்டதே. அதுதான் மறக்கவே முடியவில்லை. " என்றுகூறியவண்ணம் முதலியார் என்னருகில் வந்து நின்றார்.

"இதுதான் என் சுகந்தியின் கதை. அதோ பார் அவள் படம்" என்று கூற, அவள் படத்தைக் கண் கொட்டாமல் பார்த்தேன். "ஐயோ! பாவம்! தெய்வப் பெண்" என்று கூறிப் பெரு மூச்சு விட்டாள் விமலா.

★ ஞாபகச்சின்னம் ★

"ஸ்ரீரா"

1

இராமத்திற்குச் சென்றிருந்தேன் கோடை விடுமுறையில். சஞ்சலமான பட்டண வாழ்க்கையை மறக்க அதுதான் அவகாசம் என்று எனக்குத் தெரியும். கிராம வாழ்க்கையின் சாந்தியை அள்ளிப் பருகுவதற்குச் சமயம் கிடைத்தது. சாயங்கால வேளைகளில் புல் வரப்போடு நடந்து செல்வேன். பழைய நினைவுகளுடன் அப்போதைய ஞாபகங்களும் ஒன்று சேர்ந்து வர்ணிக்கமுடியாத உணர்ச்சிகளைக் கிளப்பிவிடும். அதிகமாக மனத்தை அலட்டிக் கொள்ளாமல் உணர்ச்சிகளை அநுபவிப்பேன். பொழுது போவதே தெரியாது.

2

வாய்க்கால் கரையோரம் மேடையில் உட்கார்ந்திருந்தேன், தண்ணீரில் காலை நனைத்துக் கொண்டு. சிதறியிருந்த சிறுசிறு கூழாங்கற்கள் வாழ்க்கையில் சிதறியிருக்கும் சிறு சோபன சம்பவங்களைக் குறிப்பிடுவன போன்றிருந்தன. படர்ந்திருந்த மரம், செடிகள் சந்தோஷத்தால் பூரித்துக் கிடந்தன என்று என் மனதில் பட்டது. காரணம் என்னவோ தெரியவில்லை.

"காலை தண்ணிலே அடிக்காதே, சாமீ! கொளந்தே தண்ணி குடிக்கணுமாம். இறங்குது. மேலே நனையப்போவுது." என்று சொல்லிக்கொண்டே ஒருவன் படிகளில் இறங்கினான். ஐம்பது வயதிருக்கும் அவனுக்கு. பக்கத்தில் சுமார் ஒன்பது வயதென்று மதிக்கக் கூடிய ஒரு பெண்ணையும் அழைத்துக் கொண்டு வந்திருந்தான். பிராமணக்குழந்தைபோன்றிருந்தது முகஜாடையிலிருந்து. தவிர, புது கவுன் போட்டுக்கொண்டிருந்தது. அழகாகத் தலைவாரிப் பின்னி விட்டிருந்தது இவனோ குடியானவன் என்று ஊர்ஜிதமாகப் புலப்பட்டது. எனக்கு ஒன்றும் விளங்கவில்லை, தண்ணீர் குடித்துவிட்டு இருவரும் சென்று விட்டார்கள். வரப்போரமாகச்சென்று இடது பக்கம் திரும்பினார்கள், மாமரமொன்று அவர்களது உருவங்களை மறைத்துவிட்டது. ஆழ்ந்த யோசனையில் இறங்கினேன். வீட்டுக்குத் திரும்பும்போதுகூட மண்டையை உடைத்துக்கொண்டுவிட்டேன். தீர்மானமாக ஒன்றும் தெரிந்துகொள்ள முடியவில்லை.

மறுநாள், மாலை அதே சமயம், அதே குடியானவன் அதே பெண்ணுடன் வாய்க்காலுக்கு வந்துவிட்டுப்போனான். "புதுத்தண்ணி வந்திருக்கு சாமி வாய்க்காலிலே, ஆத்துலே தண்ணி போவுது போலிருக்கு" என்று பேச்சுக்கொடுத்தான். நேற்றையைவிட இன்று அவனது குரலில் நட்பு நிரம்பியிருந்தது. உள்ளக் கிளர்ச்சியில் அவனுடன் பேசாமல் தலையை அசைத்தேன். சென்றுவிட்டான் குழந்தையைக் கூட்டிக்கொண்டு. அதே மாமரம்—இலைத்திரை.

3

எத்தனை நாளைக்கு விஷயத்தைத் தெரிந்து கொள்ளாமலிருப்பது? மறுநாள் அந்தக் குடியானவனைக் கேட்டுவிடுவது என்ற தீர்மானத்துடன் படுக்கைக்குச்சென்றேன். பொழுது விடிந்தது. சாயங்காலமும் ஆகிவிட்டது. மிகவும் ரம்மியமான மாலை. மல்லிகையின் நறுமணம் தவழ்ந்து சென்றது காற்றில். மூக்கை இழுத்து உறிஞ்சினேன். பிரம்மானந்தம். மனோவேகம் நடையையும் துரிதப்படுத்தியது. குதித்துச்சென்றேன் வாய்க்கால் கரையை நோக்கி. மேடையின் மேல் உட்கார்ந்தேன், ஒற்றையடிப்பாதையை ஆவலுடன் நோக்கிக் கொண்டே. அரைமணி, ஒருமணி ஆகிவிட்டது. இருள் படர்ந்துவிட்டது. இலைகள் அசையும் சப்தம், வாய்க்காலின் சலன ஒலி இவை என் தனிமையை எடுத்துச்சொல்வனபோலிருந்தன.

எதிர்பார்த்தபடி நிகழவில்லை. மனச் சஞ்சலத்துடன் வீடு திரும்பினேன். பெண்ணின் தெள்ளிய முகம் மன ஆகாயத்தில் பறந்து, விளையாடி, ஜால வித்தைகள் காட்டிக்கொண்டிருந்தது. அவளது கன்னங்களில் குழி விழுந்தது மனதில் நன்றாகப் பதிந்துவிட்டது, மறக்க முடியாது. "அழகின் பிம்பம், சித்திரப் பதுமை" என்று ஏதேதோ உளறிக்கொண்டிருந்தது மனம். படுக்கையில் படுத்துப் புரண்டேன். தூக்கம் வந்தபாடில்லை. தீர்மானமாகத் தூங்கிவிடுவது என்று நினைத்தேன். தூக்கம் வந்தால்தானே?

மறுநாள் சாயங்காலம் வாய்க்கால் மேடையில் உட்கார்ந்திருந்தேன். ஒற்றையடிப் பாதையை விட்டுக் கண்கள் செல்ல மறுத்தன. ஒருவரையும் காணோம். நீரோட்டம் சஞ்சல கீதம் பாடிக்கொண்டிருந்தது. இலைகளின்

அசைவு வருத்தம் நிறைந்திருந்தது. சந்திரோதயம்கூட ஆகிவிட்டது. மனத்திற்கு ஒன்றும் பிடிக்கவில்லை. மறுபடி தினசரி வாழ்க்கை. வீட்டுச் சுவர்களுக்கு நடுவில்—சலனத்திற்கு நடுவில்—புயலின் நடுவில், அடைபட்டுவிட்டேன்.

4

ஒரு மாதம் கழிந்தது இப்படியே. மனதை அனுவசியமாய் அலட்டிக்கொள்ளக் கூடாது என்று எனக்குள் சொல்லிக்கொண்டேனே தவிர, அந்தப் பெண்ணும் கிழவனும் மனத்திரையை விட்டுப் போக மறுத்து விட்டார்கள். நம்பிக்கைத் தென்றல் என்னை அழைத்துச் சென்றது வாய்க்கால் மேடைக்கு ஒருநாள். இன்று எனக்கு முன்னமேயே வந்து யாரோ உட்கார்ந்திருப்பது தூரத்திலிருந்தே தெரிந்தது. ஆம்-அந்தக் கிழவன்தான். கிட்ட நெருங்கினேன். அவனது முகத்தில் முன்பு இருந்த குறுகுறுப்பு, உத்ஸாகம் இல்லை. புயலிலடிபட்டு நொறுங்கிய படகுபோலச் சோர்ந்து வாடி உட்கார்ந்திருந்தான். விலையுயர்ந்த பொருளைப் பறிகொடுத்தவனது முக உணர்ச்சிகளைப்போலிருந்தன அவனது முகவிகாரங்கள். பேச ஆரம்பித்தேன். "ஏன் இத்தனை நாள் வரவில்லை? குழந்தையையும் காணுமே?" என்று பரிவாகக் கேட்டேன். "ஆமாங்க" என்று முணமுணத்தான்.

"ஆமாம் என்ருல்—எனக்கொன்றும் தெரியவில்லையே? என்றேன். என் மன நிலைமையைத் தெரிந்துகொண்டுவிட்டான் நொடிப் பொழுதில். "எல்லாத்தியும் சொல்லுறேனுங்க. இல்லாட்டி கட்டை வேவாது, செத்துப்போனு" என்ருன் விரக்தி நிறைந்த குரலில். கண்ணிமைகளில் நீர் அரும்பிற்று. ஆவலுடன் அவனைக் கவனித்துக்கொண்டே இருந்தேன்.

"என் கதையே பெரிசுங்க. முதல்லே சர்க்கஸ் கம்பெனிலே இருந்தேனுங்க, சிறு புள்ளேலிருந்தே, ஒரு வருஷத்துக்கு முன்னுடிதான் உடம்பு சுகப்படலேன்னு கம்பெனியைவிட்டு வந்துட்டேன். வயசாச்சு, வேலைசெய்ய முடியலீங்க. எசமான் 'போவாண்டாம் இரு' என்னுரு. வேலை செய்யாமே சோத்தைத் திம்பானேன்னு விட்டுட்டு வந்துட்டேன். இதுதான் எங்க தோப்பன் பாட்டன் இருந்த ஊரு. ஊருக்குள்ளே நொளைஞ்சு குடியிருக்க வீடு தேடினேன். ஒண்ணும் சிக்கல்லே. அக்ரகாரத்துலே மொத வீட்டு—அதுதான்—மாடி வீட்டு அம்மா, பொளக்கடலே குடிசை போட்டுக்கிட்டு இருன்னுங்க. அங்கேதானுங்க நான் இருக்கிறது. சர்க்கஸ் மானேசரு மாசம் பத்து ரூபா அனுப்புவாரு. அவருக்கு நான் கஷ்டப்பட்றது மனசு கேக்கல்லே. கொளந்தெ நான் குடியிருக்கற வூட்டுப்பொண்ணு. நான் எங்கே போனுலும் என்னேடேவந்துடும். கிளிபடம் எளுதி வச்சாப்பலே இருந்துச்சு........." என்றுகொண்டே கண்களைப் பொத்திக்கொண்டு அழத்தொடங்கிவிட்டான். இருள் உலகத்திலிருந்து என்னை வெளிச்ச உலகத்துக்குக் கொண்டுவந்துவிட்ட சம்பாஷணை, என்னை வருத்தக் கடலில் முழுகடித்துவிட்டது. எதற்காக இப்படி அழுகிருன் என்று யோசித்துப்பார்த்தேன். ஆம்—விஷயம் விளங்கிவிட்டது. உலகத்திரையில் ஒரு மூலையில் நின்று ஊசலாடிக்கொண்டிருந்த உயிர் பறந்து புனித லோகங்களுக்குச் சென்றுவிட்டது. பதுமை உடைந்துவிட்டது. மலர்முகம் மாறிக் கட்டையாகிவிட்டது. அக்னி ஜ்வாலைகள் விழுங்கி விட்டன கட்டையை. என் மனச்சுடர் மங்கி அணைந்துவிட்டது.

சீக்கிரம் "ஜ்வரமாகப் படுத்துக்கொண்டிருந்ததா?" என்று கேட்டேன்.

"அன்னைக்குப் போய்ப் படுத்ததுதான். எந்திரிக்கவே இல்லே. பெரிய டாக்டரையா வந்துபாத்தாரு. ஒண்ணும் முடியல்லே" என்று விக்கினுன். என் உள்ளத்தில் சந்தோஷக் கொந்தளிப்பை, ஆவற்கொந்தளிப்பைக் கிளப்பிவிட்ட சோபனமதி, அடிவானத்திரைக்குப்பின் மறைந்துவிட்டது. மனது எதை, மிக அவசியம்—இல்லாமல் முடியாது என்று நாடிச் சென்றதோ, அது ஏமாற்றிவிட்டு ஓடிவிட்டது.

கிழவன் கண்களைத் துடைத்துக்கொண்டு வாய்க்காலை நோக்கிக்கொண்டிருந்தான். "இருட்டி விட்டது. வீட்டுக்குப் போகலாம்'. என்றேன். ஒன்றும் பேசாமல் எழுந்து நடந்தான் என்னுடன். "உலக ஆசாபாசங்கள்—தெய்வீக மோஹம்— பரந்த அன்பு, எல்லாம் நாடகம்" என்று எனக்குள்ளே சொல்லிக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்தேன். கிழவன் சென்றுவிட்டான்.

5

இரவு முழுதும் படுக்கையில் புரண்டுகொண்டே இருந்தேன். அழ வேண்டும்போலிருந்தது. மௌனமாக விம்மினேன் கொஞ்சநேரம்.

மறுநாள் கிழவனது குடிசைக்குச் சென்றேன். "வாங்க சாமி" என்ருன் அன்பு நிறைந்த குரலில். கிளி, அணில், காடை, சிட்டுக்குருவி-"இவையெல்லாம் என்ன? என்று"கேட்டேன். "படுபாவிப் பயலுங்க கவான்கல்லு அடிச்சு இதெல்லாம் இப்படி ஆச்சு.' பாவம் அந்தக்கிளி— கூண்டுலே இருக்கே—அதுக்கு காலிலே ரத்தம் கசிஞ்சுவருது. மை போட்டிருக்கேன். அணிலுக்கு உடம்பெல்லாம் ஊமைக்காயம்- உசிரைக்கொன்னு திங்கணும்?" என்று விளக்கினுன். அவனது உள்ளத்திலிருந்தே கருணை மடல் மலர்ந்து விரிவது போன்றிருந்தது. ஜாதி சமய பேதங்களைத் தாண்டின எண்ணம்—மனிதனுக்கு மனிதன்—அன்பு. "வாழ்க்கையை நீ வீணுக்கி விடவில்லை, எங்களைப்போல்; எனக்கு உன் மேல் பொருமைதான்" என்றேன். பெருமையாகச் சிரித்துக்கொண்டான். அன்றுமுதல் தினமும் பகல் வேளைகளில் அவன் வீட்டுக்குச் சென்று வந்தேன். பிராணி சிகிச்சையில் நானும் பழகி

விட்டேன் இப்போது. அற்புதக் குடிசை—குடிசையிலிருக்கும் உடல்—உடலின் உள்ளம்—உள்ளத்தின் சாந்தி, அன்பு—விவரிக்க முடியாது.

6

ஒருநாள் சாயங்காலம் நாங்களிருவரும் தெருவோடு சென்றுகொண்டிருந்தோம். குரங்காட்டி ஒருவன் குரங்கொன்றை வைத்துக் கொண்டு வித்தை காட்டிக்கொண்டிருந்தான். அவனைச் சுற்றி வேடிக்கைக் கும்பல். கிழவன் வேகமாகக் கூட்டத்திற்குள் நுழைந்தான். "வாயில்லாச் சீவன், அதை ஏண்டா குத்தறே. வவுத்துப் பொளப்புக்காக அதை இம்சைபண்ணுறயே? விட்டுடு. ஒரு பணம் தாரேன்." என்றான் குரங்காட்டியைப் பார்த்து. அவன் இதைக் கவனிக்காமல் குரங்கைக் குத்திக் கொண்டிருந்தான். "ரெண்டு பணம் தாரேன் விட்டுடு" என்றான் கிழவன். அவன் கவனித்த பாடில்லை. "விடாட்டி ஒன் முளியைப் புடுங்கிடுவேன்" என்று இரைய ஆரம்பித்தான் கிழவன் உணர்ச்சி வேகத்தில். குரங்காட்டியின் கையிலிருந்து குரங்கைப் பிடுங்கி, கூட்டத்திற்கு வெளியில் கொண்டுவந்து விட்டான் கிழவன். இரண்டு பணத்தை அவனிடம் வீசி விட்டு, இருவரும் வேகமாக நடந்தோம். தோப்புக்குள் நுழைந்தவுடன் குரங்கை அவிழ்த்து விட்டுவிட்டான்.

7

மறுநாள். அஸ்தமன ஸமயம். கூரை இடுக்குக்களின் வழியே மங்கிய வெளிச்சம் குடிசைக்குள் விழுந்தது. கிழவன் படுக்கையில் படுத்திருந்தான். உடம்பு சரியில்லையென்று தெரிந்தது. "டப்பாவுலே மை இருக்கு, எடுங்க, இந்த அணிப்பிள்ளை ரொம்ப கஷ்டப்படுது. அடி தாங்கல்லேபோலிருக்கு" என்றவாறே மார்பின்மேல் படுக்கவைத்திருந்த அணிலைத் தடவிக்கொடுத்தான். மையை எடுத்துக் கொடுத்தேன்; அணிலுக்குப் போட்டான்.

"என்னமோ போலே இருக்குங்க" என்றான். "டாக்டரைக் கூப்பிடுகிறேன்" என்று கொண்டே எழுந்தேன். "அதெல்லாம் வாணாமுங்க, வாணாம். கட்டைகிளடு தட்டிப்போச்சு. இனிமே டாக்டர் என்னா வேண்டிக்கிடக்கு" என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டான். அறையைச்சுற்றிக் கண்ணை ஓடவிட்டேன். "கூண்டிலிருந்த கிளி எங்கே" என்று கேட்டேன். "சித்தெ நேரத்துக்கு முன்னாலேதான் தொறந்துவிட்டேன். புண்ணு ஆறிப்போச்சு. பறந்துபோச்சு" என்றான்.

ஜ்வரம் அதிகமாகிக்கொண்டு வந்தது கிழவனுக்கு என்று அவன் முகம் அறிவித்தது. மார்பின்மேல் கைவைத்தேன். கனல் அடித்தது. அணிற்பிள்ளை புரண்டு கொடுத்தது. ஒரு துடி துடித்தது கொஞ்ச நேரம்—அப்புறம் அசைவற்றுப்போய்விட்டது. "போயிடுத்து" என்று முணுமுணுத்துக்கொண்டே கிழவன் கண்ணை மூடினான். சிறிது நேரம்கழித்துக் கண் திறந்து, "கூண்டை எடுசாமி, அந்தக் கொளந்தைகையாலே கொடுத்த கூண்டு" என்றான். கண்ணீர்த் துளி உருண்டு சென்றது. வாடின கன்னத்தின்வழியாக "இதை நீங்க வச்சுக்குங்க. கொளந்தையையும் என்னையும் கட்டுப்படுத்துச்சு இது. அது போயிடுத்து. நான் போவப்போறேன்; ரெண்டு பேருக்கும் இது அடையாளம். பத்திரம்" என்றபடியே என் கையில் கூண்டை ஒப்படைத்தான். கண்கள் மறுபடி மூடின. அப்புறம் திறக்கவேயில்லை. வானப்பேரிடிகளெல்லாம் சேர்ந்து இடிப்பதுபோலிருந்தது. கையில் கட்டிக் கொண்டிருந்த கெடியாரத்தைக் கழற்றி எறிந்தேன். அணிலும், கிழவனும் சஞ்சலத்தைத் தாண்டிச்சென்றுவிட்டனர், என்னை விட்டு விட்டு. கிளிக்கூண்டு—அன்பின் அடையாளம்—ஞாபகச்சின்னம்.

இப்போதெல்லாம் எங்குச்சென்றாலும் கூண்டையும் எடுத்துச்செல்கிறேன். பௌர்ணிமை வரும், பெண்ணின் வதனத்தையும் கூட இட்டுக்கொண்டு. தென்றலடிக்கும்—கருணைச் சுகந்தத்துடன் கிழவனது ஹிருதயம் பறந்து வரும் என் மனத்திரைக்குமுன். காலப்புயல் கூட்டின் கம்பிகளைப் பிய்த்துவிட்டது. இருந்தும், அன்பொளியை—ஞாபகச்சின்னத்தைப் பத்திரமாக வைத்திருக்கிறேன்.

டோங்ரேயின்
பாலாமிருதம்
பிரசித்தி பெற்ற குழந்தைகளின்
டானிக்

ஆவணி அவிட்டம்

எம். எஸ். கமலா

●

'கார்ஹ்யபத்யம், அக்கினிஹோத்திரம் ஹவிர்ப்பாகம். வைச்வதேவம் முதலியவைகளைக் கைக்கொண்ட சனாதனப்பேர்வழி ஸப்தரிஷி ஐயர். 'பெங்களூரில் நரஹரிராயன் திடலுக்கருகில் பெரிய மாஞ்சோலையில் வசிக்கிறார். இவ்விருபதாம் நூற்றாண்டில் கலி தலை விரித்தாடும் காலத்தில் கிருதயுக தர்மத்தை வெகு சிரத்தையாய்க் கையாண்டு வருகிறார். புஸ்தகங்களைப் புரட்டிப் புரட்டிப் பார்த்துச் சாஸ்திரப்படி நடப்பவர்; நடக்கவேண்டுமென்று வாதிப்பவர். அவருக்கு ஐம்பது வயது ஆகிவிட்டது. இரு பெண்கள் பிள்ளையும் குட்டியுமாய்க் குடித்தனம் செய்கிறார்கள். 'கேசவன்' ஒரே பிள்ளை. பெனாரிஸ் யூனிவர்ஸிடியில் படிக்கிறான். ஸப்தரிஷியின் குடும்பநிலை பார்ப்பவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் நன்றாயிருந்தது. நோன்பு, விரதம், ஸ்மாராதனை இப்படி முந்நூற்று அறுபதுநாளும் அவர் வீட்டு வாயில் மாவிலைத் தோரணமும், செம்மணிட்ட கோலமுமாய்த் திகழும்.

எப்பொழுதுமே ஸுக ஸம்பத்துக்களுடன் சோபித்தால் கடவுளுக்கு மாத்திரம் கசக்காதா? அவர் மனைவி லலிதாம்பாள் தன் நாற்பத்தைந்தாவது வயதில் கடவுளடி சேர்ந்தாள். ஸப்தரிஷிக்குத் தம் மனைவி சென்றதைவிடத் தம் நித்திய கர்மானுஷ்டானங்களுக்குத் தடங்கல் ஏற்பட்டதற்காக வருந்தினார். துக்கம் விசாரிக்க வந்தவர்களோ "மஹாராஜி, மஞ்சளும் குங்குமமும், பேரனும், பேத்தியுமாய்த் தொங்கத் தொங்கக் கொடுத்துவெச்ச மஹாராஜி, நல்லலோகம் சேர்ந்தாள். பிள்ளைக்குத்தான் கல்யாணம் செய்துவைக்கவில்லை. மனுஷ ஜன்மம்-எல்லாம் பூர்த்தியாய் ஒருவரே அனுபவிக்க முடியுமா?" என்று சொல்லிச் சென்றனர். கிழவர் 'ஸப்தரிஷி' புராணங்களைப் பரிசோதிக்கத் தொடங்கினார். வைச்வதேவம், அக்கினிஹோத்திரம் அனுஷ்டித்துக்கொண்டிருப்பவர்கள் மனைவியில்லாது அவற்றைச் செய்யக்கூடாது. மனைவிக்குப் பதில் சுவர்ணத்தாலாவது (தங்கம்) மனைவியைப்போல் ஓர் பெண்ணுருவத்தைச் செய்வித்துத் தம்மருகில் வைத்துக்கொண்டு செய்யவேண்டும். சுவர்ண விக்ரகம் சமைத்துப்போடுமா? தலைகால் வலித்தால் கஷாயம் போட்டுக் கொடுக்குமா? தாமன்றோ அதை இராப்பகலாகப் பாதுகாக்கவேண்டும்? தாமில்லாதபோது அது வீட்டைப் பார்த்துக் கொள்ளுமா? ஆதலால் தம் இஹபரஸாதனார்த்தம் 'ஸப்தரிஷி' விவாஹ வேதிகையின்மேல் ஏறினார். இச்சுபகாரியத்தில் பெண்களைப் பங்கெடுத்துக்கொள்ளும்படி எழுதினார். பிள்ளைக்குத் தம் உற்சாகத்தையும் சாஸ்திர ஸம்மதத்தையும் தெரிவித்தார். பிள்ளை, கடிதமே எழுதாமல் தன் அஸம்மதத்தைத் தெரிவித்தான். பெண்களோவெனில் தந்தையை நன்றாய் வைது கடிதம் எழுதினார்கள். 'ஸப்தரிஷி'யின் மனது ஸப்த லோகங்களையும் சுற்றத் தலைப்பட்டது. "இவர்கள் எனக்கு ஜனித்த புராணப் பெண்களா? புத்திரிகள் வடிவத்தில் வந்த பேய்கள், அபஸ்மாரங்கள்" என்று அவர்களைத் தூற்றினார்.

ஸுசீலை ஒரு கி. மு. வின் (கிராமமுனிசிப்) மூத்த பெண். வயது இருபது. கிராமத்தில் வளர்ந்ததால் நல்ல ஆரோக்கியம் படைத்த அழகி. எப்பேர்ப்பட்ட வேலையையும் அனாயாசமாய்ச் செய்பவள். பெரிய சம்சாரி வீட்டுப் பெண். கிராமப் பாடசாலையில் நான்காம் வகுப்பு முடியப் படித்தவள். வீட்டில் அத்தை, பாட்டி, அடுத்தவீட்டுக் கிழவிகள் முதலியவர் கேட்க ராமாயணம் பாரதம் முதலிய நீதிநூல்களை வாசிப்பாள் மத்தியான நேரங்களில். அவைகளில் வரும் 'ஸதிகளைப் போல் இருக்க விரும்பினாள் ஸுசீலை. ஈசனின் சோதனையோ, ஸப்தரிஷியின் யோகமோ அவர் கண்ணில் பட்டாள் 'ஸுசீலை.'

விவாஹம் ஆன நான்காம் நாளே கிருஹிணியுடன் தம்மில்லமடைந்தார் ஸப்தரிஷி. கிழவனுக்கு வாழ்க்கைப்பட்டோமென்ற கவலையில்லை ஸுசீலைக்கு. துக்கமுமில்லை. தான் படித்த புராணங்களின் பிரகாரம் 'ஸதீ' தர்மங்களை யனுஷ்டித்து நற்பெயரெடுக்கவேண்டுமென்ற கொள்கையைத்தான் அவள் அறிந்தாள். வீட்டிற்குள் நுழையும்போதே நாற்புறமும் தாறுமாறாய்க் கிடந்த சாமான்களை அவை அவை இருக்கவேண்டிய ஸ்தானங்களில் வைத்தாள். கணவனுக்குப் பூஜை புனஸ்காரங்களுக்கு வேண்டியவற்றை அமைத்துக்கொடுத்தாள். கிழவரான கணவர் படுத்திருந்தால்

எழுப்பாமல் வரவு செலவுக் கணக்குகளைச் சரியாய் எழுதிவைப்பது, தோட்டத்திலிருந்து வந்த நெல் முதலியவைகளை எடுத்துச் சேர்ப்பது, காய்கறிகளில் விற்பனைக்குண்டானவற்றை யனுப்பி, மற்றவைகளை இயன்றமட்டில் ஏழை எளியவர்களுக்களிப்பது, இப்படி எல்லாப் பாரத்தையும் தன்மேல் ஏற்றிக்கொண்டு, ஸப்தரிஷியைச் சாஸ்திர பரிசோதனைக்கே விட்டுவிட்டாள்.

ஊரில் இருந்தவர்களெல்லாரும் ஸப்தரிஷி என்றைக்கும் நல்லதிருஷ்டம் படைத்தவன். இல்லாமலா இக்கிழவனுக்கு அழகிய பெண்டாட்டி, எல்லாவிதச் சாமார்த்தியமும் படைத்தவள் கிடைத்தாள்? என்னவோ ஜெகஜ்ஜாலியாயிருக்கிறாள். கேசவன் தலையில் கையிடாமல் இருக்கணும் என்று பரிந்து பேசினார்கள். 'ஸுசீலை' தான் வந்ததால் 'ஸப்தரிஷி'யின் மக்கள் அவரை அவமதித்துத் திரஸ்கரித்து வீட்டின்புறமே வராமல் இருப்பதற்குத் தன்னைத் தானே வெறுத்துக்கொண்டாள். அவர்களை வீட்டிற்கு வரவழைக்கும் வழியைத் தேடினாள். என்ன எழுதியும் அவர்கள் வரவில்லை. அவள் மணமாகி வந்து நான்காண்டுகள் நாற்கால் பாய்ச்சலில் பறந்தன. ஸப்தரிஷிக்கு ஸுசீலை மேல் அன்பு பெருகப் பெருகத், தாம் அவளுக்குக்கிழைத்த த்ரோகத்தை உணர்ந்தார். தமக்குப் பின் தம் மக்கள் அவளைச் சரிவரப் பார்க்கமாட்டார்கள் என்றறிந்து தம் சொத்து சுதந்திரம் எல்லாவற்றையும் அவளுக்கு எழுதிவைத்துவிட்டார். அவளுக்கு அது தெரியாது. கேசவனோ தன் படிப்பு முடிந்ததும் பெனாரிஸ்ஸிலேயே வேலைக்கமர்ந்துவிட்டான்.

ஃ ஃ ஃ

ஸப்தரிஷி வந்த வேலையானதாலோ அல்லது ஸுசீலையின் குணங்கள் வெளிப்படவேண்டியதாலோ அவர் நோய்வாய்ப்பட்டார். ஸுசீலை கேசவனுக்குக் கீழ்க்கண்டவாறு கடிதம் எழுதினாள்.

"அன்புள்ள புதல்வன் கேசவனுக்கு அநேக ஆசீர்வாதம்.

கேசவா! உன் தந்தைக்கு உடம்பு நன்னிலையிலில்லை. வெகு கஷ்டப்படுகிறார். புத்திரனாகிய நீ அவர் துன்பக் காலத்தில் அவரருகில் இருக்க வேண்டும். உன் கடமை அதுவே. நான் அவருக்கு மனைவியாய் வந்திருப்பது உனக்குக் கோபமுண்டுபண்ணி இருக்கலாம். நான் அவரை மணந்துகொள்ளாமலிருந்தால் உனக்கும் உன் தமக்கையர்களுக்கும் எத்தனை பணமும் காசும் இவ்வீட்டில் உண்டோ அத்தனையும் இப்பொழுதும் உண்டு. நான் வந்ததினால் குறைவு படாது. கேசவா! நான் உன்னை இப்படி அழைப்பதற்கு மன்னிப்பாய். நான் எப்பொழுது உங்கள் தகப்பனாருக்கு வாழ்க்கைப்பட்டேனோ அன்றே நீங்கள் என் குழந்தைகள். நீ வராமலிருந்தாலும் உன்னை வருந்தியழைத்து இச்சமயம் உன் தந்தையிடம் சேர்த்துவைக்கவேண்டியது அன்னையாகிய என் கடமையே! நீ அருகில் இருந்தால் உன் தந்தை செய்த தப்புக்காக உன் காலில் விழுந்து மன்னிப்புக் கோருவேன். அவர் செய்த தப்பைத் தயவுசெய்து மன்னித்து உடனே புறப்பட்டுவந்து, உன் சொத்து சுதந்திரங்களை அவர் நினைவோடே இருக்கும்போதே வாங்கிக்கொண்டு உன் குறையைத் தீர்த்துக்கொள். உனக்குச் சர்வ மங்களமும் உண்டாகட்டும். அநேக ஆசீர்வாதம்.

மார்க்க சீர்ஷ சுக்ல பஞ்சமி. உன் மாதா
வியாழன் ஸுசீலை

அன்று புஷ்ய நவமி. ஸப்தரிஷி கட்டிலில் சாய்ந்தவாறு இருக்கிறார். உடம்பு வெறும் எலும்புக்கூடாய் இருந்தது. அவருக்கெதிரே சுவரில் இரு பெண்களின் புகைப் படங்களும் கேசவனின் படமும் மாட்டி இருந்தன. அவர் அவைகளை மாறிமாறிப் பார்த்துக்கொண்டிருந்தார். ஸுசீலை பூஜைசெய்து கர்ப்பூரஹாரத்தி எடுத்துக்கொண்டு உள்நுழைந்தாள். அவள் நெற்றியில் துலங்கும் குங்குமம், முகத்தில் பொலியும் மஞ்சள் பாதிவிரத்தியத்தின் மஹிமையை வெளிப்படுத்தின. உள் நுழைந்ததும், ஸப்தரிஷி, அவளைப்பார்த்து, "அடியே! இதோ பார்! உனக்கு என்னவேணுமோ கேள். எல்லாம் உனக்கே கொடுத்துவிடுகிறேன். பெண்களாம் பிள்ளையாம்! ஒன்றைவிட ஒன்று; த்ரோஹிகள்; நான் உனக்கு அனியாயம் செய்துவிட்டேன்" என்று பலஹீனமான குரலில் சொன்னார்.

"அப்படிச் சொல்லாதீர்கள். குழந்தைகள் என்னத்தைக்கண்டார்கள்? நான் வந்துதானே அவர்கள் இடத்தை ஆக்ரமித்துக்கொண்டேன். ஒருதரம் வந்தால் எல்லாம் சரியாய்ப் போகும்" என்று சொல்லி அவர் நெற்றியில் பிரசாதத்தை இட்டாள். இவைகளை எல்லாம் அறைக்கு வெளியிலிருந்துஓர் வாலிபன் கேட்டுக்கொண்டிருந்தான். கிழவனுக்கு வாழ்க்கைப்பட்ட அழகி, பொறுமையின் அவதாரம். அவன் அவளை எவ்வளவு வேற்றுமையாகப் படைத்துக்கொண்டு பார்த்தானோ அதற்கு நேர்விரோதமாய், அவள் ரூபம் குணம் சொல்லழகு எல்லாவற்றிற்கும் மேலாக இருப்பதைப் பார்த்ததும் அவன் கண்களில் நீர் துளித்தன.

அறைக்குள் நுழைந்தான். தந்தையை நமஸ்கரித்தான். அவளை நமஸ்கரிக்கலாமா வேண்டாமா என்று தயங்கி நின்றான். தந்தை முகத்தை ஒருபுறமாய்த் திருப்பிக்கொண்டார். அவன் ரூபம் புகைப்படத்திலிருப்பதைப்போல் இருப்பதைப் பார்த்து, "வா! அப்பா! வா! நல்ல வேளையில் வந்தாய், இந்தா!" என்று அவன் நெற்றியிலும் பகவத் பிரசாதத்தை

இட்டாள். அவன் உடம்பு சிலிர்த்தது. "கடிதம் எப்பொழுதப்பா கிடைத்தது? உங்கப்பா உன்னைப்பார்க்க எவ்வளவு ஆவலாய் இருந்தார்? இதோ இந்தச் சுவரைப்பார். அவருக்குக் குழந்தைகளின் தாஹம் எவ்வளவு இருக்கிறதென்று? மீனாக்ஷி, காமாக்ஷி இருவருக்கும் எழுதினேன். வரக்காணோம். நீயாவது எழுதப்பா! அவர்களும் வரட்டும். பெத்தமனம் பொறுக்காது. நீங்கள் எல்லோரும் கிழவராகிய உங்களப்பாவை மன்னியுங்கள். அவர் கல்யாணம் செய்து கொள்ளக்கூடாதுதான்; செய்துகொண்டுவிட்டார்; அந்தச் செய்கை உங்களை அவருக்குத் தூரமாக்கிவிட்டது" என்று பரிதாபத்துடன் சொன்னாள். தந்தையும் மகனும் அந்தக்ஷமா ரூபியின் சொற்களைக் கேட்டுக் கண்ணீர்சோர விட்டனர்.

அவன் ஸஹோதரிகளும் ஸுசீலையின் இரக்கமான கடிதத்திற்கும், தந்தையின் அந்தியகாலம் என்பதை நினைத்தும் வந்தனர். பெண்களைக் கண்டதும் ஸப்தரிஷி "காமு! மீனா! நான் செத்துவிட்டதாக நினைப்பதாய் எழுதினீர்களே! சாகப்போகிறேன். பார்க்க வந்தீர்களா?" என்று வெடு வெடுப்பாய்ப் பேசினார்,

"அவர்கள் நினைத்தது தவறில்லை. உலக இயல்பு. நான் வந்தபின் நீங்கள் ஏன் அவர்களைப் போய் அழைத்துவரவில்லை? காமாக்ஷீ! மீனாக்ஷி! நீங்கள் கலங்காதீர்கள். அவர் வியாதியின் கொடுமையால் அப்படி அலட்டுகிறார்" என்றாள் ஸுசீலை. மெள்ள மெள்ள ஸப்தரிஷியின் ஆத்மா அவர் நம்பிய உலகில் போய்ச்சேர்ந்தது. நரஹரிராயன் திடலும் மாஞ்சோலையும் மாலை மாலையாய்க் கண்ணீர் வடிக்கும்படி கதறினாள் ஸுசீலை. நான்கு வருட வாழ்வு. வாழ்க்கையின் வழி, 'விதவை நிலை' என்ற பெரிய இரும்புக்கதவால் மூடப்பட்டது. ஈமக்கடன்களெல்லாம் முடிந்ததும் மூத்தாள் பெண்கள் இருவரையும் அருகிலழைத்துத் தன் உடைமைகளெல்லாவற்றையும் அவர்களுக்குக் கொடுத்தாள். ஒன்றிரண்டைக் கேசவன் மனைவிக்கென்று எடுத்துவைத்தாள். கேசவன் தந்தையின் உயிலைவாசித்து அதன்படி நடக்கத் தான் தயார் என்றான். கண்களில் தானாய் வடியும் நீரை அடக்கிக்கொண்டு பத்திரங்களை வாங்கிப் 'பர்-ர்' என்று கிழித்துத் தீயிட்டாள். எல்லோரும் திகைத்தனர். தான் அவர்களைவஞ்சிக்கக்கூடாது. அன்னை என்று அதிரோஹித்த இடத்தைப் புனிதமாக்கவேண்டும். விலைமதிப்பற்ற பொருள் அன்பு. அன்பையளித்து அன்பைப் பெறக் கங்கணம் கட்டிக்கொண்டாள்.

"கேசவா! நாளை நான் பிறந்தகம் செல்கிறேன். நீங்கள் ஒருவருக்கொருவர் அன்னியோன்யமாய் இருங்கள். உங்கள் தந்தை உத்தமர். சாஸ்திரத்தை நம்பியவர். உங்களைப்பார்க்க என்றாகிலும் எழுதினால் வந்து பார்க்கக்கூடுமானால் வாருங்கள். உன் தந்தையின் புராணங்களில் உனக்கெவை இஷ்டமோ அவற்றுள் ஒன்றிரண்டு ஞாபகார்த்தம் எனக்குக்கொடுத்தால் போதும்" என்று கண்களைத் தலைப்பால் ஒற்றிக்கொண்டாள்.

கேசவன் தன் சிற்றன்னையின் தியாகத்தைப் பார்த்து உள்ளம் உருகி, கண்ணீர் வடித்தபடி "அம்மா! நான் உன்னைப்பற்றி ஒன்றுமே நினைத்ததில்லை. அப்பாவைப்பற்றித்தான் பல தரப்பட்ட அபிப்பிராயம் கொண்டேன். கடவுள் என்னைச்சரியாய்த் தண்டித்தார். தாயும் தந்தையும் அற்ற எங்களுக்கு உத்தமத்தாயாக நீ கிடைத்தாய். உன்னை இழக்கமாட்டேன். நான் உத்யோகம் செய்யப்போவதில்லை. இக்குடும்பத்தைத் தந்தை எப்படி நடத்தினாரோ அப்படி நடத்தச்சொல்லிக்கொடு. என்னை அனாதையாக்கிச் செல்லாதே. உன் மேன்மையான குணத்தை அறியாமலிருந்ததற்கு மன்னிப்பாய்" என்று அவள் காலில் வீழ்ந்தான். படபடப்புடன் கேசவனைத் தூக்கி, அவன் தலையை அன்பொழுகத் தடவியபடியே "கேசவா! இதென்ன பைத்தியக்காரச்செய்கை? எப்பொழுது முக்கியமோ அப்பொழுது தவறாமல் வருவேன். கவலையுறாதே"

"இல்லை, எனக்கு எப்பொழுதும் நீ முக்கியம் தான்; இவ்விடம் விட்டுப்போகமாட்டேன் என்று சொல்."

ஸுசீலை கேசவனைவிடச் சிறியவளேயாயினும் அவள் மனது அன்னை என்ற அன்பால் நிறைந்திருந்தது. காமாக்ஷி, மீனாக்ஷி. இவர்களைவிட எவ்வளவோ சிறியவள். பிரபஞ்ச வாழ்க்கையை நன்கறியாள். சுவையற்ற வாழ்க்கையைச் சுவையுள்ளதாக மனத்திருப்தியுடன் ஏற்றாள். கடமையை நன்கறிந்து, ஸுசீலை என்னும் பெயரைப் பொருளுள்ளதாகச் செய்துகொண்டாள். தன் கணவனின் சந்தானங்கள் தன் சந்தானங்கள். மகனுக்கு வேண்டியதை மகிழ்ச்சியுடன் செய்துவந்தாள். ஸப்தரிஷிக்குப் புண்யலோகம் ஸித்திக்கும்படியும், தன் ஜன்மம் கடைத்தேறும்படியும் நோன்புகள் நோற்றாள். கேசவனுக்கு ஸுசீலையைப் பார்க்கும்போதல்லாம் மனம் துடிக்கும். இப்படிப்பட்டவளையா சத்ருஸ்தானத்தில் நான்காண்டுகள் நிறுத்தினேன். அவள் சுபகரமான முகத்தைச் சரியாய்ப் பார்க்கவில்லையே! என்னைவிடச் சிறியவள். சம்சார பாரத்தைப் பொறுமையாய் வகிப்பதுமன்றி, கடின உபவாசங்கள் செய்து விரதங்கள் செய்துகொண்டு எவ்வளவு தியாகியாய் இருக்கிறாள். நான் அப்புனிதவதியை நீசமாய் நினைத்ததற்காக நானும் மண வாழ்க்கையில் நுழையாமல் என்வாழ்க்கையை நடத்துவேன் என்ற நிச்சயத்திற்கு வந்[illegible] நினைவும் பிரதிஞ்ஞையும் [illegible] என்றென்றைக்கும் நிலைக்குமோ? நிலை...தால் பிரதிஞ்ஞைதான். இல்லாவிடில்.......

ஃ ஃ ஃ

28562

நாட்கள் ஓடி வருஷங்கள் நடந்து காலம் நகர்ந்தது. கேசவன் நல்ல உழைப்பாளியாகி நல்ல பெயரெடுத்தான். சஹாய குணமுடையவன். ஊர்த்தலைவன், தந்தை மிகமிக விரும்பிய ஸநாதன பாடசாலையை ஸ்தாபித்து ஏழை வடுக்களுக்கு (பிரம்மசாரிகள்) உடையும் உணவும் அளித்துவந்தான். கேசவன் நன்னடத்தை உலகைப் பிரகாசப்படுத்தியது. ஆனால் அவன் மண வாழ்க்கையை விரும்பவில்லை. ஸுசீலே இதிஹாஸ புராணங்களைப்பிரமாணமாகக் காண்பித்தாள். அதில் மாத்திரம் அவன் விமுகனாய் இருந்தான்.

அழகுள்ள வாலிபன். பணம்காசு ஏராளம். பிய்த்தல் பிடுங்கல் இல்லை. எத்தனையோ தந்தைகள் தம் பெண்களைக் கொடுப்பதாய் வந்தனர். அடுத்த வீட்டு அப்பய்யர் தம் பேத்தியைக்கொடுத்து அளவற்ற சொத்தின் அதிகாரியாக்கித் தாம் மேற்பார்வை பார்க்கலாம் என்று மனக்கோட்டை கட்டினார். அவர் கோட்டை ஆகாயக்கோட்டையாகிவிட்டது. தீட்டினர் கத்தி ஸுசீலேயின் கழுத்திற்கு. விவேகிகள் நம்பவில்லை. அவிவேகிகள்.........?மெள்ள ஸுசீலேயின் காதிற்கும் எட்டிற்று. கேசவன் அன்றுவெளியில்சென்று சோர்ந்துவீட்டிற்குள் நுழைந்தான். ஆனந்தத்துடன் சிரித்தவாறே தன்னை அன்பொழுக வரவேற்கும் அன்னையைக்காணாமல் "அம்மா!" என்றழைத்துக் கொண்டு உள்நுழைந்தான். ஸுசீலை, ஹனுமார், (ராமபக்தன்) படத்தை வைத்துக் கொண்டு வெகு பக்தியுடன் பூஜை செய்து கொண்டிருந்தாள். அப்பக்தரின் வாலில் பாதி வரை சந்தனப்பொட்டுக்கள் வைக்கப்பட்டிருந்தன. அதைப்பார்த்து இடி இடி என்று சிரித்தான். சிற்றன்னை பூஜை முடியும்வரை அதனில் லயித்திருந்தாள். பூஜை முடிந்து கண்கள் திறந்ததும் "அம்மா! இதென்ன பைத்தியக்காரப் பூஜை? எந்தப் பெரிய காரியத்தை ஸாதிக்க அஞ்சனை புத்திரனை வேண்டுகிறாய்?" என்று ஹேளனச்சிரிப்புடன் கேட்டான்.

"ஆம் பைத்தியக்காரப் பூஜைதான். இதைக் கூடிய சீக்கிரம் முடித்துக்கொடுப்பார் என்னும் நம்பிக்கை எனக்குண்டு. கேசவா! என் முகத்தைப்பார்த்துப் பதில்சொல். வீட்டிற்கு விளக்கேற்ற ஓர் பெண் வேணுமடா"

"அதுதான் வீடெல்லாம் எலக்ட்ரிக்காய் (மின்சாரவிளக்காய்) இருக்கிறதே"

"இந்த அகடவிகடம்தானே வேண்டாமென்பது; நான் கிழவியாய்விட்டேன். வந்தவர்களுக்கு ஜவாப் (பதில்) சொல்லி வாங்கி வந்ததைப் பொறுப்புடன் எடுத்து மூட ஓர் சிறுமி வேண்டும்."

"ஐயோ பாவம். கிழவி. உன் வாயில் எவ்வளவு பல் இருக்கின்றன? நடக்கத் தடிவேண்டுமா? கண்கள் தெரிகின்றனவா? வா அம்மா! கையைப்பிடித்து அழைத்துக்கொண்டுபோகிறேன்" என்று குறும்பாய்ச் சிரித்தான். அவள் ஏமாற்றத்துடன் விக்கினாற்போல் பார்ப்பதைப்பார்த்து, தன் ஹாஸ்யத்தை அடக்கிக்கொண்டு "அதற்கென்ன? நாளைக்கே ஓர் ஏழைப் பெண்ணைப்பார்த்து அழைத்து வருகிறேன். சாதம் போட்டு ஒன்றிரண்டு கொடுத்தால் வீட்டுடன் இருந்துவிடுகிறாள்."

"அப்படி எல்லாம் யாரும் வேண்டியதில்லையப்பா!"

"அப்படியானால் 'காமு' பெண்ணை அழைத்து வரட்டுமா?"

"அவள் கல்யாணத்திற்கேற்ற பருவத்துடன் இருக்கிறாள். நீ அவளை மணம் செய்துகொள்ளும் பக்ஷத்தில் அழைத்து வந்துவிடு. இந்த வைகாசியில் முடித்துவிடலாம்.

"என்னத்தை?"

"கல்யாணத்தை"

"யாருக்கு?"

"உனக்குத்தான். புரிந்ததா?"

"அதுதான் புரியவில்லையம்மா! அதைத் தவிர்த்து மீதி எதை வேண்டுமானாலும் பேசு" என்று சொல்லி ஓர் பெருமூச்சு விட்டபடி அப்புறம் சென்றான். அதையனுசரித்ததைப்போல் ஸுசீலேயின் பாரமான மூச்சு "ஹும்"என்ற த்வனியுடன் வெளிவந்தது. அதிர்ந்து நின்றான். க்ஷமாரூபிக்கும் பாரமா?

ஃ ஃ ஃ

அது வைகாசி மாதம். 'வைகாசியில் வடுவும் பழுக்கும்' என்பதைப் போல் வானில் ஓர் தங்கக் கலசம் என்றால் மாமரங்களில் அளவற்ற தங்கக் கலசங்கள். நரஹரிராயன் திடலுக்கடுத்த மாந்தோப்பில் 'கஸ்தூரி' (நடுச்சாரை) 'பாதாம்' (மல்கோவா) 'கத்தேமாரி' (கிளிமூக்கு) முதலியவைகள் ஒவ்வொரு கிளையிலும் குலுங்கிக்கொண்டிருந்தன. அத்தோப்பிலிருக்கும் ஓர் கற்றிண்ணையில் 'கேசவன்' வீற்றிருக்கிறான். வியாபாரிகள் அவரவர்களுக்கு வேண்டிய பழங்களைக் கூடையில் அடுக்கிக்கொண்டிருக்கிறார்கள். கேசவன் ஆலோசித்தப்படி வீற்றிருக்கிறான். "கேசவா! என் முகத்தைப் பார்த்துப் பதில் சொல். வீட்டிற்கு விளக்கேற்ற ஓர் பெண் வேணுமடா!" என்ற சொற்களே ஒலித்தன.

ஆகாயத்தை வெறிக்கப் பார்த்தான். மாலைக் கதிரவன் மையலை ஊட்டிக்கொண்டு, மண்ணிலிருந்து மங்கைகள் வரையில் எல்லாவற்றையும் மயக்கிக்கொண்டு தன் மந்திரமணுகி மறைந்துகொண்டிருந்தான். மன்மதன் டங்காரநாதத்தை எழுப்பி இனத்துடன்

இனத்தைச் சேர்க்கும் இன்பக் கைங்கர்யத்தில் ஈடுபட்டான். அந்தி மல்கிற்று. உலாவச் செல்லும் உல்லாஸி ஒருவன்,

"சென்றுல் இவ்வசந்தம் திரும்பி வாராது
தயங்கிடில் யௌவனம் தன்னிடம் விட்டகலும்
எதற்கோ வீணுக்குகிருய் வாழ்க்கையை
வாழ்வின் வசியம் (அவசியம்) வெகு நீண்டது."

என்று பாடிக்கொண்டு சென்றுன். "சுத்த அவிவேகப் பாட்டு. இவ்வருடம் போனுல் தானுய் வருகிற வருடம் வருகிறது வசந்தம். யௌவனம் எங்கே செல்லும்? அவனவன் யௌவனம் அவனவனிடம் இருக்கிறது. வாழ்க்கையினவசியம் நீண்டதன்று. குறுகியது. என் சிற்றன்னேயின் வாழ்க்கை நீண்டதா...?" இப்படித் தன்னுள் தானே யோசித்துக்கொண்டிருந்தவனுக்கு மறுநாள் செய்யப் போகும் ஓர் புண்யகாரியத்திற்கு ஏதோ சில சாமான்கள் வேண்டியிருந்தவை. நினைவுவரவே சுருட்டிக்கொண்டெழுந்து, 'சிக்பேட்' (பெங்களூரில் எல்லாவிதப் பொருள்களும் விற்கும் வியாபாரஸ்தலம்) சென்றுன். சாமான்களே வாங்கிக்கொண்டு வண்டி இருக்கும் இடத்தை நோக்கி வந்தான். அதற்குள் கோடை மழை கும்பவிருஷ்டியாய்ப் பெய்யத் தொடங்கிற்று. அருகிலெங்கும் தலையை மறைக்க வீடுகள் இல்லை. எங்காவது மழைக்குத் தப்பியொதுங்க இடம் அகப்படுமா? என்று இருமருங்கிலும் பார்த்துக்கொண்டே ஓட்டமும் நடையுமாய் நடந்தான். கடைகளுக்கிடையில் ஓர் சிறிய ஓட்டு வீடு. அதில் ஏறிச் சாமான்களைத் திண்ணைமேல் வைத்து ஷர்ட்டைக் கழற்றிப் பிழிந்தான். அச்சமயம் கதவைத் திறந்துகொண்டு ஓர் வயோதிகர் வெளிவந்தார்,

"யாரது? உள்ளே வாருங்கள்."

"கடைக்கு வந்தேன். எதிர்பாராமல் மழை வந்துவிட்டது. அதிக தூரம் போகவேண்டும்."

"உள்ளே வாருங்கள். மழை விட்டவுடன் போகலாம்."

"தேவலை. இந்த இடமே போதும்; மழை விட்டதும் போகிறேன்; வீட்டில் தேடுவார்கள்."

"ஆமாம், நியாந்தானே; 'சிறுசு' மிகவும் கவலைப்படுவார்கள் என்று கண்களைச் சிமிட்டிச் சிரித்தார். அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. தன்னைச் சமாளித்துக் கொண்டு, "என் அன்னையைச் சொன்னேன்."

அவர் அதைக் காதில் வாங்கிக்கொள்ளாமல் "உமா! உமா!" என்றழைத்தார். "ஏன் அப்பா!" என்று கேட்டபடியே பதினெட்டு வயது மங்கை அவ்விடம் வந்தாள். நிர்மலமான முகம், கருவண்டை நிகர்க்கும் கண்கள், தீட்டிவிட்டவைபோன்ற புருவங்கள், ரோஜா மலர் போன்று விகசித்த செவ்விய அதரங்கள், மெல்லிய இடை, வெள்ளை நிறம். "அவள் யார்? ஹிமயமலைச் சாரலில் தீவிர தவம் செய்யச் சென்ற நீலகண்டனின் தவத்தைக் கெடுத்த நீலாயதாக்ஷியோ!" என்றஞ்சினுன். தன் பிரதிக்ஞை......தளர்ந்ததுபோல் தோன்றிற்று. தவிப்புடன் அவளைப் பார்த்தான். அவள் மின்வெட்டுப் பார்வை இவன் இரும்பு நெஞ்சைத் துளைசெய்து அவ்விடம் போய் அமர்ந்தது.

"உமா! மழைவிடுமென்று தோன்றவில்லை பாவம் மழையில் நனைந்திருக்கிருர். ஏதாகிலும் இருக்கிறதா?"

"இருக்கிறதப்பா!" என்று உள்ளே சென்று ஓர் தட்டில் தோல் சீவிய மாம்பழத் துண்டுகள், ஓர் கிண்ணத்தில் நன்ருய்க் காய்ந்து புகை வந்துகொண்டிருந்த பால் — கொண்டுவந்து வைத்தாள். கிழவர் "அப்பா! ஏழைக்குகந்த ஆகாரம். எடுத்துக்கொள். இப்பொழுதே அகாலமாகிவிட்டது" என்ருர். "வேண்டாம்" என்று முரண்டினுன். மழையோ விடும் வழியில்லை. வயிருே கிள்ளுகிறது. சற்றுத் தயங்கினுன். அப்பெண் இவனைப் பார்த்த பார்வை, "ஆனுலும் புருஷர்களுக்கே முரட்டுத்தனம் அதிகம்" என்று சொல்வதைப்போலிருந்தது. அதற்குமேல் அவனுல் பொறுக்க முடியவில்லை. அவள் வைத்ததை உண்ணத் தொடங்கினுன். அவள் அன்புடனளித்த பாலும் பழமும் பசியைத் தணித்தன. ஆனுல் அவன் உள்ளத்தில் அடக்கி வைத்திருந்த காதல் என்னும் கோர மிக்க பசியை வைராக்கியம் என்னும் இரும்புப் போர்வைக்குள்ளிருந்து அவள் மோஹன ரூபம் வெளியில் இழுத்துவிட்டது. அவன் பாடு திண்டாட்டமாகிவிட்டது. 'மனிதத்தன்மை தானே!' என்று நினைத்தான். மாலையில் கேட்ட பாட்டு "சென்றுல் இவ்வசந்தம் திரும்பி வாராது". மாலை அவிவேகப் பாட்டாய்த் தோன்றியது தற்சமயம் வெகு உயர்வாய்த் தோன்றியது. "வாழ்வினவசியம் வெகு நீண்டது" என்பதை அவன் மனம் பன்முறையும் சொல்லிற்று. மழை விட்டதும் எழுந்தான். அவள் கண்களென்னும் கருவண்டுகள் இவன் ஹிருதயத்தைச் சுற்றி வட்டமிட்டு 'ஹிருதய புஷ்பம்' அவ்விடம் இருக்கிறதா? என்று ஆராயத் தொடங்கின.

ஃ ஃ ஃ

இரவு மணி பத்து அடித்துவிட்டது. அடுப்பிலிருந்த பாலும் ஆறிவிட்டது. வாயிற்புறம் வேலைக்காரச் சிறுவன் தூங்கிவிழுந்தபடி உட்கார்ந்திருக்கிறுன். 'ஸுசீலை' ஞானவாசிஷ்டத்தில் முமுக்ஷுப்ரகரணத்தை வெகு சிரத்தையாய் வாசித்துக்கொண்டிருந்தாள். மணி பதினென்று அடித்தது. தட்டிவிட்டதைப்போல் எழுந்தாள். "ஏன் இன்னும் அவன் வரவில்லை? 'அஞ்சனபுத்ரா! உன் பூஜையும் முடிந்ததே! நாளையுடன் சமாப்தியும் ஆகிறதே! என்மேல் அபவாத மூட்டையைச் சுமத்தாதே! என் பிள்ளையையும் உன்னைப்போல் சிரஞ்ஜீவிப்

பிரம்மசாரியாகச் செய்துவிடாதே!" என்று சொல்லிக்கொண்டு சிலையருகில் எரியும் விளக்கைத் தூண்டினுள். அது சுடர்விட்டெரிந்து, ஓர்பொரி கீழேவிழுந்து சிதறியது. அவள் முகத்தில் திருப்தியும் ஆஹ்லாதமும் நிரம்பின. "அம்மா!" என்றழைத்தபடியே உள்நுழைந்தான் கேசவன்.

"ஏனப்பா! இத்தனை நேரம் மழையில் அதிகம் நனைந்துவிட்டாயா? முதலில் வேஷ்டியுடுத்திக்கொண்டு பாலைச் சாப்பிடு" என்று சொல்லியபடியே அடுக்களையில் நுழைந்தாள். கையில் பாலுடன் வந்து ஹாலில் விளக்கை போட்டாள். அவன் முகம் அவனையும் அறியாத ஆனந்தத்தில் வெற்றிகொண்டு துள்ளிவிளையாடுவதைப் பார்த்து, "என்ன கேசவா! விசேஷம்?"

"நீ சற்றுமுன் என்ன சொல்லிக்கொண்டிருந்தாய்?"

"நான் என்ன புதிதாய்ச் சொல்லப்போகிறேன் தினமும் சொல்வதைத்தான். இனி என்னுல் இப்பிரம்மசாரிக்குச் செய்யமுடியாது. நான்என் பிறந்தகத்திற்குச்செல்கிறேனப்பா!"

"அம்மா! அப்படிக் கோபித்துக்கொண்டால் நான் எங்கே போவேன்? காசிக்குத்தான் போகவேண்டும்" என்று குறும்பாய்ச் சொன்னுன்.

"இவ்வருடம் நீ கல்யாணம் செய்துகொண்டால் இங்கிருப்பேன். இல்லையேல் இந்த ஆனி மாசக் கடைசியில் நான் புறப்பட்டுவிடுவேன்."

"அப்படியானுல் எங்கேசென்ருலும் 'ஆவணியவிட்டத்திற்கு வந்துவிடுவாயல்லவா?"

"ஹும். ஆவணியவிட்டம். நீ என்றும் பிரம்மாசாரியாய் இரு. நான் ஆவணியவிட்டம்......"

"அப்படியானுல் நான் அதற்குள் கிருகஸ்தனுய்விட்டால்......" என்ருன். அதற்குமேல் அவனுக்கே அங்கே நிற்க வெட்கமாய்விட்டது. தன்னறைக்குச் சென்றுவிட்டான். அவன் பின்புறமே வந்து, "இந்தா, பாலைச் சாப்பிட்டுப் படுத்துக்கோ"என்று அவன் முகத்தைக்கூர்ந்து பார்த்தாள்.

"நான் பால் சாப்பிட்டாய்விட்டது".

"எங்கப்பா?"

"ஓர் அன்னபூர்ணி அம்ருதத்தையளித்தாள், அதைப்பருகினதும் என் அஞ்ஞானம்அகன்றது"

"யாரப்பா? அப்புண்ணியவதி? நாளை நம் வீட்டிற்கு அழைத்துவா!"

மறுநாள் காலை எழுந்தான். 'சிக்பெட்' சென்று அவர்களைத் தன் வீட்டிற்கு வரும்படியழைத்தான். கிழவர் பெண் முகத்தைப் பார்த்தார். பெண் கேசவன் முகத்தைப் பார்த்தாள். அப்பார்வையில் ஏன் அனுவசியமாய் எங்களை அழைக்கிறீர்கள்? என்னும் கேள்வி தோன்றிற்று. அவள் நா அசையவில்லை. தந்தை 'உமா' என்ருர். "இல்லையப்பா நீங்கள் சென்று வாருங்கள். எனக்கு வேலையிருக்கிறது. சீக்கிரம் வந்துவிடுங்கள்" என்று அவ்விடத்தை விட்டகன்ருள்.

அகாலத்தில் ஜனித்த பெண்ணுடன் அபத்னீகரான கிழவர் கால்வயிற்றுக் கஞ்சி குடிப்பதைப் பார்த்து அவர் விஷயங்களை எல்லாம் பூர்த்தியாய் அறிந்து, அவரைத் தன் வீட்டில் ஓர் காரியதரிசியாய் நியமித்துக்கொண்டான். இப்பொழுது உமாவும் அவர்கள் வீட்டிற்கே வந்துவிடவேண்டியதாயிற்று. உமா வீட்டிற்குள் நுழைந்ததும் "வா அம்மா" என்று வாய் நிறைய அழைத்து, ஹனுமார் படத்தைப்பார்த்தாள் ஸுசீலை.

'உமா' கேசவன் வீட்டிற்கு வந்து கிட்டத்தட்ட பதினைந்து நாட்கள் ஆகிவிட்டன. முதல் சந்திப்பில் எப்படிக் கண்ணீற்குமறைவாய் இருந்தாளோ அப்படியே இன்னும் இருக்கிருள். விராகியாகிய கேசவனை உமா விரஹனுக்கிவிட்டாள். அவனுக்கு இப்பொழுதெல்லாம் வேலைமேல் இச்சையில்லை. சோம்பலும் சோர்வும் அதிகமாய்விட்டன. அவன் கண்கள் வீட்டைச்சுற்றி வட்டமிடத் தொடங்கின. கை வளையல்களின் கலகலத்வனி அவனுக்கு இன்பமூட்டும்; மலரணிந்த மங்கை இப்புறம் அப்புறம் சென்ருல் அவ்வாசனை அவனை மயக்கும். ஆனுல் அவள் இதையறிந்தாளா? எப்பொழுதும் சிருங்கார புத்தகங்களைக் கையிற் பிடித்தபடி எதையோ யோசனை செய்தபடி அமர்ந்திருப்பான்.

அன்று 'ஆனி' மாசப்பிறப்பு, ஸுசீலை கெம்பா மதிக்கரைக்கு ஸ்னனம்செய்ய விடியற்காலையிலேயே சென்றுவிட்டாள். உமா காலைச் சிற்றுண்டியும் காபியும் தயார்செய்து வைத்திருந்தாள். அவன் காலை ஆறு மணிக்கே வெளியில் செல்லும் வழக்கம். அவனை யார் அழைப்பது? கையைப் பிசைந்தவாறே தெருவிற்கும் உள்ளிற்கும் நடந்தாள். உள் இருந்தபடி இவள் பரபரப்பையும் அலைச்சலையும் பார்த்து, தன்னுள் சிரித்துக்கொண்டான். ஒன்றும் அறியாதவன்போல் புஸ்தகமும் கையுமாய் ஏட்டைத் திருப்பியபடி அவளைக் கவனித்துக்கொண்டு இருந்தான். வேலைக்காரன் கையில் அழுக்குத்துணியுடன் வீட்டைச் சுத்தம் செய்ய வந்துவிட்டான். அவன் உயிர் திரும்பி வந்தது. "பையா! அவரைக் காபி குடிக்க வரச்சொல்" என்பதைக் கேட்டுக் கண்களை மூடிக்கொண்டான். பையன் "அய்யா!" என்றதும் "போடா மடையா! காபி ஆகியிருந்தால் அம்மாளை எடுத்துவரச் சொல். எழுந்திருக்க முடியவில்லை" என்று கடு கடுத்துக் கூவினுன்.

அவள் காதில் அச்சொற்கள் கேட்டன. சுசீலை வந்து ஏன் இன்னும் காபி கொடுக்கவில்லை என்று கேட்டால்.........?

தன்னைத்தான் சமாளித்துக்கொண்டு 'காபியை எடுத்துக்கொண்டு உள் நுழைந்தாள். கதவைத் திறக்கும் சப்தம் கேட்டதும் கண்களை மூடிக்கொண்டான். அவள் பாத்திர ஓசை கேட்கும்படி மேஜை மேல் வைத்தாள். அவன் கண்களைத் திறக்கவில்லை. கட்டிலருகில் வந்து அவனை உற்றுப் பார்த்தாள். அவள் மெல்லிய மூச்சு அவன் மேல்பட்டு மயிர் சிலிர்த்தது. அவள் நாக்குழற "காபி ஆறிப்போகிறது" என்றதும் அவன் கண்களைத்திறந்தான். உங்களுக்கு ....பையன்........." என்று வார்த்தையை முடிக்கு முன்பே "உமா! நான் உன் சந்திப்பை விரும்பி, நீ இருக்குமிடம் வந்தால் சிட்டுக் குருவியாய்ப்பறக்கிறாயே? நான் என்ன மிருகமா? அன்று இரவு உன் வீட்டில் ஒரு நிமிஷம் பார்த்த உன் முகத்தை மறுபடியும் பார்க்க எத்தனை வேலைகளைவிட்டு விட்டுச் சோம்பேறியைப்போல் வீட்டிலேயே இருக்கிறேன். நீ என் கண்ணில் விழாமல் மறைந்துகொள்கிறாய். இன்று நீயே என் முன் வரவேண்டியதாயிற்று, அம்மா எங்கே?" என்றான். முகத்தில் சிரிப்பும், கண்களில் குறும்பும், சொல்லில் பரிதாபமும் ஒலிக்க. அவள் மௌனமாய் ஏதேதோ யோசனை செய்துகொண்டு தலை குனிந்து புடவைத் தலைப்பை விரல்களில் சுற்றிக்கொண்டு சேஷ்டைகள் செய்தபடி அபராதியைப்போல் நின்றிருந்தாள். "ஏன் உமா! என்னிடம் பேச மாட்டாயா?. என்று இரண்டடி முன்வந்தான். அவள் ஒரு அடி பின்வாங்கினாள்.

"உமா!உ...மா! என்னிடம் பேசமாட்டே" அவள் தலையை நிமிர்ந்து, அவனைப்பார்த்து சடேரென்று தலையைக் கவிழ்ந்துக்கொண்டாள். கண்களென்னும் கருவண்டுகள் நீர் நிறைந்த குளத்தில் சிக்குண்டு எழுந்து ஓடச் சக்தியற்றுப் பதிந்திருந்தனபோல் தோன்றின. அவன் தான் செய்வதின்னதென்றறியாமல் அவள் தோள்களைப்பற்றிக் குலுக்கி வலக் கரத்தை அவள் தோளில் இருத்தி இடக்கரத்தால் அவள் முகத்தை மேலே தூக்கி, "ஏன் அழுகிறாய்? நான் ஒன்றும் தவறாய்ச் சொல்லவில்லையே?"என்றுபதைபதைத்துக்கேட்டான். அவள் முகத்தைக் கவிழ்த்துக்கொள்ளப்போனாள். சுடச்சுட அவள் கண்ணீர் அவன் கைகளை அலம்பியது. திகைப்புடன் அவளையே பார்த்தவாறு நின்றான். அவன் முகம் அசடு வழிந்தது. அவள் மறுபடியும் அவனைப்பார்த்தாள். அவனும் பார்த்தான். தலை குனிந்தாள். "ஏன் அழுகிறாய் உமா?"

"..............."

"? ? ?"

"உ......மா!"

"ஏன்?" என்பதற்குப்பதில் தலையை மேலே தூக்கிப்பார்த்தாள். அச்சுந்தரனின் முகம்தான் முதன் முதல் பார்த்ததற்குத் தற்சமயம் வித்தியாசமடைந்திருந்ததைப் பார்த்து, மருண்டாள். யோக்கியனான பணம் படைத்த உத்தமன் தன்னை விரும்பித் தன்முன் நின்று வேண்டுகிறான். அவனை இனியும் சோதிக்கக்கூடாது.

"நீங்கள் காபி குடியுங்கள். அம்மாள் வந்தால்..........."

"வந்தால் என்ன? காபிகூட வேளைக்குக் கொடுக்கத்தெரியாத......அப்படியல்ல. காபி குடிக்கச் சண்டித்தனம் செய்யும் தன் பிள்ளையைப்பார்த்து நகைப்பாள் அப்படித்தானே!" என்று கட கட வென்று நகைத்தான். அச்சிரிப்பு அவள் ஹிருதயத்தினுள் ஒலித்தது. அவளை அறியாமல் அவளும் சிரித்தாள்.

இருவர் சிரிப்பும் ஒன்று சேர்ந்தது. அறையின் ஜன்னற் கதவின்மேல் வீற்றிருந்த ஜோடிப்பறவைகள் சேர்ந்து ஆகாய வீதியில் பறந்தன. அதையே பார்த்தான்கேசவன். காபி டம்ளரை எடுத்துப்பார்த்து "தயவுசெய்து காபி குடியுங்கள், பிறகு நீங்கள் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன்." என்று கெஞ்சியபடி சொன்னாள். அவள் கெஞ்சிய பேச்சும் காதலைக்கிளப்பும் பார்வையும் அவனுக்குச்சிரிப்பு உண்டாக்கிற்று "எங்கே இன்னொரு தரம் அப்படிச்சொல் பார்க்கலாம்" என்று அவள் கையிலிருந்த காபியைச் சேஷ்டைகள் செய்தவாறே வாங்கிக்கொண்டான். அதே சமயம்

"காதே காந்தா கஸ்தே புத்ர:
ஸம்ஸாரோய மதீவ விசித்ர:

என்ற சுலோகத்தைப் பாடிக்கொண்டு ஸுசீலை உள்ளே நுழைந்தாள். அவள் குரலைக்கேட்டதும் உமா ஓடிவிட்டாள். அவன் எங்கோ யோசித்தபடி காபி குடித்துவிட்டுப் பார்த்தான். எதிரில் அவள் இல்லை. அன்னை வந்ததையும் அறியவில்லை. "உமா!" என்று கூவிய படி வெளியில் நின்றான். ஸுசீலை சிரித்தபடி எதிரில் நின்றாள். அவன் ஏமாற்றத்துடன் அப்புறம் சென்றான். வெளியிலிருந்து வரும்போதே எங்கோ பிரயாணம் செய்ய அவசரத்துடன் வந்தான். மாலையே புறப்பட்டுச்சென்றான்.

உண்மையில் அவனுக்கு வேலை ஒன்றும் இல்லை. இந்த உமாவை மறக்கத்தான் சென்றான். ஆனால் அவனால் கூடவில்லை. பதினைந்து நாட்கள் சுற்றினான், மனம் திடம்கொள்ளவில்லை. அதற்குள் ஊருக்கு வரும்படி காரிய தரிசி கிழவனிடமிருந்து கடிதம் வந்தது. புறப்

பட்டுவந்தான். அறைக்கதவு தாளிடாமல் மூடி இருந்தது. அவ்வறையில் உமா அவன் படத்தருகில் தலையை வைத்துக் கண்ணீர் வடித்தபடி "என் துரையே! என் மனதுகல் என்று நினைத்தேன். அது கல்லன்று; காதல் இயந்திரம். நீங்கள் இங்கிருக்கும்போது உங்களைப் பார்க்கச் சங்கோசப்பட்டேன். இப்பொழுது ஒவ்வொரு க்ஷணமும் பார்க்க ஆவலுறுகிறேன். நான் அன்று செய்த குற்றத்தை மன்னியுங்கள். அறியாமையால் செய்த பெரும்பிழையே அது. என்னுடைய சங்கடக்குரல் உங்கள் செவியில் விழுமா? வருவீர்களா? என்னை ஏற்றுக்கொள்வீர்களா? ஒருவர் மனத்தை முறித்த எனக்கு என்ன பலன் கிடைக்கும்? நீங்கள் வந்தால் உங்கள் சுந்தர முகத்தை ஒரு முறைபார்த்து. நான் செய்த பெரும் பிழைக்கு மன்னிப்பைப் பெற்று உங்களுக்கு இஷ்டமிருந்தால்......... இவ்வுடலை.........இல்லையேல்......" அவள்பின்புறமே நின்று அவள் சொல்லும் ஒவ்வொரு சொல்லையும் ஹிருதயம் கரைந்துவடியும் கண்ணீரையும் பார்த்து அவளையப்படியே வாரி எடுத்தணைத்தான். அவள் வாயைத்திறந்து கூவவும் இயலாமல் அவள் வாயில் முத்திரையிட்டான். தன்னைச் சமாளித்துக்கொண்டு அவனைப்பார்த்தாள். "கிரீச்" என்று கத்தினாள். அக்குரலைகேட்டு ஸுசீலை அவ்விடம் வந்தாள்.

"ஏன் உமா?" இருவர் குரலும் ஒரே சமயம்.

"என்னை மன்னிப்பீர்களா?"

"உன்னை மன்னிப்பானேன்? நீதான் என்னைச் சுகப்படுத்தவேண்டும்" என்ற கேசவன் குரல் ஸுசீலையின் காதில் விழுந்தது.

இவ்வருடம் ஸுசீலை விரும்பிய "ஆவணி அவிட்டம்" நடந்தது.

போன்: 66 தந்தி: 'FLOWER'

கமர்ஷியல் எம்போரியம்

பட்டு, சுதேசி ஜவுளி வியாபாரம்,

பெரியகடைத்தெரு, கும்பகோணம்.

நவநாகரீகம் பொருந்திய பட்டு & நூல் புதுரகச்சேலை தாவணி ரகங்களும், எங்கள் சொந்தக் கைத்தறிகளிலேயே தயாரிக்கப்படுவதால் மிக உறுதியாகவும் நீடித்த உழைப்பிற்கு ஏற்றதாகவும் கெட்டிச் சாயத்திற்கு உத்தரவாதமுள்ளதாகவும் கிடைக்கும்.

தவிர பீஸ்குட்ஸ் ரகங்களும், வாயில், ஷர்ட்டிங், கோட்டிங், காடா பீஸ் முதலியவைகளும் சுதேசி ஜவுளி வகைகளும் கிடைக்கும்.

ஒருமுறை விஜயம் செய்து பார்க்கக் கோருகிறோம்.

South India Corporation [Madras] Limited,
Chakrapaniswami Koil South Gate,
KUMBAKONAM.

பைத்தியக்காரன்

[பாசரசு]

★

"சாமி, கொஞ்சம் விடுங்கோ சாமி, நாங்க அவசரமா போகனும் சாமி. யென் தாய், கிழவிக்கு உடம்பு சரியாயில்லை சாமி. அல்லா மேல சத்தியமா சொல்றேன் சாமி. யென் கிட்ட துட்டு இல்லே சாமி. சாமி உங்க கால் லே விளறேன், கொஞ்சம் விடுங்கோ சாமி" என்று கெஞ்சினான் ஹமீத்.

"டே, போடா வெளியே, என்ன ஓங்கப்பன் வீட்டு வண்டியா இது......? போலீஸிலே உன்னை ஒப்பிச்சுடுவேன்......போடா இந்த இடத்தை விட்டு"... என்று அதட்டினார் டிக்கெட் கலெக்டர்.

"சாமி, சாமி உங்கள வேண்டிக்கிறேன் சாமி" என்று மேலும் கெஞ்சினான் ஹமீத்.

ஹமீதுடன், அவன் மனைவி, ஆறுகுழந்தைகள் முதலியவர்கள் வந்திருந்தார்கள். நாய்க்குட்டி ஒன்றும் வந்திருந்தது. அல்லா ஹமீதுக்குப் பொருட்செல்வம் கொடுக்காவிட்டாலும் கருணை கூர்ந்து பிள்ளைப்பேறு மட்டும் கொடுத்திருந்தார். வருஷந்தவறாமல் ஹமீதுக்குக் குழந்தை பிறந்துவந்தது.

ஹமீத் டிக்கெட் கலெக்டருடன் எவ்வளவோ மன்றாடிப் பார்த்தான். கும்பலோடு கும்பலாக அவனுடைய பெரிய குடும்பத்துடன் பிளாட்பாரத்திற்குள் நுழையப் பார்த்தான். டிக்கெட் கலெக்டர் இதற்கெல்லாமா ஏமாந்தவர்? ஒவ்வொரு சமயமும் ஹமீத் உள்ளே நுழையும்பொழுது வெளியே கழுத்தைப் பிடித்துத் தள்ளப்பட்டான். வண்டி வந்துவிட்டது. ஸ்டேஷனுக்கு வெளியே இருந்த ஜனத்திரள் அவசர அவசரமாகப் பிளாட்பாரத்திற்குள் நுழைய ஆரம்பித்தது. ஹமீத் தன் குடும்பத்தை மெள்ள, ஒவ்வொருவராகக் கும்பலோடு கும்பலாய் அனுப்பிவிட்டான். கடைசியாக வண்டி புறப்பட இருக்கும் சமயம் பார்த்து அவனும் வேகமாகக் கும்பலோடு உள்ளே நுழைந்தான். டிக்கெட் கலெக்டர் கை அவன் கழுத்தின்மேல் விழுந்தது. ஹமீத் வெளியே தள்ளப்பட்டான்.

ஹமீத் இப்போராட்டத்தை நிறுத்தியிருப்பான். ஆனால் அவன் மனம் குழப்பமடைந்திருந்தது. வாணியம்பாடியில் அவன் தாய் கைருன் பீபி இறக்கும் தறுவாயில் இருந்தாள். அவள் இறப்பதற்குமுன் அவளைப் பார்க்க வேண்டுமென்னும் ஒரே அவா அவனைத் துன்பத்திற்குள்ளாக்கியது. டிக்கெட் வாங்க அவனிடம் பணமில்லை. வண்டி கூவிக்கொண்டே ஸ்டேஷனைவிட்டு நகரத்தொடங்கியது. ஹமீத் தன் முழு பலங்கொண்டு டிக்கெட் கலெக்டரைத் தள்ளிவிட்டு ஓடித் தன் குடும்பம் ஏறியிருந்த வண்டியில் ஏறிக்கொண்டான். கார்டு சிவப்புக் கொடியைக் காண்பித்தார். வண்டி நின்றது. ஹமீதின் மனம் படபடவென்று அடித்துக்கொண்டது. ரெயில்வே போலீஸார் ஹமீதின் குடும்பத்தை வண்டியிலிருந்து வெளியேற்றி ஸ்டேஷன் மாஸ்டர் அறைக்கு அழைத்துச் சென்றார்கள். ரெயில்வே போலீஸ் ஜவான் ஒருவன் தன் இடுப்பில் அணிந்திருந்த தோல் பெல்ட்டை அவிழ்த்து, அதைக்கொண்டு ஹமீதை அடிக்க ஆரம்பித்தான். ஹமீதின் மனம் அடி வாங்குவதில்கூட செல்லவில்லை. தன் தாயைப் பார்க்கமுடியாதபடி வண்டி தவறிவிட்டதே என்று அவன் மனம் ஏங்கியது. போலீஸ் ஜவான் சளைக்காமல் அடித்தான். ஹமீத் கண்களில் கொஞ்சங்கூட கண்ணீர் விடவில்லை. அவ்வளவு அடிகளையும் பொறுமையுடன் வாங்கிக்கொண்டான். ஹமீத் மனைவியின் கண்களில் கண்ணீர் வெள்ளம் எடுத்தோடத் தொடங்கியது. அவள் ஜவானின் கால்களைப் பிடித்துக்கொண்டு, 'ஐயோ, விட்டுடுங்கோய்யா வீட்டுடுங்கோய்யா......' என்று கெஞ்சினாள். இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த ஹமீதின் குழந்தைகள் ஏககாலத்தில் ஓவென்று அழ ஆரம்பித்தன. நாய்க்குட்டிகூட 'வள் வள்' என்று கத்தியது.

இந்தச் சத்தத்தைக் கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தார் ஸ்டேஷன் மாஸ்டர். "இதென்னடா சனியன், இவைகளையெல்லாம் இங்கே அழைத்துவைத்துக்கொண்டு. வெளியே விரட்டு அவர்களை......" என்று கத்தினார்.

"போடா வெளியே" என்று சொல்லிக் கொண்டே பெல்ட்டினுல் ஹமீதின் குடும்பத்தை,அடித்து வெளியே துரத்தினுன் ஜவான். ஹமீது மனைவி குடுப்பீபியின் முதுகிலும் ஒரு அடி விழுந்தது.

"என்னை எவ்வளவு வேணுமானுலும் அடி, ஆனு அவங்க மேலே கையை வைச்சா நான் சும்மா இருக்கமாட்டேன்" என்று ஆத்திரத்துடன் கூறினுன் ஹமீத்.

ஜவானுக்குக் கோபம் வந்துவிட்டது. தோல் பெல்ட்டினுல் ஹமீதின் மனைவியையும் குழந்தைகளையும்மேலும் அடித்து வெளியே துரத்தினுன். அவர்கள் குய்யோ முறையோ என்று கத்தினுர்கள். ஹமீத் உடல் துடித்தது. அவன் தன் இடுப்பிலிருந்த பேனுக்கத்தியை வெளியே எடுத்து ஜவான்மீது பாய்ந்து அவன் மார்பில் குத்தினுன். ஜவான் கீழே விழுந்தான். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் ஜவான் உயிர் போய்விட்டது. அல்லாவுக்கு ஹமீத் செய்கை பிடிக்கவில்லையோ என்னவோ? அதே சமயத்தில் பழிக்குப் பழியாக வாணியம்பாடியிலுள்ள ஹமீதின் தாயாரின் உயிரைக் கவர்ந்து சென்ருர்; ஹமீதைக் கொலைபாதகனுக்கினுர்.

ஹமீத் அரெஸ்டு செய்யப்பட்டான். கேஸ் விசாரணைக்கு வந்தது. ஹமீதின் மனைவி நடந்ததைச் சொன்னுள். அவள் பேச்சு ஜட்ஜு காதில் விழவில்லை. ஹமீதுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

ஹமீத் மனைவி குடுப்பீபி ஆருத்துயரமடைந்தாள். தகப்பன் இறந்த கதையைக் குழந்தைகளுக்கு அடிக்கடி சொல்லி, அவள் தன் மனதை ஒருவாறு தேற்றிக்கொண்டாள்.

ஹமீத் இறந்து இருபது வருஷங்களாயின. அவனுடைய மகன் அப்துல் டிக்கெட் கலெக்டர் உத்தியோகம் பார்த்துவந்தான். அப்துல் தன்னுடைய தாயையும் ஐந்து சகோதரிகளையும் வெகு சிரமத்துடன் போஷித்துவந்தான். இவர்கள் வயிற்றுக்கே சாப்பாடு இல்லையென்ருல் இவர்களுடைய நாய்க்கு என்ன கிடைக்கப்போகிறது? நாய் இவர்களை நம்பாமல் தெரு நாய்களுடன் சேர்ந்து தெருத் தெருவாகச் சுற்றி நோயால் வருந்தி இறந்துவிட்டது.

அப்துல் மாதம் முப்பது ரூபாய் சம்பாதித்தான். ஏழுபேருக்கு அது போதவில்லை. எங்கெங்கெல்லாமோ கடன் வாங்கி இரண்டு சகோதரிகளுக்குக் கலியாணம் செய்வித்தான். மற்றமூன்று பேருக்குக் கலியாணமாகுமென்ற நம்பிக்கையே போய்விட்டது. அப்துல்லுக்கு அப்போது தலைக்குமேல் கடன். நான்கு பக்கமும் கடன்காரர் தொல்லை பெரிதாயிற்று. இவ்வளவையும் சமாளித்துக்கொண்டு டிக்கெட் கலெக்டர் உத்தியோகத்தைச் சரிவரப்பார்த்து வந்தான்.

ஒருநாள் பிச்சைக்காரன் ஒருவன் டிக்கெட் இல்லாமல் ரெயிலேற வந்தான். அப்துல் முதலில் அவனை உள்ளே விட மறுத்தான். பிறகு தன் தந்தையின் நினைவு வந்தது. அதுவுமன்றி, பிச்சைக்காரனும் கெஞ்சினுன். அப்துல் அவனை உள்ளே போகவிட்டான். இதைப்பார்த்துக்கொண்டே தலைமை டிக்கெட் கலெக்டர் வந்துவிட்டான்.

"என்ன மிஸ்டர் அப்துல், அந்தப் பிச்சைக்காரனை ஏன் உள்ளேவிட்டாய்?" என்று அதிகாரத்தொனியில் கேட்டான்.

"இல்லை........."

"என்ன இல்லை.........ஏன் உள்ளேவிட்டாய் டிக்கட் இல்லாமல்?........"

"அவன் ரொம்ப ஏழையாம். அவனிடம் பணமில்லை டிக்கெட் வாங்குவதற்கு, அதனுல் விட்டுவிட்டேன்."

"தருமம்போலிருக்கிறது......" என்று சொல்லிவிட்டு அப்துல்லை முறைத்துப் பார்த்துகொண்டே போய்விட்டான் தலைமை டிக்கெட் கலெக்டர்.

அடுத்த வாரத்தில் ஒருநாள் அப்துல் ஸ்டேஷனுக்குச் சென்றபொழுது, அவனை வேலையிலிருந்து நீக்கிவிட்டதாக மேல் அதிகாரியிடமிருந்து ஒரு உத்தரவு வந்திருந்தது. அப்துல் முதலில் அதை நம்பவில்லை. தலைமீது கையை வைத்துக்கொண்டு வீடு திரும்பினுன். வீட்டிலுள்ளவர்கள் இதைக்கேட்டு ஆருத்துயரமடைந்தனர்.

அப்துல் வேலையிலிருந்து நீக்கப்பட்ட சமாச்சாரம் ஊரெங்கும் பரவிவிட்டது. கடன்காரர்களெல்லாம் அப்துல் வீட்டைச் சூழ்ந்துகொண்டு தங்கள் கடன்களைத் தீர்க்கும்படி நெருக்கினுர்கள். வீட்டுக்குச் சொந்தக்காரன் பாக்கியாக நின்ற ஆறுமாதக் குடக்கூலியை கீழேவைக்கவேண்டும் அல்லது உடனே வீட்டைக் காலி செய்யவேண்டுமென்ருன். வேறு வழியில்லாமையால் அப்துல் அப்பொழுதே வீட்டைக் காலி செய்யவேண்டியதாயிற்று. கடன்காரர்களுக்குக் கையிலிருந்த சொற்பத் தொகையைக்கொடுத்துச்சமாதானம்சொல்லி அனுப்பினுன்.

அப்துலுக்கு வாழ்க்கையில் உற்சாகம் குறைந்துவிட்டது, அவன் எத்தனையோ இடங்களில் வேலைக்கு அலைந்தான், வேலையொன்றும் கிடைக்கவில்லை. அவன் மனம் உடைந்துவிட்டது. ஒருநாள் சொல்லிக்கொள்ளாமல் அவன் தாயையும் சகோதரிகளையும் திக்கற்ற நிலையில் விட்டுவிட்டு ஓடி மறைந்துவிட்டான். குடுப்பீபி தன் மூன்று பெண்களுடன் அப்துல் வேலைசெய்துவந்த ஸ்டேஷன் கேட்டுக்கு எதிரே உட்கார்ந்து யாசகம் செய்ய ஆரம்பித்தாள். அவர்களை இன்றும் அவ்விடத்திலே பார்க்கலாம்.

(64-ம் பக்கம் பார்க்க)

அனுபமையின் காதல்

(ஸ்ரீ சரத்சந்திர சட்டர்ஜீ)

குகப்ரியை மொழிபெயர்த்தது.

— ரு —

சந்திரநாத்பாபு

வருஷங்கள் மூன்றாயின. ஜெயிலிலிருந்து விடுதலையடைந்தும் லலிதமோகன் ஊருக்கே வரவில்லை. "ஐயோ பாவம்! வெட்கத்தினால்தான் ஊருக்கு வரவில்லை. நல்ல பையன். ஸகவாசத்தினால் கெட்டுப்போனான். இருந்தாலும் ஒன்றுமில்லாததற்கு இந்தச் சந்திரபாபு இவ்வளவு நடவடிக்கைகள் எடுத்திருக்கவேண்டாம்." என்றார்கள் ஊரார்கள். "நன்றாயிருக்கிறது! இந்தக்கிராமத்திலே அவன் எப்படித் தலை நீட்டுவான்?" என்றார் வேறு சிலர்.

எங்கெல்லாமோ சுற்றியலைந்துவிட்டு ஒரு வருஷத்துக்குள் வீடுவந்து சேர்ந்தான் லலிதமோகன். தாயார் ஆனந்த மிகுதியால் அவன் நெற்றியை முத்தமிட்டு ஆசீர்வதித்தாள். பிறகு, "அப்பா! குழந்தாய்! இனிமேல் நீ விவாகம் செய்துகொண்டு குடியும் குடித்தனமுமாய் இரு. ஏதோ முன் ஜன்மத்தில் செய்த பாபம் இந்தமாதிரி அகாரணமாய் ஜெயில் வாசம் வந்து வாய்த்தது, அதைப் பற்றிக் கவலைப்படுவதில் காரியமில்லை" என்றாள். லலிதமோகன் தாயாருடைய வார்த்தைகளை முகமலர்ச்சியோடு ஏற்றுக்கொண்டான். ஆனால் மனத்துள் ஏதோ ஒரு விதமான உறுதி செய்துகொண்டான்.

முதலில் இந்த நான்கு வருஷத்தில் நடந்த ஊர் அக்கப்போர்களை (நிகழ்ச்சிகளை) யெல்லாம் விவரமாய் விசாரித்தான். இந்த நான்கு வருஷத்திற்குள் ஊரே மாறிவிட்டது. அதிலும் முக்யமாய் ஜகத்பந்து பாபுவின் வீடு அடியோடு மாறியிருந்தது. அனுபமையின் தாய்தந்தையர்களில்லை. சந்திரபாபுதான் எஜமானன். அனுபமை விதவையாகி அந்த வீட்டிலேயே தானிருந்தாள்.

தாயார் அனுபமையின் கலியாணத்திலிருந்தே ஒடுங்கி வைதவ்ய துக்கத்தினால் உயிரையே விட்டுவிட்டாள். ஆனால் தகப்பனாருக்குப்பின் ஏதோ ஆஸ்தி கிடைக்குமல்லவா? அதை எடுத்துக்கொண்டு எங்கேயாவது ஒரு நல்ல புண்யஸ்தலத்திற்குச் சென்று, சுலபமாய்க் காலந்தள்ளிவிடலாமென்று மனக்கோட்டை கட்டியிருந்தாள் அனுபமை.

ஆனால் அவர் இறந்தபிறகு உயிலைப்படிக்கும் பொழுதுதான் இவள் திடுக்கிட்டாள். ஒரே ஒரு ஐந்நூறு ரூபாய்தான் இவள் பெயருக்கு. திடுக்கிடாமலென்ன செய்வாள்? அவருக்கோ ஏராளமான சொத்து. அப்படியிருந்தும் பிச்சைக்காசு ஐந்நூறு ரூபாயா ஒரு உயிலில் எழுதவேண்டும்? ஐந்நூறு ரூபாயை வைத்துக்கொண்டு நல்ல நிலையில் வளர்ந்த ஒரு பெண் எப்படிக் காலங்கழிப்பாள்? ஆனால் கிராமத்திலே மற்றொரு வதந்தியும் உலவிற்று. "இந்த உயில் அசல் உயில் அல்ல. ஏதோ விஷமம் நடந்திருக்கிறது" என்றார்கள் சிலர். ஆனால் இந்தப்பேதைப்பெண் என்ன செய்வாள்? வேறு விதியில்லாமல் சந்திரபாபுவிடமே இருந்தாள். நாட்கள் செல்லச் செல்லச் சந்திரபாபுவின் நிஜஸ்வரூபம் தெரியத் தொடங்கிற்று. அவன் நீசத்தனத்திற்கும் கடுமைக்கும் ஒரு எல்லையாகத் தோன்றினான். மனதில் எள்ளளவாவது தயையில்லை. இந்த நிராதரவான சின்னஞ்சிறு தங்கையை அவன் படுத்திவைத்த பாடு செப்பத்தரமல்ல. நின்றால் குற்றம்; எழுந்தால் அபராதம். எதற்கெடுத்தாலும் தூக்கி எறிகிறது. மதனியாரோ முதலில் கொஞ்சம் அன்பும் அனுதாபமும் உள்ளவளாய்த்தானிருந்தாள். அண்ணன் போதனையினால் அவளும் கொடுமைதரும் விஷமானாள்.

ஐந்து வருஷங்களுக்குமுன் அவள் இட்டது சட்டம். வாய் வார்த்தை வெளிவருமுன் பத்து வேலைக்காரர்கள் கைகட்டிக் காத்து நிற்பார்கள். அதே வீட்டில் இவள், அண்ணன் குழந்தைகளுக்கும் மதனிக்கும் கைகட்டிக் காத்துநிற்கிறாள், எங்கேயாவது போவோமென்றால், பணமேது? அரிசி என்று அள்ளுவாருமில்லை, உமி என்று ஊதுவாருமில்லை.

சந்திரபாபுவுக்கு மூன்று குழந்தைகள். வீட்டிலே விதவை அத்தை இருக்கும்பொழுது குழந்தைகளுக்கென்ன குறைவு? உடை உடுத்த, குளிப்பாட்ட, தூங்கவைக்க, எல்

லாம் அத்தையின் பொறுப்புத்தான்; இதற்கிடையில் அவ்வப்பொழுது மதனியின் சொல்லம்புகள்; சமையற்காரன் காய்கறிகளை நன்ருய்ச் சமைப்பதில்லை; அதன்பொருட்டுச் சந்திரபாபுவுக்கென்று தனியாகக் காய்கறிகளை இவளேதான் "வதக்கி"ப் பரிமாறவேண்டும். ஒரு நாள் செய்யாவிட்டால் வீடு அமளிகுமளி (அமர்க்களம்) தான். ஏகாதசியன்று இவள் உபவாசம் இருப்பாள். ஆனல், மற்றவர்களுக்குச் சிசுருஷை செய்வதில் கடுகளவும் குறையக் கூடாது.

விதவையானதுமுதல் விடியற் காலத்திலே மூழ்கிக் குளித்துப் பூஜை பாராயணம் இவைகளைச் செய்துகொண்டிருந்தாள். இப்பொழுது அதற்கும் பொழுது கிடையாது. எதற்காவது சற்றுநேரம் அதிகமாய்விட்டால் "இன்னும் வீட்டு வேலைகள் அப்படியே கிடக்கின்றன; சோற்றைக் கண்டபாடில்லை, மூக்கைப் பிடித்துக்கொண்டு மூன்று நாழிகை உட்காராவிட்டால் தீராதோ?" என்று மதனி சீறுவாள். அவள் பதில் வார்த்தையே பேசுவதில்லை; உடனே எழுந்து ஓடவேண்டியதுதான். ஏகாதசி உபவாஸமானலும் சரி, தாகத்தினல் நாவறண்டு சுருண்டு வீழ்ந்தாலும் சரி, மதனியின் காரியங்கள் நிற்கா. கடுமையும் கஷ்டங்களும் அதிகரிக்க அதிகரிக்க அவள் உடலும் மனமும் எல்லாவற்றையும் சகித்துக் கொள்ளக்கூடிய ஒரு நிலையை அடைந்தன.

சம்பளம் வாங்கும் வேலையாட்களானல் ஏதாவது அதிகமாய் வேலை வாங்கினலும் திட்டினலும் "சம்பளத்தைக் கொடுத்துவிடுங்கள் போகிறேன்" என்று கிளம்பிவிடுவார்கள். ஆனல் அனுபமையோ விலையில்லாமல் வந்த அடிமைதானே? எங்கே போவாள்? என்ற எண்ணம்தான் எல்லோர் மனதிலும் நிறைந்திருந்தது. அவளுடைய கஷ்டங்களை உள்ளபடி சொல்லவோ, உணரவோ நம்மால் முடியாது; அந்த நிலையில் இருந்து, அனுபவித்தவர்களுக்குத்தான் அவை தெரியும்.

அன்று துவாதசி; விடியற்காலையிலே எழுந்து ஸ்னனம் செய்து பூஜைசெய்ய உட்கார்ந்தாள். உட்கார்ந்து ஐந்து நிமிஷங்கள்தான் ஆகியிருக்கும்; வெளியிலிருந்து மதனியின் குரல் பலமாகக் கேட்க ஆரம்பித்தது; "என்ன? உங்கள் பூஜை விடியவிடிய நடக்கிறதோ? நான் சொல்லிவிட்டேன்; இந்தமாதிரி நாள் முழுவதும் பூஜை பூஜை என்று உட்கார்ந்துகொண்டிருந்தால் முடியாது."அப்பொழுது அனுபமை சிவனுக்கு அபிஷேகம் செய்துகொண்டிருந்தாள்; ஆகவே பதில் பேசவில்லை.

மறுபடி வெளியிலிருந்து மதனி உச்சஸ்வரத்தில் "இப்படி ரொம்பப் புண்யம் சேர்ப்பதற்கு இது இடமில்லை. அப்படி ஓயாமல் பூஜை பண்ணவேணுமானல் எங்கேயாவது, காட்டிற்கோ ஆசிரமத்துக்கோ போகவேண்டியதுதான். இங்கே இந்த ஜபம் சாயாது" என்ருள். அனுபமை இதற்கும் பதில் பேசவில்லை.

மதனியின் முகம் சிவந்தது. இன்னும் மேல் ஸ்தாயியில் "என்ன? கேட்கக் கேட்க வாயடைத்துப் போய்விட்டதா?" என்ருள். அனுபமை கையிலிருந்த பத்ரங்களையும் புஷ்பங்களையும் கீழே போட்டுவிட்டு, "எனக்கு உடம்பு சுகமாயில்லை. நான் ஒன்றும் செய்ய முடியாது" என்ருள்.

மதனி கண்களைக் கொட்டையாக விழித்து "ஒன்றும் முடியாதா? ஆனல் எல்லாரும் பட்டினி கிடப்பதா?" என்ருள்.

"ஏன் என்னைத்தவிர வேறு ஆளில்லையா? சமயல்காரனுக்கு என்ன வந்துவிட்டது?"

"அவனுக்கு ஜ்வரமாம். இருந்தாலும், அவர் சமயல்காரன் சமயலையா சாப்பிடுகிருர்?"

"அவர் சாப்பிடாவிட்டால், நீ செய்து போடுகிறது."

"நன்ருயிருக்கிறது. என்னையா சமைக்கச் சொல்லுகிருய், தலைவலி மண்டையைப்பிளக்கிறது. அறுபது நாழிகையும் மருந்தும் கையுமாய் நிற்கவேண்டியிருக்கிறது, அடுப்பின் கீழே கிடந்து சாகச்சொல்லுகிருயா?"

அனுபமைக்குக் கோபம் பொங்கி எழுந்தது; "ஆனல் எல்லோரும் பட்டினி கிடக்கட்டுமே?"

"ஓகோ! அப்படியா? உங்கண்ணுவிடம் சொல்லுகிறேன்; உனக்கிப்பொழுது என்ன வியாதி வந்துவிட்டது; பொழுது விடிவதற்குமுன்னலே குளித்துவிட்டுப் பூஜை பண்ணிக்கொண்டு கொழுக்கட்டைபோல் உட்கார்ந்துகொண்டு அட்டகாசம் செய்கிருயா? இரு!இரு! அவருக்குச்சமைக்க உன்னல் முடியாதா?"

"இல்லை, இல்லை, முடியாது. நான் என்ன உனக்கு அடிமைச் சீட்டு எழுதிக்கொடுத்திருக்கிறேனு? இரு! இரு! நான் இவைகளையெல்லாம் அண்ணுவிடம் சொல்லுகிறேன்."

"அடேயப்பா! சொல்லேன். இப்பொழுதே ஓடிப்போய்ச் சொல்லு. உங்க அருமையான அண்ணு தலையை வாங்கிவிடுவாரோ?" சற்றுநேரம் அனுபமை பேசவில்லை. பிறகு "அவன் இருக்கிறபடி இருந்தால் நீ இந்த ஆட்டம் ஆடுவாயா?"

"ஏன் எனக்கென்ன பிரமாதமாய்ச் செய்துவிட்டார் உங்க அண்ணு? எதோ எல்லாரையும் போலத்தானே? இதைப் பார்த்துக்கூட உனக்குச் சகிக்கவில்லையா? உனக்கு என்ன குறைவாய்ச் செய்கிருர். சோறுபோடவில்லையா துணிவாங்கிக் கொடுக்கவில்லையா, என்ன செய்யவில்லை?"

எல்லாவற்றிற்கும் எல்லையுண்டு. மதனியின் வார்த்தைகளினல் அவள் கோபம் பின்னும் அதிகரித்தது.

இந்த எரிச்சலுடன் "இவன் என்ன தன் சொந்தச் சம்பாத்தியத்திலிருந்து எனக்கு வாரி வழங்கினான்? என் தகப்பனார் சொத்திலே ஒரு கவளம் சோறுகூட எனக்குப் பஞ்சமா? எனக்கும் இந்தச் சொத்திலே உரிமையில்லையா? இவன் குடுமித்தலையோடு பிறந்தான், நான் கொண்டைத் தலையோடு பிறந்தேன். இவனுக்கு உண்டான உரிமை எனக்கு இல்லையோ? என்று உறுமினாள்.

"ஆகா! யாரில்லை என்கிறார்கள்? இந்த லக்ஷணம் தெரிந்துதான் அவரும் ஏதோ எழுதி வைத்தார்; அவர் உன்னைத் தெருவில் விட்டு விடவில்லையே?"

"அவர் தெருவிலே நிறுத்தவில்லை; நீங்கள்தான் நிறுத்த வழிதேடுகிறீர்கள்; ஊரிலே எல்லோருக்கும் என் பெயருக்குச் சரிபாதி எழுதி வைத்தாரென்று தெரியும்; அதை அண்ணா எடுத்துக்கொண்டது சரிதான்; ஆனால் உன்னுடைய இந்தப் பிடுங்கல்தான் என்னால் சகிக்கமுடியவில்லை." முதலில் இந்த வார்த்தைகளைக் கேட்டதும் அவள் முகம் வெளுத்தது. ஆனாலும்ஒருநொடிக்குள்சமாளித்துக்கொண்டு உரத்த குரலில் "ஊரிலே எல்லாருக்கும் தெரியுமா? ஆனால் இவரைத் திருடன் என்கிறாயா? சொல்லுகிறேன் அவரிடம்" என்று எழுந்தாள்.

"திவ்யமாய்ச் சொல்லு; ஆனால் அதைமட்டும் சொல்வதனால் லாபமில்லை. இந்தப் பாபத்தின் பலனை அவன் அனுபவித்தே தீரவேண்டும் என்றும் சேர்த்துச்சொல்லு".

இந்த வார்த்தைகள் சந்திரநாத் பாபுவின் காதுகளுக்கும் எட்டின. ஆனால் அவன் வாயே திறக்கவில்லை. பிறகு இரண்டொருநாள் கழித்தது. அந்த வீட்டிலே போலா என்றொரு சிறு பையன் வேலை செய்துகொண்டிருந்தான். ஒரு நாள் சந்திரபாபு அந்தப் பையனை உள்ளே அழைத்து அடிக்கத்தொடங்கினான். அந்தப் பையனுடைய கூக்குரலைக்கேட்டு வீட்டிலுள்ள வேலைக்காரர் முதல் எல்லோரும் ஓடிவந்தார்கள். அனுபமை பூஜை செய்துகொண்டிருந்தாள். திடீரென்று எழுந்த இந்தக் கூக்குரலைக் கேட்டு வெகு வேகமாய் ஓடிவந்தாள்.

அவள் திடுக்கிட்டு உள்ளே நுழைந்தபொழுது போலாவின் மூக்கிலும் வாயிலும் இரத்தம் வடிந்துகொண்டிருந்தது. அனுபமை திடுக்கிட்டவளாய் "அண்ணா! இதென்ன இப்படிச் செய்கிறாய்? ஐயோ அவன் இறந்துவிட்டால்?" என்றாள்;

சந்த்ரபாபு உரத்தகுரலில் "ஆமாம் இந்தப் பீடையைக் கொல்லத்தான் போகிறேன். கூடவே உன்னையும் கொல்லத்தான் போகிறேன், ஆனால் நீ பெண்பிள்ளையாயிற்றே என்று விடுகிறேன். என் வீட்டில் இப்படிப்பட்ட பாப காரியங்களுக்கு இடங்கொடுக்கமாட்டேன். அப்பா உனக்கு ஐந்நூறு ரூபாய் கொடுத்திருக்

உங்கள் கூந்தலைக் காப்பாற்ற மூலமந்திரம்

உங்கள் கூந்தலைக் காப்பாற்றுவது உங்கள் கையிலேதான் இருக்கிறது......மிகவும் எளிதான முறை, ஆயினும் உங்கள் கூந்தலை இயற்கையாக வளர உதவியளித்து, அதன் அழகைக் காக்கும் தன்மை வாய்ந்தது. ஒரு பாட்டில்

காமினியா ஆயில்

(ரிஜிஸ்டர்டு)

இந்த வித்தையைச் செய்யும். ஒருமுறை உபயோகித்தால் மறக்கமுடியாது. அதன் நிகரற்ற மணம் அதைத் தேடிச்செல்லத் தூண்டும்

பாட்டில் ஒன்றுக்கு .... ரூ. 1 0 0
3 பாட்டில் .... ரூ. 2 13 0

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். ஒரு அணா தபால் தலை அனுப்பினால் சாம்பிள் அனுப்பப்படும்.

ஆட்டோ டில்பகார்

(ரிஜிஸ்டர்டு)

மணங்களுக்குள் தலைசிறந்த அரசன். இதன் வசீகர மணம் நிகரற்றது. மதுசார சம்பந்தமற்றது.

ஒரு டிராம் பாட்டில் 1-க்கு அணா 14

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். 2 அணா தபால் தலை அனுப்பினால் சாம்பிள் அனுப்பப்படும்,

சோல் ஏஜண்டுகள்:

ஆங்கிலோ-இந்தியன் டிரக் & கெமிகல் கம்பெனி, பம்பாய்-2.

கிருர், அதை எடுத்துக்கொண்டு இன்றைக்கே வீட்டைவிட்டு வெளியேறு" என்று உறுமினுன்.

அவளுக்கு இன்னதென்றே விளங்கவில்லை. திகைத்துப்போய் "ஏன்? என்ன?" என்ருள்,

"வேறென்றுமில்லை. இன்றைக்கே ரூபாயை எறிந்துவிடுகிறேன். எடுத்துக்கொண்டு, போலாவையும் அழைத்துக்கொண்டு இறங்கு. வெளியிலே போய் எப்படி மனம் போகிறதோ அப்படி நடந்துகொள், நில்லாதே, இனிமேல், போ!" என்ருன்.

அனுபமைக்குத் தன் தமையனின் எண்ணம் விளங்கிவிட்டது. மூர்ச்சையாகி அங்கேயே விழுந்துவிட்டாள். வேலைக்காரர்கள் எல்லோரும் இந்த வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டே இருந்தார்கள். சிலர் வாயைப் பொத்திக்கொண்டுசிரித்தார்கள். சிலர் பார்த்தும் பாராததும் போல நழுவினுர்கள். விஷயமறிந்த சிலர் அனுபமையின் நிலைக்கு வருந்தி அவளை எடுக்க முன்வந்தார்கள். பிரக்ஞையற்று வீழ்ந்து கிடந்தபோலாவை இன்னெருஅறை அறைந்து விட்டு வெளியே போனுன் சந்திரபாபு.

— சூ —

கடைசிநாள்

இன்று அனுபமையின் கடைசிநாள். இந்த வீட்டில் இனித் தங்கவழியில்லை. நினைவு தெரிந்தநாள் முதல் ஒரு நாளாவது ஸுகப்படவில்லை. இளம் பருவத்தில் எப்பொழுது காதல் காதல் என்று தொடங்கினுளோ அதுமுதல் தன்னைத்தானே நிந்தித்துக்கொள்ளும்படி நேர்ந்ததே தவிர மனச்சாந்தி ஏற்படவில்லை.

உலகத்திலே எல்லையற்ற இன்பத்திலே ஆழ்ந்து ஆனந்தப்படவேண்டுமென்று அவள் எண்ண, அதற்கு நேர்மாருக இன்பம் என்ற சொல்லே இல்லாத ஒரு துன்பக்கேணியிலே அவள் வீழ்ந்து கிடந்தாள். எவனைக் கற்பனையிலே காதலனுக வரித்தாளோ அவன் ஏமாற்றிவிட்டு ஓடினுன். எவன் காதல் என்னும் மலரைக்காலடியிலே காணிக்கையாக வைத்தானே, அவனை உதைத்துத் துரத்திவிட்டாள்; தாயாரையும், தந்தையையும், செல்வத்தையும் இழந்தாள்.

எந்த ஒரு பெருமையினுல் தான் கற்புடையவள், ஹிந்து தர்மத்துக்குரியபடி விதவைக்குரிய நியமங்களைப் பாலிப்பவள் என்று எண்ணியிருந்தாளோ, அதை உடன் பிறந்தவனே இல்லாததும் பொல்லாததும் கட்டித் தொலைக்க வழிதேடிவிட்டான். உடன் பிறந்தவனே சொன்னுல் உலகம் நம்பாதிருக்க முடியுமா? இந்த ஒரு தௌர்ப்பாக்கியமும் பாக்கியிருந்தது போலிருக்கிறது. இந்தப் புண்ணியவானே, அல்லது அந்தப் புண்ணியவதியோ இப்படியும் ஒரு பட்டம் சூட்டிப் பார்ப்போம் என்று துணிந்தார்கள் போலிருக்கிறது. இவ்வளவு கஷ்டங்களைப் பார்த்து இரங்காததும் தவிர, இது வேறு அபவாதமா? அட தெய்வமே! என்று மனத்துள் வெறுத்தவளாய்ப் புழைக்கடைக் கதவைத் திறந்தாள்.

அன்று பூர்ணிமை; நல்ல நிலா ஊர் முழுதும் ஒரே அமைதி; ஒலியற்றிருந்த அந்த நடுநிசியிலே மெதுவாய்க் குளத்தின் கரை யருகில் சென்று படிகளில் உட்கார்ந்து கொண்டாள். இப்பொழுது அவள் யோசனையுடனே வந்திருந்தாள். நீந்தத் தெரிந்திருந்தபடியால் முன்பு சாகமுடியவில்லை. அதன்பொருட்டே இன்று பெரிய குடத்தைக் கொணர்ந்திருந்தாள். எங்கே நன்ருய் மூழ்கக் கூடிய அளவு தண்ணீர் இருக்கிறதோ அதைக்கண்டுகொண்டு அங்கே குடத்தையும் கட்டிக்கொண்டு விழுந்து விட்டால் நிச்சயம் மரணம்தான் என்று நினைத்தாள்.

இறந்து போவதற்குமுன் உலகத்தை, அதிலும் இளமையிலே ஓடியாடி விளையாடிய நந்தவனத்தைப் பார்க்கவேண்டுமென்னும் ஆவல் எழுந்தது. சோலைஅந்த நிலவொளியிலே மிகவும் அழகாய்த்தோன்றியது. சந்திரன் தனது குளிர்ந்த கிரணங்களால், வீடு வாசல், செடி கொடி, மலர் ஒன்றையும் பாக்கிவையாமல் அழகு செய்துகொண்டிருந்தான்.

ஒவ்வொரு பொருளிலும் அழகு பூரணமாய்ப் பொங்கித் ததும்பி நின்றுகொண்டிருந்தது. தாவரங்கள் காற்றிலே மெல்ல மெல்ல அசைவது தம் கிளைகளாகிய கைகளை அசைத்து இவ்வாறு கூறுவதுபோலிருந்தது. "சுகமயமானதும், ஆனந்தத்திற்கெல்லாம் உறைவிடமானதும், இத்தகைய அழகுவாய்ந்ததுமான உலகத்தை விட்டு நீ ஏன் இறக்கவேண்டும்? நீ இன்னும் சிலநாள் ஏன் பொறுக்கக்கூடாது? ஒரு நாளில்லாவிட்டால் ஒரு நாளாவது சுகம் ஏற்படலாமல்லவா? சுகமும் துக்கமும் மாறி மாறி வருமேயன்றி ஒரேயடியாய், ஆயுள் முழுவதும் துக்கத்திலேயே ஒருவரும் கழித்ததில்லை; வீணுக உயிரை இழப்பதோடு மட்டுமல்லாமல் நரகத்துக்கும் ஏன் ஆளாகிருய்?"

இதே காரணத்திலேதான் மனிதர்கள் இறக்கத்துணிந்தாலும் மறுபடி திரும்பிவிடுகிருர்கள். திரும்பிவந்த பிறகு இங்கே அணுவளவும் சுகமில்லை என்று தெரிந்துவிடுகிறது. ஆனுலும் மனம் ஓயாமல் சலித்துக்கொண்டே இருக்கிறது. தொலைந்துபோகட்டும், சாவதே மேல், இருந்து என்ன சுகத்தைக்கண்டோம் என்று மறுபடி துணிந்தாலும் உள்ளிருந்து அந்தராத்மாவின் குரல் "இறந்து விடுவதனுல் துன்பங்கள் நிவர்த்தியாகிவிடுகின்றனவா? இதை விட அங்கே ஸௌக்யம், மரணத்துக்குப்பின் ஸௌக்யமிருக்கிறது என்று தெரிந்து சொன்னவர்கள் உண்டா? சீ, சீ, பேதையே! திரும்பிப் போ. கஷ்டங்களை எதிர்த்துப் போராடுவதுதான் மனுஷ்யத்தனமே தவிர, பிராணனை ஏன் விடுகிருய்" என்று கேட்கிறது.

அனுபமையின் நிலையும் இப்படியேதானிருந்தது. இருந்தும் அவள் இப்படிப்பட்ட நிலையில் வீடு திரும்ப இச்சிக்கவில்லை. பிராணனை விடுவதைத் தவிர வேறு வழியில்லை என்று தீர்மானித்து ஒரே உறுதியுடன் இருந்தாள்.

அடுத்தபடியாகத் தகப்பனாரைப்பற்றிய நினைவுகள்; பிறகு தாயார்; இவைகளுக்கிடையே இன்னொரு மூன்றாவது மனிதனைப்பற்றிய நினைவும் தோன்றிற்று. அவன் யார்? அவன் தான் லலிதமோகன். அவளிடம் அன்புகொண்டிருந்தவர்கள் எல்லோரும் ஒருவர்பின் ஒருவராக இறந்துவிட்டார்கள். அவன் ஒருவனே மிகுந்து நின்றான்.

அவன் அவளைக்காதலித்தான். இதயத்துள் குடிகொண்டிருக்கும் தேவி என்றே அவளை மதித்தான்; அவளைப் பூஜிப்பதன் பொருட்டே, தன் அன்பென்னுமலரால் அவளை அலங்கரிக்கும்பொருட்டே அவன் வந்தான்; அவள் அவனைப் புறக்கணித்தாள். புறக்கணித்ததுமட்டுமா? சிறைவாசமும் செய்வித்தாள்: "பாவம்! ஒரு பிழையும் செய்யாத அந்த லலிதமோகன் என்னென்ன துன்பங்களை அடைந்தானோ? ஆம், அங்கேயே அனுபமையை வாயாரத்திட்டியிருப்பான்; சபித்திருப்பான்; "அந்தச் சாபத்தின் பயனாகவேதான் இப்படிப்பட்ட கஷ்டங்கள் நேர்ந்தனவோ?" என்று நினைத்தாள்.

"அவன் ஜெயிலிருந்து வந்துவிட்டான்; கெட்ட பழக்கங்களைவிட்டு ஒழித்துவிட்டுச் சமூகச் சேவையில் ஈடுபட்டிருக்கிறான். புகழும் சம்பாதித்துவிட்டான்; ஆனால், என்னைப் பற்றிய ஞாபகம் அவனுக்கு இருக்குமா? இருந்தாலும் இருக்கலாம்; மறந்திருந்தாலும் இருக்கலாம்; நம்மைச் சிறையில் சிக்கவைத்த நீலி என்று மனதில் உறுத்திக்கொண்டே இருக்கலாம்.........இதைப்பற்றி இப்பொழுதென்ன? என்னுடைய பேயரையோ இவர்கள் களங்கப்படுத்திவிட்டார்கள்; இந்த வார்த்தைகளை அவனும் கேட்கக்கூடுமல்லவா? நாளைக்குக் கிராமமுழுவதும் பேச ஆரம்பித்துவிடும். அனுபமா நெறி தவறி நடந்ததினால் குளத்திலே மூழ்கி இறந்தாள் என்று கதைசொல்லுவார்கள். நாளைக்கு என் சவம் குளத்திலேமிதந்தால், "சீ! சீ! எவ்வளவு வெறுப்புடன் தங்கள் முகத்தைத் திருப்பிக்கொள்ளுவார்கள்;" என்று சொல்லியவளாய் முன்றானையை அவிழ்த்துக் குடத்தைத் தன் கழுத்துடன் சேர்த்து அணைத்துக் கட்டிக்கொண்டாள். எழுந்து தண்ணீரில் குதிப்பதற்குச் சித்தமானாள்.

இதே சமயத்தில் அவளுக்குப் பின்புறமிருந்து "அனுபமா! என்று கூப்பிடுவது கேட்டுத் திடுக்கிட்டாள். பின்னே திரும்பிப் பார்த்தாள். உயரமான ஒரு மனிதன் நின்றுகொண்டிருந்தான். அவன் மறுபடி "அனுபமா!" என்றான். குரல் எங்கேயோ கேட்ட குரல் போல் தோன்றிற்று. நினைத்து நினைத்துப் பார்த்தாள் விளங்கவில்லை.

மேதாஸ்

"பாஸ்பரஸ் தைலம்"

(வெளி உபயோகத்திற்கு மட்டும்)

முடக்குவாதம், கீல்பிடிப்பு, சகலவித வலிகள்

இவைகளுக்கு

நிகரற்ற கைகண்ட மருந்து

பிரபல டாக்டர்களும், பொதுஜனங்களும் புகழ்ந்து அத்தாட்சி கொடுத்திருக்கிறார்கள்.

தயாரிப்பவர்கள்:—

K. S. மேதா & கோ.,

மருந்து வியாபாரிகள்,

250, சைனா பஜார் (மாடி), சென்னை.

"அனுபமா!" ஏன் தற்கொலை செய்துகொள்ளவேண்டும்?" என்றான் வந்தவன்.

அனுபமைக்கு எப்பொழுதும் சங்கோசமே கிடையாது. அந்த இரவில் அந்தத் தனிமையான இடத்திலும் மிகுந்த தைரியத்துடன் "நான் தற்கொலை செய்துகொள்ளப் போகிறேனென்று உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்றாள். வந்தவன் இவளுக்குமேல் சமர்த்தன்; "அப்படியானால் குடத்தைக் கழுத்திலே கட்டிக்கொள்ளுவானேன்?"

அனுபமை வாயே திறக்கவில்லை.

வந்தவன் அன்பு ததும்பும் குரலில் "தற்கொலை செய்துகொள்ளுகிறவர்களுக்கு என்ன கதி கிடைக்குமென்று உனக்குத் தெரியுமா?"

"என்ன?"

"என்றென்றைக்கும் நரகம், மீட்சியேயில்லாத நரகம்."

அவள் நடுங்கினாள். ஏதோ ஒரு விதமான பயமுண்டாயிற்று. கழுத்திலிருந்த சுருக்கைத் தளர்த்திக் குடத்தைஅவிழ்த்தாள். பிறகு மெதுவான குரலில், "இந்த உலகத்திலே இருக்க இடமில்லை, அதனால் இறப்பதே நல்லது என்று துணிந்தேன்."

"அனுபமா! நீ மறந்துவிட்டாயா? மறந்திருந்தால் மறுபடி நினைவுமூட்டுகிறேன். ஆறு வருஷங்களுக்கு முன்னால் இதே இடத்தில் ஒரு அபாக்யன் உனக்கு ஆயுள் முழுவதும் தன் இருதயத்திலேயே இடமளிப்பதாகச் சொன்னானே ஞாபகமிருக்கிறதா?"

நாணமிகுதியால் அவள் முகம் சிவந்தது. மெல்லிய குரலில் "ஆம்" என்றாள்.

"ஆனால், இந்த எண்ணத்தை விட்டுவிடு;

என் பெயரைக் களங்கப்படுத்திவிட்டார்கள். அதனால் நான் உயிர்வாழ விரும்பவில்லை."

"இறந்துபோவதனால் களங்கம் அழிந்துவிடுமா?"

"அழிந்தாலும் சரி தூற்றிக்கொண்டே இருந்தாலும் சரி. என் செவிகளில் விழா அல்லவா?"

அனுபமா! நீஎண்ணுவது பிசகு. இறந்துபோவதனால் என்றென்றைக்கும் களங்கம் உன் பெயருடன் அடிபடும். பிழைத்திருந்து பார். வீண்பழி நெடுநாள் நிலைத்திராது"

"ஆனால் எங்கே போய்ப் பிழைப்பேன்"

"என்னுடன் வந்துவிடு"

இப்படித்தான் செய்யவேண்டும். இவர் காலில் விழுந்து என்னை மன்னிக்கவேண்டும் என்று கேட்பேன். பிறகு உங்களிடம் ஏராளமான பொருள் இருக்கிறது பிச்சையாக எனக்குக் கொஞ்சம் பணம் கொடுங்கள். கண்காணுமல் எங்கேயாவது போய் வசிக்கிறேன்' என்று சொல்லவேண்டுமென்று நெஞ்சு துடித்தது. ஆனால் பேச்சுக்கள் வாயினின்றும் எழவில்லை. தொண்டையுடனேயே நின்றுவிட்டன. நெடுநேரத்திற்குப் பிறகு 'இல்லை. நான் வரமாட்டேன்' என்ற வாக்கியம் அவள் வாயினின்றும் எழுந்தது. இந்த வார்த்தைகள் முடியுமுன் அவள் தண்ணீரில் குதித்துவிட்டாள்.

ஃ ஃ ஃ

அவளுக்குப் பிரக்ஞை வந்தபொழுது, தான் மிகவும் அழகாய் அலங்கரிக்கப்பட்ட ஓர்அறையில் கட்டிலின்மேல் படுத்திருந்தாள். அருகில் கவலை தேங்கிய முகத்துடன் உட்கார்ந்திருந்தான் லலிதமோகன்.

அனுபமை கண்களைத் திறந்து மிகவும் மெல்லிய குரலில் "லலிதபாபு! என்னை ஏன் பிழைப்பித்தீர்கள்?" என்றாள்.

லலிதமோகனனுடைய கன்னங்கள் குழிந்தன; இதழ் நுனியிலே இளமுறுவல் அரும்பிற்று.

முற்றிற்று.

(58 பக்கம் தொடர்ச்சி)

அப்துலோ சென்னையில் சென்ட்ரல் ஸ்டேஷனில் டிக்கெட் கலெக்டர் உத்தியோகம் பார்த்து வந்தான். இந்த டிக்கெட் கலெக்டர் உத்தியோகத்திற்குச் சம்பளம் கிடையாது. சில சமயங்களில் உதை கிடைக்கும், அவ்வளவுதான். அதாவது அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. சென்ட்ரல் ஸ்டேஷனில் கூடியிருக்கும் ஜனங்களிடமெல்லாம், "டிக்கெட்" என்று கேட்பான்.

ஒரு நாள் தலைமை டிக்கெட் கலெக்டர் ஸ்டேஷன் புக்கிங்காபீஸிலிருந்து வெளியே வரும்பொழுது அப்துல் அவரிடம் போய்,

"கம் ஆன், டிக்கெட் பிளீஸ்" என்றான்.

அப்துல் நீயா, உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா என்ன?" என்று அவன் ஆச்சரியத்துடன் கேட்டான்.

"கம் ஆன் டிக்கெட் பிளீஸ்" என்றான் அப்துல் மறுபடியும்.

"அப்துல், என்ன முட்டாள் காரியம் செய்தேன். உன்னை இக்கதிக்குக் கொண்டுவந்துவிட்டேனே! அப்துல் என்னை மன்னிப்பாயா?" என்று கண்களில் கண்ணீர் பெருகவேண்டினான் தலைமை டிக்கெட் கலெக்டர். அவன் சொன்னது அப்துலுக்குப் புரியவில்லை.

"டிக்கெட் பிளீஸ்" என்று சொல்லிக்கொண்டே அப்துல் வேறொரு ஆசாமியிடம் போய் டிக்கெட் கேட்க ஆரம்பித்துவிட்டான்.

Edited & Published by N. R. Ramanujan B.A., & Printed by S. Rangaswami, B.A. at The Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

A Product that is India's own.

National Ink

யுத்தம்

என்ற பெயரால், ரசாயனப்
பொருள்களின் அளவு
"நேஷனல் இங்க்"
தயாரிப்பதில் குறைக்கப்
படவில்லை — ஆகவே

நேஷனல் இங்க்

(புளூ பிளாக்)

உங்களுடைய எல்லா தஸ்தவேஜிகளையும் நிரந்தரமாக்குகிறது. பிரகாசமான நீல நிறத்தில் எழுதி, கறுப்பாக மாறும் ஸ்திரமான மைகளில் முதன்மையானது. மற்ற நிறங்களிலும், அளவுகளிலும், எல்லா ஸ்டேஷனர்களிடமும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள்:

ஸ்ரீராம் சாக் & இன்டஸ்ட்ரியல் பாக்டரி

பிர்மன் கோவில் தெரு, கும்பகோணம்,

நியமிக்கப்படாத இடங்களில் ஏஜண்டுகள் தேவை.

ஒலி பரப்பும் கருவிகள்

மாபெரும் கூட்டங்களிலும், சிறந்த சங்கீதக் கச்சேரிகளிலும் ஜனங்கள் யாவரும் கேட்டு அநுபவிக்க ஏற்பாடு செய்யப்படுகின்றன,

★ ★ ★

அவ்விதம் பொதுக் கூட்டங்களையும், சங்கீதக் கச்சேரிகளையும், ஏற்பாடு செய்யும் நண்பர்கள் பொதுஜன திருப்தியைப் பெற-

★ ★

National

நேஷனல் ரேடியோ

ஒலி பெருக்கியை ஏற்பாடு செய்யுங்கள்.

நேஷனல் ரேடியோ சென்ட்ரல்,

7-8, பிர்மன் கோயில் தெரு, கும்பகோணம்.

N. B. எவ்விதமான ரேடியோ சாமான்களுக்கும் ரிப்பேர்களுக்கும் தயவு செய்து எங்களிடம் கலந்து கொள்ளுங்கள்.

Regd. No. M. 4405. CAUVERI.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 AUG 1943
MADRAS

T. S. R.

டி. எஸ். ஆர்.

மூளைக் குளிர்ச்சிக்கும்
கேச வளர்ச்சிக்கும்
நறுமணத்திற்கும்

நிகரற்ற தைலங்கள்

கோகுல் தைலம்
கோ-கோ நட் ஆயில்

ரக ரகமான ஊதுபத்திகளும்
வாசனைத்திரவியங்களும் கிடைக்கும்

சென்னை ஸோல் ஏஜண்டு
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்
திருவல்லிக்கேணி—மதராஸ்

T.S.R. & Co
PERFUMERS
KUMBAKONAM

PRINTED AT THE CAUVERI COLOUR PRESS KUMBAKONAM